பக்கங்கள்: 16 + சூரியகாந்தி 6 = இருபத்திரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 17 ஞாயிற்றுக்கிழமை (29-02-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:95

# கட்டுப்பாடற்ற பகுதி மக்களின் வாக்களிப்பு
# புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன் தொடர்புபட்டது

## கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் தமிழ்ச்செல்வன் நேற்று வலியுறுத்து

கிளிநொச்சி,பெப்ரவரி29

**இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத மக்கள், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும். இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் தொடர்புபட்டிருக்கிறார்கள். எனவே, இது புரிந்துணர்வு உடன்படிக்கையுடனும் சம்பந்தப்பட்ட விடயம் [illegible] விடுதலைப் புலிகள் வலியுறுத்தி உள்ளனர்.**

**கிளிநொச்சியில் நேற்றுத் தன்னைச் சந்தித்துப் பேசிய யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொனட் புருஹொவ்டேயிடம் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இந்தக் கருத்தை வலியுறுத்தினார். புலிகளின் பகுதிகளில் உள்ள மக்கள் வாக்களிப்பதற்கான சில நடைமுறை ஒழுங்குகளை கண்காணிப்புக் குழு மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.**

நேற்று முற்பகல் 10 மணியளவில் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹெலியில் கிளிநொச்சியை வந்தடைந்தார். விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் அவருக்கும் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது. சுமார் ஒரு மணி நேரம் இந்தச் சந்திப்புத் தொடர்ந்தது.

இராணுவக் கட்டுப்பாடற்ற மக்கள் தேர்தலில் வாக்களிக்கும் விடயம் பற்றியே இச்சந்திப்பில் முக்கியமாக ஆராயப்பட்டது. யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து பேணுவது தொடர்பாகவும் பேசப்பட்டது.

சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழச்செல்வன் தெரிவித்ததாவது:-

தேர்தலில் எமது பிரதேச மக்கள் வாக்களிக்கும் நடைமுறை தொடர்பாகச் சில பிரேரணைகளை முன்வைத்துள்ளோம். உரிய முறையில் அவர்கள் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

இந்த விடயத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையும் தொடர்புபட்டுள்ளது. படைத்தரப்பும் எமது தரப்பும் உடன்படிக்கையில் தொடர்புபட்டுள்ளமை போன்று தேர்தலிலும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பூந்தோட்டம் நலன்புரி நிலையம் நேற்றுத் தீயில் எரிந்து நாசமானது

### 115 குடும்பங்கள் நிர்க்கதி நிலையில்

வவுனியா,பெப்.29

வவுனியா, பூந்தோட்டம் அகதிகள் நலன்புரி நிலையத்தில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 11 மண்டபங்கள் எரிந்து சாம்பலாகின. அங்கு வாழ்ந்த 115 குடும்பங்களின் உடைமைகளும் தீயில் எரிந்து நாசமாகின.

நலன்புரி நிலையத்தில் உள்ள மண்டபங்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தனித்தனியே வழங்கப்பட்டிருந்தன .

திடீரென ஏற்பட்ட தீயினால் அங்கு தங்கியிருந்தவர்கள் தமது உடைமைகளை விட்டு பாதுகாப்புத்தேடி வெளியே ஓடினர். மின் ஒழுக்கு காரணமாக ஒரு மண்டபத்தில் தீ ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது. விரைவில் தீ ஏனைய மண்டபங்களுக்கும் பரவியது. (16ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன இன்பருட்டி மீனவரின் சடலம் நேற்று மீட்பு

கரவெட்டி,பெப்.29


இன்பருட்டி கடல் பகுதியில் கடந்த திங்களன்று இந்திய மீனவர்கள் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலின் போது காணாமற்போன இன்பருட்டியைச் சேர்ந்த மீனவரின் சடலம் நேற்றுப் பிற்பகல் 2.15 மணிக்கு மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் காணாமற்போன மீனவரான இரத்தினம் சிவாணந்தன் (வயது-38) என்பவரின் சடலத்தைத் தேடும் பணி மூன்று தினங்கள் மேற்கொள்ளப்பட்டது.

மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் கடற்படையினரும் மேற்கொண்ட தேடுதல்களில் பலன்ஏதும் கிட்டவில்லை.

தொண்டமனாறு கடற்பகுதியில்

(16ஆம் பக்கம் பார்க்க)



**இன்பருட்டிக் கடலில் கடந்த திங்களன்று வடமராட்சி வடக்கு மீனவர்கள் மீது தமிழக மீனவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோர் நடத்திய தாக்குதலில் காணாமற்போன மீனவரின் சடலத்தையே படத்தில் காண்கிறீர்கள்.**

**சடலத்தின் தலை, கழுத்து, வயிறு, கால், கை ஆகிய இடங்களில் ஆழமான வெட்டுக்காயங்கள் காணப்படுகின்றன.**

**இன்பருட்டிக் கடற்கரைக்கு இழுத்துவரப்பட்ட சடலத்தை பெரும் எண்ணிக்கையானோர் நேற்றுப் பார்வையிட்டனர்.**

*(படங்கள்: சி.சுந்தரலிங்கம், கரவெட்டி செய்தியாளர்)*

### அரச கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து வந்தால்

## இராணுவ சோதனையின் பின்னர் 2000 பேரே வாக்களிக்க முடியும்

மட்டக்களப்பு,பெப்.29

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதி மக்களைப் படையினர் சோதனை செய்து வாக்களிக்க அனுமதிக்கும் பட்சத்தில் 2 ஆயிரம் பேர் மட்டுமே வாக்களிக்கும் சந்தர்ப்பத்தைப் பெறுவர் என்று மட்டக்களப்பு மாவட்டப் பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் 79 ஆயிரம் வாக்காளர் உள்ளனர். இராணுவத்தினரின் சோதனையின் பின்னரே அவர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்களெனில் 2 ஆயிரம் பேர் வரையிலானோரே வாக்களிக்க முடியும். (16ஆம் பக்கம் பார்க்க)

### சோதனையில் மாற்றமில்லை

கொழும்பு,பெப்.29

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் இருந்து வரும் வாக்காளர்களைச் சோதனை செய்வதில் எந்த மாற்றமும் இல்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமேத பெரேரா தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் இருந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## சோதனை நிலையத்தை பின்நகர்த்தி முகமாலையில் வாக்குச் சாவடிகள்

### யாழ். அரச அதிபர் யோசனை தெரிவித்துக் கடிதம்

யாழ்ப்பாணம்,பெப்.29

முகமாலையில் இராணுவச் சோதனை நிலையத்தைப் பின்நகர்த்தி அங்கு வாக்களிப்பு நிலையங்களை அமைக்க ஏற்பாடு செய்யும்படி தேர்தல் ஆணையாளர் மற்றும் படைத்தரப்பினரை யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் கேட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர், இராணுவத்தளபதி ஆகியோருக்கும் இது தொடர்பாக அவர் கடிதம் எழுதியுள்ளார்.

கிளிநொச்சி, மருதங்கேணி ஆகிய பகுதியைச் சேர்ந்த வாக்காளர்கள் வாக்களிக்க 60 வாக்களிப்பு நிலை

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழருக்கு சமஷ்டித் தீர்வு பெற்றுத்தர ஐ.தே.முன்னணி நடவடிக்கை எடுக்கும்

### பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.29

ஐக்கிய இலங்கைக்குள் நிபந்தனைகளுடன் கூடிய சமஷ்டி ஆட்சி ஒன்றைத் தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க தமது கட்சி நடவடிக்கை எடுக்கும் என்று ஐ.தே.முன்னணித் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஹக்காப்பொலவில் நேற்று நடந்த பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் நிபந்தனைகள் இன்றிப் பேச்சு நடத்தப்படுமானால் அது குறித்து நாட்டு மக்களுக்கு அறிவிக்கவேண்டும் என்று சுதந்திரக் கூட்டணியிடம் கேட்டுள்

(16ஆம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்
யாழ். மாவட்ட வேட்பாளர்
திரு. செல்வராஜா கஜேந்திரன்
(யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர்)
X 10
யாழ். மாணவர் சமூகம்.
(29401)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்வானில் மனித சங்கிலிப் போர் சீனாவின் நடவடிக்கைக்கு எதிராக!

## பல லட்சக்கணக்கான மக்கள் கைகளைக் கோர்த்து நின்று கோஷம்



பாங்கொக்,பெப்.29

தாய்வானில் நேற்று பல லட்சக் கணக்கான மக்கள் வீதியில் ஒன்று திரண்டு மனிதச் சங்கிலிப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

தமது நாட்டை இலக்கு வைத்து சீனா ஏவுகணைகளை நிறுத்தி வைத்திருப்பதற்குக் கண்டனம் தெரிவித்தும், பிரதமர் சென் ஷுய்-பெய்னுக்கு ஆதரவு தெரிவித்தும் இந்த மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தப்பட்டது.

ஒருவரின் கைகளை மற்றவருடன் கோர்த்துக் கொண்டு சுமார் 500 கிலோ மீற்றர் நீளத்துக்கு அவர்கள் மனிதச் சங்கிலியாக இணைந்திருந்தனர். பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டனர்.

தைவானின் சமாதான நினைவு நாளில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

தைவான் தனது ஒரு மாகாணம் என்று சீனா கூறிவருகின்றது. ஆனால், அமெரிக்காவின் ஆதரவுடன் தைவான் சுதந்திர நாடாக இயங்கிவருகின்றது. அந்த நாடு சுதந்திரப் பிரகடனம் ஏதாவது செய்தால் அதன் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று சீனா எச்சரித்து வருகின்றது. அதற்கு வசதியாகவே அது தைவானை இலக்கு வைத்துத் தனது ஏவுகணைகளை நிறுத்தி வைத்துள்ளது.

நேற்று நடந்த போராட்டம், தைவானில் அதிபர் தேர்தல் நடக்க இருப்பதற்கு மூன்று வாரங்கள் இருக்கையில் இடம்பெற்றுள்ளது. இது பிரதமருக்கான ஆதரவை அதிகரிக்கச் செய்யும் என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். மார்ச் 20ஆம் திகதி அங்கு அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது.

(ம)

### பெண்களிடம் தோற்றுப்போனது வயக்கரா

லண்டன்,பெப்.29

பாலியல் உணர்வுகளைத் தூண்டும் என்ற பரபரப்பான விளம்பரத்துடன் விற்பனைக்கு வந்த வயக்கரா மாத்திரைகள் பெண்கள் விடயத்தில் தோற்று விட்டன என்று ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

பெண்களிடம் பாலியல் உணர்வுகளைத் தூண்டும் விடயத்தில் வயக்கரா மாத்திரைகள் பெரியளவில் பயனைத் தரவில்லை என்கின்றது அமெரிக்க மருந்துப் பரிசோதனை நிலையம்.

கடந்த 8 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட நீண்ட ஆய்வுகளின் பின்னர் இந்த முடிவுக்குத் தாம் வந்துள்ளனர் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வயக்கரா ஆண்களிடம் பாலியல் உணர்வைத் தூண்டுவதில் உலகப் புகழ்பெற்ற மாத்திரைகளில் ஒன்றாக விளங்குகின்றது.

ஆனால், 1996இல் இருந்து தாம் 3ஆயிரம் பெண்களை சோதனைக்கு உட்படுத்தியதாகவும் அவர்களில் இந்த மாத்திரை எந்த விதமான மாற்றங்களையும் உண்டாக்கவில்லை என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

(ம)

### எய்ட்ஸ் நோய்க்கு புதிய சிகிச்சை முறை

உயிர்க்கொல்லியான எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய சிகிச்சை முறைகளை அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக் கழக பேராசிரியர் பால் லூசியோ கண்டுபிடித்துள்ளார்.

அவரது ஆய்வின் மூலம் எய்ட்ஸ் நோயைத் தடுக்க புதிய சிகிச்சை முறைகளும் அந்த நோய் ஏற்படாமல் தடுப்பதற்கான மருந்தும் கண்டுபிடிப்பதற்கான வழி ஏற்பட்டள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

குரங்குகளிடம் எய்ட்ஸ் நோய் பரவுவதில்லை என்றும் எச்.ஐ.வி. கிருமியை எதிர்க்கும் ஒருவகைப் புரதம் அவற்றிடம் இருக்கின்றன என்றும் பேராசிரியர் லூசியோ கண்டுபிடித்துள்ளார்.

குரங்குகளின் செல்களில் எச்.ஐ.வி. கிருமிகளை நுழைத்ததும் அவற்றில் உள்ள 'டிரிம் - 5 ஆல்பா' என்ற புரதம், கிருமிகளை எதிர்த்து போராடுவதுடன் அவை பல்கிப் பெருகாமலும் இரத்தத்துடன் கலந்து போகாமலும் தடுக்கின்றது.

மனிதர்களிடமும் இந்த 'டிரிம் - 5 ஆல்பா' புரதம் உள்ளது. ஆனால் அவை குரங்குகளுக்கு இருப்பது போன்று அவ்வளவு சக்தி உடையவையாக இல்லை. இந்தப் புரதத்துக்கு அதிக சக்தி கிடைக்கும் வகையில் மருந்துகளைக் கொடுத்தால் அவற்றை எச்.ஐ.வி. கிருமிகளுக்கு எதிராகப் போராட வைக்க முடியும் என்று லூசியோவின் ஆய்வு தெரிவிக்கின்றது. இதற்காக புதிய மருந்து ஒன்றையும் அவர் கண்டறிந்துள்ளார்.

இப்போது இந்த மருந்தால் பக்க விளைவுகள் ஏற்படுமா? மனிதனின் ஏனைய கலங்கள் பாதிக்கப்படுகின்றனவா என்பன பற்றி மேலதிக ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. (ம)

# பின்லேடன் கைதானார் எனச் செய்தி: அமெரிக்க, பாக். அதிகாரிகள் மறுப்பு!

வாஷிங்ரன்,பெப்.29

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லைப் பிரதேசத்தில் இருந்து சர்வதேசத் தீவிரவாதியான ஒஸாமா பின்லேடன் கைதுசெய்யப்பட்டார் என்று ஈரானிய வானொலி நேற்று அறிவித்ததைத் தொடர்ந்து உலகெங்கும் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால், அந்தச் செய்தியை பாகிஸ்தான் மற்றும் பென்ரகன் அதிகாரிகள் திட்டவட்டமாக மறுத்துள்ளனர்.



ஒஸாமா பின்லேடனிடம் இருந்து அடிக்கடி ஒளிப்பதிவு நாடாக்கள் வெளிவருவதைத் தொடர்ந்து அவர் பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லைப் பிரதேசத்தில் உள்ள மலைக் குகைகளில் எங்காவது மறைந்திருக்கக் கூடும் என்று அமெரிக்க மற்றும் பாகிஸ்தானிய அதிகாரிகள் கருதுகின்றனர்.

இதனை அடுத்து கடந்த வாரம் பாகிஸ்தானியப் படையினர் இந்தப் பிரதேசங்களில் தேடுதல்களையும் ஆரம்பித்து இருந்தனர்.

இந்த நிலையில் ஈரானிய அரச வானொலி திடீரென நேற்று ஒஸாமா பின்லேடன் பாகிஸ்தானிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார் என்று அறிவித்தது.

குறிப்பிட்ட காலமாகவே பின்லேடன் பாகிஸ்தானிய மற்றும் அமெரிக்க அதிகாரிகளின் காவலில் இருக்கின்றார் என்று இரண்டு வட்டாரங்களில் இருந்து கிடைத்த தகவல்களைக் கொண்டே தாம் இந்தச் செய்தியை வெளியிட்டார் என்று ஈரானின் அரச வானொலியின் பஸ்துன் மொழிச் சேவையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

"பின்லேடன் நீண்ட காலத்துக்கு முன்னரே கைதுசெய்யப்பட்டு விட்டார். எனினும் தனது அதிபர் தேர்தல் பிரசாரத்துக்கு அதனைப் பயன்படுத்துவதற்காக அதிபர் புஷ் இந்த விவகாரத்தை உடனடியாக வெளிப்படுத்தாமல் உள்ளார்" - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஈரானிய ஏனைய மொழிச் சேவைகளும் ஈரானிய தொலைக் காட்சியும்கூட இந்தச் செய்தியை வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈரானிய வானொலியின் இந்தச் செய்தியை பாகிஸ்தான் அதிகாரிகளும் அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகன் அதிகாரிகளும் திட்டவட்டமாக நிராகரித்தனர். பின்லேடன் எங்கிருக்கிறார் என்ற தகவலே தமக்குத் தெரியாது என்கிறார்கள் பாகிஸ்தானிய அதிகாரிகள்.

பின்லேடன் பிடிக்கப்பட்டார் என்பது தொடர்பான எந்தச் செய்தியையும் தான் கேள்விப்படவே இல்லை என்று தெரிவித்தார் ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கப் படையினர் சார்பாகப் பேசவல்ல அதிகாரியான லெப்டினன்ட் ஜெனரல் பர்ஜன் கில்பேர்ட்டி.

(ம)



ஹெய்ட்டி நாட்டில் வன்முறை தொடர்ந்துகொண்டே இருக்கிறது. தீவிரவாதிகள் நாட்டின் தலைநகருக்கு மிக நெருக்கமாக வந்துவிட்டனர் எனக் கூறப்படுகிறது. வன்முறையில் இறந்த ஒருவரின் சடலம் வீதியில் கிடப்பதைக் காணலாம்.

# புஷ் பட்ஜெட்டால் அமெரிக்காவில் 2.75 லட்சம் கோடி டொலர் பற்றாக்குறை

வாஷிங்ரன்,பெப்.29

அமெரிக்க அதிபர் புஷ் 2005 ஆம் ஆண்டுக்கு தாக்கல் செய்துள்ள பட்ஜெட் எதிரொலியாக அடுத்த 10 ஆண்டுகளில் 2.75 லட்சம் கோடிக்கு (2.75 டிரில்லியன் டொலர்) பற்றாக்குறை உருவாகும் என்று நாடாளுமன்ற பட்ஜெட் அலுவலகம் கருத்துக் கூறியுள்ளது.

ஆனால், இந்த கணிப்பு வெறும் ஊகத்தின் அடிப்படையிலானது என்று அதிபர் மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பற்றாக்குறையை மறைக்க புஷ் நிர்வாகம் முயற்சிப்பதாக ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

கடந்த 2ஆம் திகதி 2.4 டிரில்லியன் டொலர் பட்ஜெட்டை தாக்கல் செய்தார் புஷ்.

(ம)

# உகண்டா தீவிரவாதிகள் 30 பேர் உயிரிழப்பு என்கிறது இராணுவம்

உகண்டாவின் வடக்குப் பகுதியில் தீவிரவாதிகள் 30 பேரைத் தாம் சுட்டுக் கொன்றுள்ளனர் என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். எல்.ஆர்.ஏ. தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களே கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் கிராமம் ஒன்றினுள் நுழைந்து அங்கிருந்த பொது மக்களை வெட்டியும் சுட்டும் எரித்தும் கொலைசெய்த தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் மீதே இராணுவம் தாக்குதல் நடத்தியது என்று அதன் பேச்சாளர் தெரிவித்தார். கடந்த வாரம் இடம்பெற்ற சம்பவத்தில் தொடர்புடைய தீவிரவாதிகள் சிலரும் நேற்றை தாக்குதலில் கொல்லப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் இடம்பெற்ற மிலேச்சத்தனமான சம்பவத்தில் 200இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். எனினும் 80 பேரே கொல்லப்பட்டனர் என்று அரச புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை இராணுவத்தினர் முடுக்கி விட்டுள்ளனர். படர் மாவட்டத்தில் வியாழனன்று இடம்பெற்ற மோதலிலேயே தாங்கள் 30 தீவிரவாதிகளைக் கொன்றனர் என்று இராணுவத்தினர் தெரிவித்தனர். (ம)

# பலஸ்தீனர்களின் தாக்குதலில் இரு இஸ்ரேலியர்கள் பலி

ஜெருசலேம்,பெப்.29

மேற்குக் கரைப் பகுதியில் பலஸ்தீன ஆயுததாரிகள் என்று சந்தேகிக்கப்படுவோர் நடத்திய தாக்குதலில் இரு இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர்.

பலஸ்தீன நகர் ஒன்றில் இருந்து இஸ்ரேலிய நகரை நோக்கிச்சென்று கொண்டிருந்த காரில் பயணித்துக் கொண்டிருந்தவர்கள் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தினர். காரில் ஆணும் பெண்ணும் இருந்தனர்.

மேற்குக் கரையிலும் காஸாவிலும் பொதுவாகவே இஸ்ரேலிய மோட்டார் வாகனப் பயணிகள் பலஸ்தீன ஆயுததாரிகளின் இலக்காகி வருகிறார்கள் என்று அங்குள்ள பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

காஸாப் பகுதியில் இஸ்ரேலியப் படையினரின் ஜீப் ஒன்றின் அருகில் பலஸ்தீனத் தற்கொலையாளி ஒருவர் தன்னைத் தானே வெடிக்க வைத்துக் கொண்ட சம்பவம் இடம்பெற்ற சிறிது நேரத்தின் பின்னர் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தற்கொலைத் தாக்குதலில் இஸ்ரேலியர்களுக்குச் சேதம் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

இஸ்ரேலியர்கள் சுடப்பட்ட சம்வத்தின் போது அங்கிருந்து ஆயுததாரிகளைக்கொண்ட வாகனம் ஒன்று புறப்பட்டுச் சென்றதைத் தாம் கண்டதாக நேரில் கண்டவர்கள் சிலர் தெரிவித்துள்ளனர். (ம)

### எதிர்க்கட்சிக்கு ஆதரவு

லண்டன்,பெப்.29

பிரிட்டனில் ஆளும் தொழிலாளர் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் மக்களிடம் இருக்கும் ஆதரவு குறித்து 'டெய்லி கிராப்' என்ற பத்திரிகை கருத்துக் கணிப்பு நடத்தியது. இதில் எதிர்க்கட்சிக்கு ஆதரவாக பெரும்பான்மையான மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆளும் தொழிலாளர் கட்சிக்கு 34 சதவீதமானவர்களும் எதிர்க்கட்சியான கென்சர்வேட்டிவ் கட்சிக்கு 39 சதவீதமானவர்களும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

எதிர்க்கட்சிக்கு 5 சதவீதமானோர் அதிகமாக ஆதரவு தெரிவித்த போதும் எதிர்க் கட்சித் தலைவர் மைக்கேல் ஹோவர்ட்டைவிட பிரதமர் ரொனி பிளயர் தான் சிறந்தவர் என்று பெரும்பான்மையான பிரிட்டிஷ் மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ம)

# பாகிஸ்தான் படைகள் சுட்டதில் எல்லைப் பகுதியில் 11பேர் பலி!

இஸ்லாமாபாத்,பெப்.29

ஆப்கானிஸ்தானுக்கு அருகில் உள்ள சர்ச்சைக்குரிய தெற்கு வஸிரிஸ்டான் பிரதேசத்தில் பாகிஸ்தானியப் படைகள் சுட்டதில் 11 பொது மக்கள் உயிரிழந்தனர்.

தீவிரவாதிகள் தம்மீது தாக்குதல் நடத்தியதன் பின்னரே தாம் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் உள்ளூர் வாசிகளும் ஆப்கானிஸ்தானியர்களும் அடங்கியிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பிரதேசத்திலும் ஆப்கானிஸ்தான் எல்லையோரம் உள்ள ஏனைய பிரதேசங்களிலும் இந்த வாரத்தில் பாகிஸ்தானியப் படைகள் புதிய இராணுவ நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்திருந்தன. அல் கெய்டா மற்றும் தலிபான் தீவிரவாதிகளைத் தேடி இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

நேற்றைய சம்பவம், ஆயுதங்கள் தரித்தவர்கள் இரண்டு அல்லது மூன்று வாகனங்களில் வந்து இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்த முயன்றதை அடுத்து ஏற்பட்டது என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். பதில் தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட மேலும் 6 பேர் காயமடைந்தனர் என்றும் அவர் கூறினார்.

இறந்தவர்களில் பலர் துப்பாக்கிச் சண்டைக்கு இடையில் அகப்பட்ட பொதுமக்களாவர். ஏனையோர் தீவிரவாதிகள் என்றார் இராணுவப் பேச்சாளர்.

எல்லைப் பிரதேச மலைகளில் காவல் இருக்கும் பாகிஸ்தானியப் படைகள்




இந்தச் சம்பவம் தொடர்பாகப் 16 பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலைப் பாகிஸ்தானியப் படையினர் தவறுதலாக இனங்கண்டதன் பேரில் நடத்தினர் என்று அப்பகுதியில் வசிக்கும் பழங்குடியினத் தலைவர்கள் கூறுகின்றனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியத்தின் எதிர்காலத்தை நிச்சயிக்கும் தேர்தல் வருகிறது

## ஆதரவாளர்கள் மத்தியில் முன்னாள் எம்.பி. உரை



சங்கானை,பெப்.29

தமிழ்த் தேசியத்தின் எதிர்காலத்தை நிச்சயிக்கும் தேர்தலாக எதிர்வரும் பொதுத்தேர்தல் அமையும். அதற்கான நாளும் நெருங்குகிறது.

- இவ்வாறு கூறினார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ்.

வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த தமது ஆதரவாளர்களின் மத்தியில் உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

எமது கூட்டமைப்பு, 'நாங்கள் எங்கள் வீட்டிற்குச் செல்வதற்கு, நீங்கள் உங்கள் வீட்டிற்குப் போங்கள்' என்று இம்மாவட்டத்தில் உள்ள பாதுகாப்பு படையினருக்கு அறைகூவல் விடுத்திருக்கின்றது. அப்படி அவர்களை, அவர்கள் வீட்டிற்குச் செல்லவைப்பதாயின் எமது கூட்டமைப்பின் வீட்டிற்கு நேரே உங்கள் வாக்குகளை அளியுங்கள்.

அளிக்கின்ற ஒவ்வொரு வாக்கையும் எங்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு என்று எண்ணாமல், தமிழ்த்தேசியம் என்ற கொள்கைக்காகப் பயன்படுத்ததுங்கள்.

இது ஒரு கருத்துக்கணிப்புத் தேர்தலாகும். சர்வதேசமே இந்தத்தேர்தலை அக்கறையுடன் கவனிக்கின்றது. தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் புலிகள்தான். புலிகளின் ஆயுத சமபலம், அரசியல் பலம் என்பவற்றுக்குத் தமிழ்மக்களின் ஆதரவுப் பலமும் துணை நிற்கின்ற செய்தியைச் சர்வதேசம் எங்கும் எதிரொலிக்கின்ற வகையில் இத்தேர்தலை நாம் எண்ணியுள்ளோம். அதற்கான ஒவ்வொருசெயற்பாடுகளையும் நாம் செய்தாக வேண்டும்.

வாக்காளர் ஒவ்வொருவரும் தனது வாக்கு வீணாகாத வகையில் பார்த்துக்கொள்ளவேண்டும். தேர்தலையே சந்திக்காத புதுவாக்காளர்கள் எம் மத்தியில் உள்ளார்கள். அவர்களுக்கும், தேர்தலின் நோக்கத்தை தெளிவாக்கவேண்டிய பொறுப்பு கற்ற சமூகத்திற்கு உண்டு.

தேர்தல் நடைமுறைகளின்படி கட்சிக்கு அளிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கையின் வீதத்திலேயே அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட உள்ளனர். எமது கூட்டமைப்பின் அங்கத்தவர்கள் ஒட்டுமொத்தமாகத் தெரிவுசெய்யப்படவேண்டுமாயின் வாக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும்.

நம்மை எதிர்த்து நிற்பவர்கள் தேர்தலிலே தோற்கடிக்கப்படவேண்டும். தமிழ்த்தேசியம் பாதுகாக்கப்படவேண்டும். ஒரேகுரலில் அதனை நாம் சர்வதேசத்திற்கோ அல்லது சிங்களப் பேரினவாதிகளுக்கோ நிரூபித்துக்காட்டவேண்டுமாயின், அதனைச் செயற்படுத்துவது உங்களிலேதான் தங்கியுள்ளது - என்று கூறினார் அவர். (எ-29)

### கலந்துரையாடல்

கைதடி,பெப்.29

எதிர்வரும் பொதுத் தேர்தல் சம்பந்தமான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்ரவிராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-75)

# வாக்காளர் அட்டைகளைப் பதிவுசெய்யும் பணிகள் திருகோணமலையில் ஆரம்பம்

- திருகோணமலை மாவட்ட செய்தியாளர் -

திருகோணமலை,பெப்.29

திருகோணமலையில் வாக்காளர் அட்டைகளைப் பதிவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பண்டாரமாப்பா கூறினார்.

இதற்கென மேலதிக ஊழியர்கள சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

இதுவிடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் வாக்காளர் அட்டைகளை வாக்காளர்களுக்கு அனுப்பிவைக்கும் வகையில் அவை உரிய தபால் நிலையங்களிடம் கையளிக்கப்படும்.

வாக்குப் பெட்டிகளைச் சீரமைக்கும் பணிகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாலாயிரம் ஊழியர்கள் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். தேர்தல் பணிக்கென அரச திணைக்களங்களிலிருந்து வாகனங்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரச திணைக்களங்களிலிருந்து பெறப்படும் வாகனங்கள் போதாத பட்சத்தில் தனியார் வாகனங்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் வாக்களிக்கும் வகையில் இராணுவ சூனியப் பிரதேசத்தில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை அமைப்பது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு வருகின்றோம்.

இந்த மாவட்டத்திலிருந்து நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் வகையில் 10 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் ஆறு சுயேச்சைக் குழுக்களின் சார்பில் 112 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் 25 வேட்பாளர்கள் தமிழர்கள், 47பேர் முஸ்லிம்கள், சிங்களவர்கள் 40 பேர் என்றும் அவர் கூறினார். (எ)

# மிதிவெடியகற்றுவதற்கென அள்ளப்பட்ட மண்ணை உரியவர்கள் மீளப் பெற்றுக்கொள்வதற்கு வசதி

## மிதிவெடி செயற்பாட்டு அலுவலக அதிகாரி தெரிவிக்கிறார்

யாழ்ப்பாணம்,பெப்.29

மிதிவெடியகற்றும் குழுவினரால் மிதிவெடியகற்றுவதற்காகப் பொதுமக்களின் காணிகளிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட மண்ணை உரியவர்கள் மீண்டும் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். செயலகத்தில் உள்ள மிதிவெடி செயற்பாட்டு அலுவலக அதிகாரி எல்மோ ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதென அடையாளம் காணப்படும் இடங்களில் மிதிவெடியகற்றும் நிறுவனம் மண்ணை எடுத்துச்சென்று வெளியான பிரதேசம் ஒன்றில் வைத்து இயந்திரம் மூலம் மிதிவெடிகளைச் செயலிழக்கச் செய்கின்றது.

அதன் பின்னர் அள்ளிச்செல்லப்பட்ட மண் ஓர் இடத்தில் தனித்தனியே குவித்து வைக்கப்படுகிறது.

தனியார் காணிகளில் எடுத்துச் செல்லப்பட்ட மண்ணை அதன் உரிமையாளர்கள் சிலர் தமக்குத் தேவையில்லையெனத் தெரிவித்துவிட்டனர்.

இந்த நிலையில் திருநெல்வேலி, கலட்டி மற்றும் சங்கத்தானை ஆகிய இடங்களில் மக்களின் காணிகளில் இருந்து எடுத்துச்செல்லப்பட்ட மண் காக்கை தீவுப் பிரதேசத்தில் குவிக்கப்பட்டுள்ளது

உரியவர்கள் வந்து யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தில் விண்ணப்பித்து மண்ணைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை - காக்கைதீவில் கொட்டப்பட்டுளள மண்ணை யாழ்.மாநகரசபையின் குப்பைக் கழிவுகளை மூடுவதற்குப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான அனுமதியை மாநகர சபையிடம் கோரியுள்ளோம்.

- இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார். (ஐ-8-7)

## வவுனியாப் பாடசாலைகளில்

# மாணவர் இடைவிலகலுக்கு காரணம் அறிய ஆய்வு

வவுனியா,பெப்.29

வவுனியா மாவட்டத்தில் பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய 239 மாணவர்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சிறுவர் நலத்திட்டத்தின் கீழ் அண்மையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர்.

இதன்போது அவர்கள் இடைவிலகியமைக்குப் பதினொரு விடயங்கள் காரணமாக அமைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று கழகத்தின் வவுனியா மாவட்டப் பணிப்பாளர் தி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

பிறப்புச் சான்றிதழ் இல்லாமை, கற்றல் உபகரணங்கள் இல்லாமை மற்றும் வலுவிழந்தோர் இல்லங்களில் இணைக்கப்படவேண்டியோர், சிறுவர் இல்லங்களில் இணைக்கப்படவேண்டியோர், உளவியல் ஆலோசனை பெறவேண்டியோர் ஆகிய காரணங்களால் இவர்கள் இடைவிலகி இருப்பது தெரியவந்துள்ளது.

இவர்களில் 61 மாணவர்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனத்தின் உதவியுடன் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன 15 மாணவர்கள் மீளவும் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கென வவுனியா மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை புனர்வாழ்வுக் கழகம் நாடியுள்ளது. (ஐ-10)

# இளங்கலைஞர் மன்ற இசைவிழாவின் ஒன்பதாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.29

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் வருடாந்த இசைவிழாவின் ஒன்பதாம் நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றிய விவரம் வருமாறு:-

மாலை 4 மணிக்கு ரி.சிவதாஸ், ஆர்.சிவகுமார் குழுவினரின் மங்கள இசை, 5 மணிக்கு இளங்கலைஞர் மன்ற மாணவர்களின் குழுப் பாடல், 5.15 மணிக்கு ஜனனி நல்லைநாதனின் பாட்டுக்கச்சேரி, 5.45 மணிக்கு கொக்குவில் கலாபவன மாணவிகளின் புஷ்பாஞ்சலி, 5.55 மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனின் உரை.

மாலை 6.05 மணிக்கு இசைவிழாவையொட்டி நடத்தப்பட்ட இசைப்போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில் வழங்கல், 6.35 மணிக்கு பொன். ஸ்ரீவாமதேவனின் இசைக்கச்சேரி. இரவு 7.35 மணிக்கு ஆர்.இராதாகிருஷ்ணன், சைந்தவி இராதாகிருஷ்ணன் ஆகியோரின் வயலின் இசை, 8.35 மணிக்கு கொக்குவில் கலாபவன மாணவிகளின் பரத நாட்டியம் என்பன இடம்பெறும். (ஐ-10)

# இன்றைய நிகழ்வுகள்

வலி.தென்மேற்கு,பெப்.29

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட இறுதிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம அதிதியாக உடுவில் கோட்டக்கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் கலந்துகொள்வார். (ஐ-10-135)

★ ★ ★

வலி.தென்மேற்கு,பெப்.29

அரசாங்க மருந்துக் கலவையாளர் சங்க யாழ். மாவட்டக் கிளையின் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ்.நகரிலுள்ள சுகாதாரசேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளைத் தலைவர் ரி.உருத்திரா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சம்பள முரண்பாடுகள் பற்றியும், இதர விடயங்கள் பற்றியும் ஆராயப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளது. (ஐ-10-135)

★ ★ ★

உச்சில் அம்பாள் அறநெறிப் பாடசாலையின் ஓராண்டு பூர்த்தியும் கலைவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணிக்கு பாடசாலை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலாளர் க.கனகரத்தினமும் சிறப்புவிருந்தினராக வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளையும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-10-70)

★ ★ ★

கோப்பாய் கலைவாணி கல்வி நிறுவனத்தின் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிறுவன இயக்குநர் சி.சிவரூபன் தலைமையில் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய சிதம்பரப்பிள்ளை அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் க.வெங்கடாசலம் கலந்துகொள்ளவுள்ளார். (எ-10)

# மின்னியல் சாதனம் கிடைக்கும்

வலிகாமம் தெற்கு,பெப்.29

யாழ்ப்பாண மாவட்டத்தில் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பாவனைக்கென பாலில் உள்ள கொழுப்பு வீதத்தைக் கண்டறியக் கூடிய நவீன மின்னியல் சாதனம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர் எஸ்.யோகராசா தெரிவித்துள்ளார்.

கொள்வனவு செய்யப்படும் பாலின் தரத்தை நிர்ணயம் செய்து கொள்வதற்கும் தரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் இந்த இயந்திரம் பயன்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஒரு லட்சத்து 30ஆயிரம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள இந்த இயந்திரத்தின் மூலம் பாவனையாளர்களுக்குத் தரமான பாலை வழங்கிச் சேவையாற்றுவதே இதன் நோக்கம் எனவும் பொதுமுகாமையாளர் தெரிவித்தார். (ஐ-152)

தவறவிடாதீர்கள்!
இதோ ஒரு நற்செய்தி!
உதயன் வழங்கும் அரிய விளம்பர சேவை!
உதயனில் பிரசுரிக்கப்படும்
உங்கள் குடும்ப/தனிப்பட்ட விளம்பரங்கள்
அதே நாளில்
'சுடர்ஒளி' நாளிதழ் மூலம் இலங்கையின்
எப்பாகத்திலும் உள்ள அனைவரையும்
சென்றடைய...
அதற்கான மேலதிக கட்டணம்
20% மட்டுமே!
மேலதிக விவரங்களுக்கு:
உதயன்
விளம்பரப் பிரிவு,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021222 3837, 2030, 2083

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
11
.
03
.
1929



உதிர்வு
25
.
02
.
2004

## அமரர் நல்லதம்பி சுப்பிரமணியம்

(பாய்க்கடை மணியம்)

கடந்த 25.02.2004 புதன்கிழமை காலமான யாழ்ப்பாணம் மேற்கு மார்க்கெட் ஐக்கிய நாணய சங்க முன்னாள் தலைவரும் மணிகரன் ஸ்ரோஸ் உரிமையாளரும் ஆகிய நல்லதம்பி சுப்பிரமணியம் அவர்களின் திடீர் மரணச் செய்தியினால் துயருற்றிக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

யாழ்ப்பாணம் மேற்கு மார்க்கெட்
வெற்றிலைக் கடை, பாய்க்கடை
வர்த்தகர்கள்.

(29063)(31-16-17)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசரத்தினம் நாகமுத்து

காளிகோவிலடி, கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், ஸ்ரேஷன் றோட், வயிரவப்புளியங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் நாகமுத்து 27.02.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் நாகராசா(வத்தளை), அங்கமுத்து(பின்லாந்து), தர்மராணி (கனடா), தங்கராசா(வர்த்தகர், வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் மணி (வத்தளை), சாரதாம்பாள்(பின்லாந்து), செல்வகுமாரன்(கனடா), யோகேஸ்வரி (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற கந்தையாவின்(பூநகரி, நாகபடுவான்) அன்புச் சகோதரியும், புனிதவதியின் (இராசாத்தி - நாகபடுவான்) அன்பு மைத்துனியும் வத்தளையில் வசிக்கும் சுரேஸ், ரமேஸ், சூட்டி(கனடா), இந்துமதி, பாலவிஜித்(கனடா), பின்லாந்தில் வசிக்கும் மணிசேகரன், பானுமதி, ஸ்ரீமதி, கனடாவில் வசிக்கும் சசிதரன், யுதாகரன், ஜீவிதா, ஹரிகரன் மற்றும் மயூரதன் (வவுனியா) மிருசளா, ஜெயப்பிரதா (வவுனியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திவியா, திவ்யா, கவிசாந்த், அபிசாத்,விதுஷன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.02.2004) ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேப்பங்குளம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*46, ஸ்ரேசன் றோட்,*
*வயிரவப்புளியங்குளம்,*
*வவுனியா.*

(29054) (16-17)

தகவல்:
இ.செல்வநாயகம்
(மருமகன்)

## கலந்துரையாடல்

வலிகாமம் பிரதேசத்துக்கு உட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு அளவெட்டி மகாசபை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சங்கானை, சண்டிலிப்பாய், கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு 'உட்பட்ட அனைத்துப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களையும் கலந்துகொள்ளும்படி வலிகாமம் முன்பள்ளி ஆசிரியர்களின் சமாசம் வேண்டியுள்ளது.

(3-86)

## காணி தேவை


கொக்குவில் கிழக்கற்கு உட்பட்ட பிரதேசத்துக்குள் ரூபா 5 லட்சத்துக்குட்பட்டதான பெறுமதியான வெற்றுக் காணி உடனே தேவை. பணம் உடனடியாக வழங்கப்படும்.

*தொடர்பு:-*
Dr.T.குலசிங்கம்,
நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். T.P 0777 110124

(29061)(38-15-17)


## தேவை


1. கணக்காளர்
(ஆங்கில அறிவு அவசியம்)
2. அச்சிடுதல் பகுதி பணியாளர்
உடன் விண்ணப்பிக்கவும்.

140, பலாலி வீதி,
பரமேஸ்வராச்சந்தி,
(பெற்றோல் செற் முன்பாக)
யாழ்ப்பாணம்.
222-2478


## தேவை


கொக்குவிலில் இயங்கும் தொலைத்தொடர்பு சேவை நிலையத்திற்குத் தொலைத் தொடர்பு சேவையிலும், போட்டோப் பிரதி எடுப்பதிலும் அனுபவம் உள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை.

தமது சுயவிவரத்துடன்
உடன் விண்ணப்பிக்கவும்.
வி.இல.2183,
மே/பா உதயன்

(29057)(37-16-17)


## கொழும்பில் தங்குமிடவசதி


தொழில்புரியும் பெண்கள் பாதுகாப்புடன் தங்குவதற்கு கொழும்பில் அறைகள் வசதியுடன் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
V.S.ரமேஸ்
0776-206674

(29056)(37)


# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் மாணிக்கதியாகராஜா



நல்லூர், மூத்த விநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மாணிக்கதியாகராஜா (27.02.2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் மயில்வாகனம் தங்கம் ஆகியோரின் அன்பு மகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் தங்கராஜா - சுந்தரத்தின் பாசமிகு சகோதரனும் புவனேஸ்வரி, விமலாதேவி (இந்தியா), சிவராஜா (பிரான்ஸ்), சிமித்திரா (லண்டன்), இராமச்சந்திரன் (பிரான்ஸ்), மனோகரன் (பிரான்ஸ்), வசந்தா, வனிதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தகப்பனும் செல்லத்துரை, கயிலாசநாதர் (இந்தியா), வேவி (பிரான்ஸ்), செல்வராஜா (லண்டன்), அழகரத்தினம் (பிரான்ஸ்), தாமரைச்செல்வி (பிரான்ஸ்), மகேஸ்வரன் (லண்டன்), மகேந்திரன் (பிரான்ஸ்), பிச்சேஸ்வரி - பரமானந்தம் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுமதி - உதயகுமார், காலஞ்சென்ற சுதாநிதி (கனடா) மற்றும் சுதர்சன் - தர்மப்பிரியா (பிரான்ஸ்), துவாரகா (மாணவி, யா/வேம்படி மகளிர் கல்லூரி), சுஜிதா - சுதர்சன் (லண்டன்), சுஜிபா - சுமங்கலா (பிரான்ஸ்), சுஜிராஜன் (லண்டன்), வனஜா, வவிதா (இந்தியா), யோகிதா (லண்டன்), பிரகாஷ், வாகீசன், அஜந்தன், கரிகரன், லஷ்மன், யுவன்சன், அனுசன், நிரோஷன் (பிரான்ஸ்), ஜெனனி, தர்ஷன் (மாணவர்கள், யாழ்/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்), ரஞ்சனா - சச்சிதானந்தம் ஆகியோரின் பாசமிகு பேரனும் அபிதயா, நிபோஷனன், மிதுஷன், அட்ஷயா, அட்ஷன், டிலக்ஷா, அபிஷன், ஆகாஷ், சரண்யா, சரண்ராஜ், அருண்குமார் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (03.03.2004) புதன்கிழமை காலை 10மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*215/2, கச்சேரி நல்லூர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

(29060)(35-16-17)

தகவல்:
M.வசந்தா (மகள்)

## ஆறுமுகம் கதிரவேல் (J.P.)

(ஓய்வுபெற்ற அதிபர்)

அல்வாய் "இலக்குமி இல்லத்தைச்" சேர்ந்த ஆறுமுகம் கதிரவேல் அவர்கள் 26.02.2004வியாழக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தனலக்குமியின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.02.2004 வெள்ளிக்கிழமை மாலை 5.00மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"இலக்குமி இல்லம்"*
*அல்வாய்.*

(C/33493)(35-16-17)

தகவல்: ச.ஸ்ரீதரன் (மருமகன்)
உதவி முகாமையாளர்
மக்கள் வங்கி - நெல்லியடி.

## காசிப்பிள்ளை கதிர்காமத்தம்பி

(ஓய்வுபெற்ற தலைமையாசிரியர்)



பன்னாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை கதிர்காமத்தம்பி(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்) அவர்கள் நேற்று (28.02.2004) சனிக்கிழமை அதிகாலை கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் வரதலட்சுமி அவர்களின் அருமைக் கணவரும் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, கிருஷ்ணபிள்ளை, முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் துரைசிங்கம் (கனடா), அம்பிகாதேவி (கனடா), விசாகப்பெருமாள், சறோஜாதேவி ஆகியோரின் அருமைத் தந்தையாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 03.03.2004 புதன்கிழமை பகல் 12மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


*Veluwanaramaya Housing*
*Seheme, Colombo - 06*

தகவல்:சி.சிவபாலசுப்பிரமணியம்,
வி.அம்பலவாணர்

(29059)(16-17)

# கண்ணீர் அஞ்சலி







| ரெங்கசாமி ஜெகதீஸ்வரன் | இராமசாமி சிவசுப்பிரமணியம் | சண்முகநாதன் சதுமுகன் |
|---|---|---|
| பிறப்பு : 29.09.1983 | 14.04.1938 | 22.12.1983 |
| இறப்பு : 25.02.2004 | 26.02.2004 | 27.02.2004 |

*நேற்று வரை எம்முடன் உறவாடி*
*ஒன்றாகப் பேசிச் சிரித்து பணியாற்றிய உத்தமரே!*
*போரோய்ந்த பொழுதில்*
*உம் பூவுடல்கள்*
*விபத்து என்னும் பேரரக்கனுக்கு*
*பலியானதுவே!*

எமது பணியாளர்களான செல்வன் ரெ.ஜெகதீஸ்வரன், திரு. இ.சிவசுப்பிரமணியம், செல்வன் ச.சதுமுகன் ஆகியவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, ஆத்மா சாந்திக்காக கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

பணிப்பாளர், பொறுப்பாளர்கள்,
பணியாளர்கள்,
ஆயப்பகுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## சிங்களத்தின் போக்கில் மாற்றம்!

தென்னிலங்கை அரசியல், ஆச்சரியப்படத்தக்க புதிய பரிமாணத்தை - மாற்றத்தை - நோக்கித் திரும்பியிருக்கின்றது.

தமிழர்களைப் பொறுத்தவரை இது ஆச்சரியத்தை மட்டுமல்ல கூடவே அதிர்ச்சியையும் தருவதாக அமைந்திருக்கின்றது.

இலங்கையில் ஐந்து தசாப்தங்களாகப் புரையோடிப்போயிருக்கும் தேசியப் பிரச்சினையான இனப்பூசலுக்கு, அமைதி வழியில் சமாதானத் தீர்வு காண்பது பற்றிய விவகாரமே தற்போது பொதுத் தேர்தலை ஒட்டிய விடயத்தில் அடிப்படை விவகாரமாகப் பேசப்படுகின்றது.

ஆட்சியிலிருக்கும் அரசுகள் இந்தப் பிரச்சினையின் தீவிரத்தன்மையை உணர்ந்துகொண்டு அமைதி வழியில் அதைத் தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்வதும் -

ஆட்சியைப் பிடிப்பதில் தீவிரமுனைப்புடன் இருக்கும் எதிரணி, பேரினவாத வெறியைத் தூண்டி, இனவாதத்தைக் கிளப்பி, அழிவுபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் -

இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழர்களுக்கு எதிரான துன்பியல் விவகாரமாகத் தொடர்ந்தது சரித்திரமாகும்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர்வரை இதுதான் தொடர்கதையாக இருந்தது.

ஆனால், சில தினங்களுக்கு முன்னர் இந்தக் கதையின் போக்கே அடியோடு மாறிவிட்டது.

அரசுத் தரப்பு மட்டுமல்ல, ஜனாதிபதியின் தலைமையிலான எதிர்த்தரப்பும் கூடத் தாம் ஆட்சிக்கு வந்தால் சமாதானப் பேச்சு, அமைதி முயற்சி, அதிகாரப் பகிர்வு, தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை ஏற்றுக்கொள்ளுதல், இணக்கத் தீர்வு என்றெல்லாம் முழங்கத் தொடங்கிவிட்டது.

அதாவது, தென்னிலங்கையில் இரு பெரும் மாற்று அரசியல் சக்திகளும் மாறிமாறிப் போட்டி போட்டுக்கொண்டு தங்களை சமாதானப் பிரியர்களாகக் காட்டுவதற்கு முட்டி மோதிக்கொள்ளும் அதிசயத்தைக் கண்டு தமிழர் உலகம் வியப்பிலும் அதிர்ச்சியிலும் மூழ்கிப் போய்க்கிடக்கின்றது.

இத்தகைய திடீர் மாற்றம் சிங்களத் தரப்பிலிருந்து கிளம்பியதற்குக் காரணம் என்ன?

ஈழத் தமிழரின் ஐக்கியமும் அவர்களின் வலுவுமே இதற்குக் காரணம்.

உரிமைப் போரில் வலிமையாக நிற்கும் தமிழினத்தோடு முட்டி மோதி, அவர்களுக்கு நியாயமாக வழங்கப்படவேண்டியதை வழங்கமறுத்து, அவர்களை அடிமைப்படுத்த முயல்வது தமக்கும் தமது நாட்டுக்கும் பேராபத்தையும் பேரழிவையுமே தரும் என்ற யதார்த்த உண்மை சிங்களத்துக்குக் குறிப்பிடத்தக்க அளவிலேனும் புரிந்துபோனமையே இந்தத் திடீர் மாற்றத்துக்கு அடிப்படைக் காரணமாகும்.

இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காண மறுத்து வீம்பு பேசுவதும், பேரினவாத வெறியில் சிறுபான்மை இனத்தவர்களை அடிமைப்படுத்த முயல்வதும், அழிவு தரும் செயற்பாடு என்பதும் சிங்கள மக்களுக்கு நன்கு உணர்த்தப்பட்டுவிட்டது. இதனால், அந்தப் போக்கில் அரசியல்வாதிகளாகிய தாங்கள் இனிமேலும் செயற்பட்டால், சிங்கள மக்களால் தாங்கள் நிராகரிக்கப்படுவார்கள் என்ற நிதர்சனமும் அரசியல்வாதிகளுக்குப் புரியத் தொடங்கிவிட்டது.

இந்தக் காரணத்தினால்தான் பேரினவாதிகளுடன் சேர்ந்து கூட்டமைத்திருக்கும் ஜனாதிபதி குமாரதுங்கவும் ஏன் அவரோடு அணிசேர்ந்துள்ள ஜே.வி.பி. போன்ற பேரினவாதிகளும் கூட தங்களின் இனவாதக் கூச்சலை சற்று அடக்கி வாசிப்பதோடு, தமிழ்த் தரப்போடு சமரசம் பேணுவது குறித்தும் சிலாகித்துப் பேசத் தொடங்கியிருக்கின்றார்கள்.

'அடிஉதவுவது போல் அண்ணன் தம்பி உதவமாட்டார்கள்' என்பது ஒரு பழமொழி.

அஹிம்சை ரீதியில் - சாத்வீகப்பாணியில் ஈழத் தமிழர்கள் உரிமைப் போர் நடத்தியபோது அதை ஆயுத முனையில் அடக்கி ஒடுக்க முயன்ற சிங்களம், இப்போது தமிழரின் ஆயுதப் போராட்டம் தங்களை மிஞ்சும் - விஞ்சும் - நிலைக்கு வந்ததும் எங்களைக் கெஞ்சிக் கொஞ்சி தாஜா செய்யும் நிலைக்குக் கீழிறங்கி வந்திருக்கிறது.

அதற்குத் தமிழர் தரப்பின் ஆயுத வலிமையே அடிப்படைக்காரணம் என்பதை உணர்ந்துள்ளோம்.

அந்த ஆயுத வலிமைக்கு - இராணுவப் பலத்துக்கு - அரசியல் ரீதியாகவும் வலுவும், பலமும் அளிக்கும் ஒரு ஜனநாயக வாய்ப்புத் தமிழ்த் தரப்புக்கு இப்போது கிட்டியிருக்கின்றது.

முழுச் சிங்களத் தேசமுமே தமிழர் தரப்போடு இணங்கிப் போகத் திட்டமிடும் இச்சமயத்தில் அற்ப சொற்ப சலுகைகளை மனதிற்கொண்டு எதிர்பார்த்து நமக்குள் பிளவுபடாமல், அத்தகையோரை ஓரங்கட்டி, எமக்குக் கிடைத்த இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, எமது இராணுவ வலிமையை அரசியல் ரீதியாகவும் பலப்படுத்தி உரிமையின் உச்சத்தை எட்ட முயல்வோமாக!

# நாங்கள் உருவாக்கிய அரசியல் சூழலை அடுத்தவர் பயன்படுத்த அனுமதிப்பதா?

## விளையாட்டு விழா இறுதிநாளில் பாலகுமாரன் கேள்வி

- கிளிநொச்சியிலிருந்து வசந்தன்-

கிளிநொச்சி,பெப்.29

எமது மாவீரர்களின் தியாகத்தினாலும், ஈகத்தினாலும் தோன்றியுள்ள இன்றைய அரசியல் நிலைமையை மற்றவர்கள் பயன்படுத்துவதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழீழத் தேசியப் பெருவிளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய விடுதலைப் புலிகளின் மூத்த பிரமுகர் வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எமது மண்ணில் நடைபெறும் சகல அரசியல் நிகழ்வுகளும் எங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும் என்பதற்காக நாம் சில முடிவுகளை மேற்கொண்டுள்ளோம். இதனை அறிய வேண்டிய கடமை சிங்கள சகோதரர்களுக்கும் உண்டு.

எமது மாவீரர்களின் தியாகத்தால், அவர்கள் நடத்திய மௌனப் புரட்சியால் தோன்றியுள்ள அரசியல் நிலைமையை மற்றவர்கள் கையாள்வதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம்.

தமிழ்மக்கள் தங்களுடைய தலைவிதியைத் தீர்மானிக்கக் கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கின்றார்கள். எமக்கு முன்னால் வரக்கூடிய அனைத்து அரசியல் நிகழ்வையும் கையாளக்கூடிய ஆற்றலை நாம் பெற்று உள்ளோம். இதனால்தான் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தலையிட நாங்கள் முன்வந்துள்ளோம்.

இதனை அனைவரும் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும். தேர்தல் எமது பகுதிகளில் நடக்கின்றதோ இல்லையோ, வாக்களிக்க விடுகின்றார்களோ இல்லையோ அது வேறு விடயம். ஆனால், அதில் கூட அரசியல் இருப்பதனை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

எனவே, இந்தமுறை வரப்போகின்ற அரசியல் நாடகத்திலே தெளிவான பாத்திரம் ஏற்று நடத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். நாடாளுமன்றக் கதிரைகளைத் தூசு தட்டி அவற்றைச் சிம்மாசனமாக மாற்றுவதற்காக நாங்கள் இந்த முடிவை எடுக்கவில்லை. தேர்தலைப் புனிதப்படுத்தி இது ஒரு வித்தியாசமான தேர்தல் என்று கூறவும் நாம் தயாராக இல்லை.

எங்களுடைய போராட்டத்தினுடைய விளைவாக சிங்களத் தேசத்தில் தோன்றியுள்ள குழப்பநிலையை நாங்கள் எமக்குச் சாதகமாகப் பயன்படுத்தவேண்டும். இதனைப் பிறர் பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது என்பதற்காக நாம் எடுத்திருக்கும் முடிவின்படி வரப்போகும் அரசியல் நிகழ்வுகள் எல்லாவற்றையும் நீங்கள் சரியாகக் கையாளவேண்டும்.

வாக்கைப் போட்டுத்தான் அரசியல் நிலைமையைக் கையாள வேண்டும் என்று சொன்னால் நாங்கள் வாக்கைப் போடவும் தயாராக இருக்கின்றோம். அதேவேளை, இந்தத் தாற்பரியத்தைப் புரிந்து எம்மோடு இணைந்து வேலை செய்யக்கூடிய அனைத்துத் தமிழ் நெஞ்சங்களையும் நாங்கள் அரவணைத்து எந்த வேறுபாடுகளும் இல்லாமல் ஒருமித்த தலைமையின் கீழ் செயற்படுகின்றோம்.

இந்தச் சூழ்நிலையில் தமிழினம் தமது பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலேயே தீர்வை ஏற்படுத்த முயற்சி செய்கிறது. இதனையும் சிங்கள தேசம் நிராகரிக்குமானால் சுயநிர்ணய அடிப்படையில் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை உருவாக்குவதனைத் தவிர வேறு வழியில்லை. இதனை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும் வகையில் சமாந்தரமான அரசு நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியின் தலைநகராக கிளிநொச்சி விளங்குகின்றது.

தமிழீழ விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் ஒரு சர்வதேசப் போட்டிகளிலே பதக்கங்கள் பெறும் நாள் வெகுதூரத்தில்லில்லை. தமிழீழத் தேசியத் தலைவருடைய கருத்திற்கு வலுவூட்டி, எமது விளையாட்டுத் துறையை வளர்ப்பதன் மூலம் உயர்ந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கு விளையாட்டுத்துறை மேன்மேலும் பாடுபடவேண்டும் - என்றார்.

(ஐ-5-8)

# அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் புதிதாக பால் பதனிடும் இயந்திரங்கள் நிறுவப்படும்

## ஐ.நா.அபிவிருத்தித் திட்டம் ஏற்பாடு

வலிகாமம் தெற்கு,பெப்.29

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பாவனைக்கென 67 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய பால் பதனிடும் இயந்திரங்கள் பொருத்தப்படவுள்ளன.

யாழ். அரசாங்க அதிபரின் சிபார்சுக்கமைய ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் பால்பதனிடும் இயந்திர சாதனங்களை பொருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

சங்கத்தின் தலைமைஅலுவலகத்தில் தலைவர் ம.கதிர்காமநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தின் போது பால்பதனிடும் இயந்திரங்களைப் பொருத்துவதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் சார்பில் திருமதி சிவபாத சுந்தரமும் நிறுவன உத்தியோகத்தர் சிலரும் இந்தக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பால் பதனிடும் இயந்திர சாதனங்களை நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் இருந்து விரைவில் இங்கு எடுத்துவர நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் -

இயந்திர சாதனங்கள் வந்துசேர்ந்தவுடன் ஓரிரு மாதங்களில் அவற்றைப் பொருத்தும் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு விடும் என்றும் - கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, கூட்டுறவுச்சங்க பால்கொள்வனவு நிலையங்களுக்கு பால் பண்ணையாளர்களால் கொண்டுவரப்படும் பாலைத் திருப்பிவிடாமல் முழுவதையும் கொள்வனவு செய்வதற்கும் -

இதுவரை காலங்களிலும் பால்கொள்வனவு செய்யப்படாத இடங்களில் புதிய கொள்வனவு நிலையங்களை அமைத்துப் பால் கொள்வனவை ஊக்குவிக்கவும் - திட்டங்கள் நடைமுறைப்படுத்தவுள்ளன என்று கூறப்பட்டது.

(எ-152)

# கிளிநொச்சியில் 2,000 குடும்பங்கள் இன்னமும் மீளக்குடியமரவில்லை

கிளிநொச்சி,பெப்.29

கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரம் குடும்பங்கள் இன்னமும் மீளக் குடியமர முடியாதநிலையில் நலன்புரி நிலையங்களிலேயே தொடர்ந்தும் தங்கியிருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கரைச்சி பிரதேசத்தில் 740 குடுமபங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 986 பேர் 17 நலன்புரி நிலையங்களிலும், கண்டாவளைப் பிரதேசத்தில் 740 குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரத்து 29 பேர் 7 நலன்புரி நிலையங்களிலும், பூநகரிப் பிரதேசத்தில் 593 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 236 பேர் 11 நலன்புரி நிலையங்களிலும் இவ்வாறு வசித்து வருகின்றனர்.

ஆனையிறவு, பளைப் பகுதிகளை அண்டிய இடங்களைச் சேர்ந்த இந்த மக்கள் தமது சொந்த இடங்களில் வெடிபொருள்கள் அகற்றப்படாதமையினாலும் சில பிரதேசங்களை படையினர் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியிருப்பதனாலும் மீளக்குடியமர முடியாதநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

(ஐ-4)

# அச்சுவேலிப் பண்ணையில் இருந்து விரைவில் நல்லினக் கோழிக்குஞ்சுகள்

## பண்ணையாளர்களுக்கு விநியோகிக்கப்படும் எனத் தகவல்

வலி.தெற்கு,பெப்.29

அச்சுவேலி கோழிப்பண்ணையில் இருந்து தரமான கோழிக் குஞ்சுகள் விரைவில் பண்ணையாளர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன என்று யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான எஸ்.சிவலோகநாதன் தெரிவித்தார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் நெதர்லாந்து, இந்தியா போன்ற இடங்களில் இருந்து நல்லினக் கோழிகள் தருவிக்கப்பட்டு அவற்றின் முட்டைகள் மூலம் தற்போது குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

குறிப்பாக இந்தியாவில் இருந்து 'அவியன்' (AVIAN) இன புறொயிலர் கோழிகள் கடந்த டிசெம்பர் மாதத்திலும் -

நெதர்லாந்தில் இருந்து 'போவன்ஸ் கோல்ட்லைன்' (BOVANS GOLDLINE) இன லேயர் கோழிகள் கடந்த ஜனவரி மாதத்திலும் - சங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் சிபார்சுக்கமைய கொள்வனவு செய்யப்பட்டுள்ள அந்த இனக்கோழிகள் குடாநாட்டுச் சூழலுக்கு மிகப்பொருத்தமானவை. கூடுதலான முட்டைகளை இடக்கூடியவை.

அச்சுவேலி கோழிப்பண்ணையில் வளர்க்கப்பட்டு வரும் இந்தக் கோழிக் குஞ்சுகள் விரைவில் பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்படும்.

குஞ்சு பொரித்த அன்றையதினமே உடனுக்குடன் அவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குஞ்சுகளைக் கொள்வனவு செய்வோருக்கு கோழிவளர்ப்புத் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்படும்.

கோழிப்பண்ணையில், கோழிவளர்ப்பில் பயிற்றப்பட்ட பிரத்தியேக கால்நடை வைத்தியர் ஒருவரின் பராமரிப்பில் கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

ஜப்பானில் விசேட பயிற்சிபெற்ற டாக்டர் எஸ்.வசீகரனின் மேலதிக ஆலோசனைகளும் பெறப்பட்டு வருகின்றன - என்றார் அவர்.

(எ-152)

**நாளை**

மாசி 18
திங்கட்கிழமை
(01.03.2004)
திதி : தசமி
பின்னிரவு 2.38
நட்சத்திரம்: திருவாதிரை
முழுவதும்
சுபநேரம் : 12.27-1.57
ராகுகாலம்: 7.57-9.27
(பஞ்சாங்க நேரப்படி)

**[illegible]**

[illegible]தான் ஏழைகளின் செல்வங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாசி மகத்தின் மகிமை நூல் அன்பளிப்பு

மாசிமகத்தை முன்னிட்டு இந்து சமய மன்றங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் சமய நிறுவனங்களுக்கு மாசி மகத்தின் மகிமை என்னும் புத்தகம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுவருவதாக மில்க்வைற் தொழில் அதிபர் இ.தவகோபால் அறிவித்துள்ளார். (எ)

## வகுப்பறை மண்டபம் நிர்மாணிப்பு

வலி.தென்மேற்கு, பெப்.29

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் புதிய வகுப்பறை மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

கல்வி அமைச்சு சுமார் 25லட்சம் ரூபா செலவில் இந்த வகுப்பறை மண்டபத்தை நிறுவிவருவதாகவும் - கட்டட வேலைகள் விரைவில் பூர்த்தியடையவிருப்பதாகவும் - கல்லூரி அதிபர் தெரிவித்தார். (எ-135)

## கற்றல் உபகரணம் அன்பளிப்பு

கோப்பாய்,பெப்.29

அச்செழு மெ.மி.த.க. பாடசாலையில் கல்வி கற்றுவரும் மாணவர்களில் இனங்காணப்பட்ட 65 மாணவர்களுக்குத் தியாகி அறக்கொடை நிதியத்தினால் கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகள் அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன என பாடசாலை அதிபர் க.சின்னராசா தெரிவித்தார். (எ-72)

## தையல், மனையியல் கண்காட்சி

தென்மராட்சி,பெப்.29

வடக்கு - கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரால் நடத்தப்பட்ட பயிற்சி நிலையத்தின் தையல், மனையியல் கண்காட்சியும், விற்பனையும் எதிர்வரும் மூன்றாம், நான்காம் திகதிகளில் சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளன.

சாவகச்சேரி நகர மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி உருத்திராதேவி சண்முகநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனும் -

சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் செ.செல்வரத்தினம், பிரதேச செயலக உதவிதிட்டமிடல் பணிப்பாளர் க.குணாளசிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வர். (எ-117)

## பேச்சு, பண்ணிசைப் போட்டிகள்

வடமராட்சி,பெப்.29

சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் குருபூசை தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்படும் பேச்சு, மனன, பண்ணிசை, அவதானம், பொது அறிவு ஆகிய துறைசார்ந்த போட்டிகள் எதிர்வரும் 13ஆம், 14 ஆம் திகதிகளில் மேலைபபுலோலி சதாவதானி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளன.

பாலர் கீழ்ப்பிரிவு, பாலர் மேற்பிரிவு, தரம் 1 தொடக்கம் 13 வரையான மாணவர்களிடையே நடத்தப்படும் இந்தப் போட்டிகளில் பங்குகொள்ளவிரும்புவோர் பாடசாலை ஊடாகவோ அல்லது நேரடியாகவோ மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், தம்பசிட்டி, பருத்தித்துறை என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறும் சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் 97 ஆவது ஆண்டு விழாவில் வைத்துப் பரிசில்கள் வழங் கப்படும். (எ-173)

### தவறிவிட்டன

ஆதரநாதன் சிவநாதன் என்பவரின் அடையாளஅட்டை (730072228V), சாரதி அனுமதிப்பத்திரம் (A.OO8152385) என்பன 26.02.2004 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0777-777612, 0777-777613 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

*சன்மானம் வழங்கப்படும்.*

(29034)(26-14-16)


*நீங்கள்,*

நீரிழிவு நோயினால் அவதிப்படுகிறீர்களா? இதோ உடன் நிவாரணி

"மதுமேகரணி"

"MADHUMEAHAHARANEE"

இந்த மருந்தின் பலாபலனைக் குறுகிய காலத்தில் அறிந்துகொள்ளலாம்.

உங்கள் அண்மையில் உள்ள சித்தஆயுர்வேத டாக்டரிடம் ஆலோசித்துப் பாவிக்கவும்.

இது ஓர் அரச ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத் தயாரிப்பு

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:

சிவா நறுமணப்பூங்கா

288. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

SRI LANKA AYURVEDIC-CORPORATION
PO BOX 20 NAWINNA
MAHARAGAMA.

(14-26) *குறிப்பு: சத்திரச்சந்திக்கு அருகில்* (சி-33077)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியையாகிய

திருமதி ம.பொன்னம்பலம்

அவர்களின் அன்புத் தந்தையார்

### தம்பு கணபதிப்பிள்ளை

அவர்களது பிரிவால் துயருறும் அவர்தம் குடும்ப உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள்,
யா/ அல்லாரை அ.த.வித்., மீசாலை.

(29018)(39-14-26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி

### முருகுப்பிள்ளை செல்லப்பாக்கியம்

(பருத்தித்துறை வீதி, தும்பளை)

மலர்வு : 03.07.1923

உதிர்வு : 30.01.2004

திதி: 29.02.2004

அன்பையும் பண்பையும் அறத்தையும் எமக்கு ஊட்டி அளவில்லாத பாசத்தாய்மையை என்றென்றும் ஈந்து காலமெல்லாம் எம்மைக் கலங்காது காத்த தெய்வத்தாயே! நினது நினைவுகள் என்றுமே எம்மில் நிலைக்குமம்மா!

எமது அன்புத் தாயாரின் மறைவின்போது பல்வேறு வழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறி உதவிகள் புரிந்து இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நெஞ்சுநெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (29.02.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கல்லடி ஒழுங்கை,*
*தும்பளை வீதி,*
*பருத்தித்துறை.*

தகவல்:
திரு.மு. சிவசுப்பிரமணியம்.

- குடும்பத்தினர்.

(29013)(14-26-16)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்: 14 - 09 - 1909



விண்ணில்: 29 - 01 - 2004

### திருமதி இராசமணியம்மா கனகசபாபதி

அன்னாரின் மரணச்செய்திகேட்டு எமது துயரில் பங்குபற்றி ஆறுதல் கூறியோருக்கும், உள்ளூரிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தந்தி, தொலைபேசி, கடிதமூலம் எமது துயரைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் மற்றும் பலவழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (29.02.2004) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*யாழ். வீதி,அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.* (29029) (14-16-26)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## சிங்கப்பூரில் திருமண சேவை



சிங்கப்பூரில் திருமணம் செய்ய வருவோருக்கும், விடுமுறையைக் கழிக்க வருவோருக்கும் சகல வசதிகளும் கொண்ட வீடும் மற்றும் திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த செலவில் திருப்திகரமாகச் செய்து தருவோம். மேலும் எங்கள் இடம் *'குட்டி இந்தியா"* என்று அழைக்கப்படும் இடத்தில் இருப்பதால் வேண்டிய பொருள்களை நடந்துசென்றும் வாங்கலாம். மேலும் விவரமறிய எந்த நேரத்திலும் தொடர்புகொள்ள வசதியாகக் கைத்தொலைபேசி எண் 0065 97514941, தொலைநகல் 0065 64816144.

*சிங்கப்பூரில் சுற்றுலா அனுமதி கிடைப்பது சில சமயங்களில் கஷ்டம். அதனால் 8கிழமைக்கு முன்பு எங்களுடன் தொடர்புகொள்ளவும்.*

**LINGAM WEDDING SERVICES**
10.Anson Road# 15 - 14, International Plaza,
Singapore 079903. (26954)(14-26-16)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 1956 - 01 - 25



ஆண்டவன் அடியில்: 2003 - 03 - 12

### கதிரிப்பிள்ளை சிறீஸ்கந்தராசா

(ஆனந்தன்)

திதி: 29.02.2004 (மாசி பூர்வபக்க நவமி)

எங்கள் குடும்பத்தின் இனிய தலைவரே!
இடைநடுவில் எமைப்பிரிந்து
ஓராண்டு ஆனதையா
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
எங்கள் உள்ளத்தில் என்றுமே வாழ்வீர்கள்.
*உங்களை நினைந்தே என்றும் நாம் வாழ்கின்றோம்.*

*பத்தாவத்தை,*
*இளவாலை.* (29039)(35-14-26-16)

மனைவியும்,
பிள்ளைகளும்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 03 - 11 - 1926



உதிர்வு: 13 - 03 - 2003

### அமரர் சங்கரப்பிள்ளை சரவணமுத்து

திதி: பூர்வபட்ச தசமி (01.03.2004)

ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன - உங்கள்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா?
தேறுதல் சொல்லத் தெய்வமே வந்தாலும்- உங்கள்
திருமுகம் ஒரு தரம் பார்த்தால் போதாதோ எமக்கு!
*உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும்:*

*புலோப்பளை,*
*பளை.* (29016)(38-14-26-16)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் மருதடிக்குளம் ஆலயத்துக்கா – விவசாயிகளுக்கா?

மானிப்பாய் மருதடிக்குளம் (கேணி) யாருக்கு சொந்தமானது என்பதையிட்டு ஆலய நிர்வாகத்தினருக்கும் விவசாய சம்மேளனத்தினருக்கும் இடையில் இடம்பெற்று வரும் பிரச்சினை தொடர்பாக மேற்படி கேணி ஆலயத்துக்குச் சொந்தமானது என்பதை ஆவண ரீதியாக எதிர்வரும் 5ஆம் திகதி நிரூபிக்குமாறு ஆலய நிர்வாகத்தினருக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு அருகில் உள்ள குளம் என கருதப்படும் கேணி விவசாயக் குளமா அல்லது ஆலயக் கேணியா என்பதில் ஏற்பட்ட கருத்து வேறுபாடே இது தொடர்பான பிரச்சினைக்குரிய காரணமாகும்.

நீண்ட காலமாக விவசாயக்குளமாகக் கருதப்பட்டுவரும் இக்குளத்தை ஆலய நிர்வாகத்தினர் மூடி ஆலயத்தின் தேவைகளுக்காகப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர் என்றும் -

இதன் நடவடிக்கையாக ஆலயத்தின் தெற்குப் பக்கத்தில் வயல் ஓரமாக குளத்துக்குச் செல்லும் வாய்க்கால் மண்போடப்பட்டு மூடப்பட்டுள்ளதாகவும், குளத்தினுள் கழிவுப்பொருளகள், குப்பைகள் கொட்டப்பட்டு வரு

வி.பி.சர்மா
வலிகாமம் தெற்கு செய்தியாளர்

வதாகவும், இவற்றால் குளத்தை அண்டி உள்ள விவசாய நிலங்கள் பாதிப்படைவதாகவும் விவசாயிகள் தரப்பில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இப்பிரச்சினை தொடர்பாக கடந்த வாரம் உடுவில் கமநல சேவை நிலையத்தில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆலய நிர்வாகத்தினர், விவசாய சம்மேளனத்தினர், பெரும்பாக உத்தியோகத்தர் மற்றும் நீர்ப்பாசனத்திணைக்கள தொழில்நுட்ப ஆலோசகர் ஆகியோர் கலந்துகொண்டனர். கூட்டமுடிவில் மேற்படி கேணி ஆலயத்துக்குரியது என்பதை ஆவணரீதியாக நிரூபிக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

ஆலய நிர்வாக சபைத் தலைவர் சிதம்பர நடராசா இது தொடர்பாக பின் வருமாறு விளக்கமளித்தார்.

மேற்படி ஆலயம் 1836ஆம் ஆண்டு, விக்டோரியா மகாரணி காலத்தில் அன்றைய அரச அதிபரால் முதலியார் சுவாமிநாத பிள்ளையிடம் பராமரிப்புக்கென ஒப்படைக்கப்பட்டது. முதலியாரின் மறைவுக்கு பின் அவரது சந்ததியினர் ஆலய பரிபாலனத்தை மேற்கொண்டனர். அவர்களின் காலத்தில் ஆலய அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படாமல், வருமானங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக வழிபடுவோரால் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து அரசாங்க அதிபர் ஒரு விசாரணைக் குழுவை நியமித்தார்.

தம்பித்துரை, சபாரட்ணம், கனகசபை பசுபதி ஆகியோரைக் கொண்ட இந்த ஆணைக்குழு, ஆலயம் வழிபடுவோர்களால் தெரிவுசெய்யப்படும் தர்மகர்த்தா சபை ஒன்றினால் நிர்வகிக்கப்படவேண்டும் என கட்டளையிட்டது.

1983இல் இயங்கிய தர்மகர்த்தா சபையினர், ஆலயத்துக்குத் தெற்குப் பக்கமாக உள்ள வயல் நிலங்களில் 60 பரப்புக் காணியை ஆலயத்துக்கென கொள்வனவு செய்தனர். ஆலயத்தின் தென்பகுதியில் செல்லும் வாய்க்காலினை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர், விவசாய சம்மேளனத்தினரின் அனுமதி, விருப்பம், ஒத்துழைப்புப் பெற்று மூடினர். இதற்குப் பதிலாக, கிழக்குப் பக்கமாக வெள்ளம் குளத்தை சென்றடையக் கூடிய கால்வாய் ஒன்றைப் புதிதாக அமைத்துக்கொண்டனர்.

மானிப்பாய் விவசாய சம்மேளனம் முன்னின்று வெட்டிய புதிய கால்வாய் அமைப்புக்கு ஏற்பட்ட செலவு இரண்டாயிரம் ரூபா, ஆலய தர்மகர்த்தா சபையினரால் வழங்கப்பட்டும் உள்ளது. புதிய வாய்க்கால் தொடர்பாக ஏதும் பிரச்சினை ஏற்பட்டால் அதனைத் தெரியப்படுத்து மிடத்து மாற்று ஒழுங்கு செய்யலாம் எனவும் இரு பகுதியினராலும் ஒத்துக்கொள்ளப்பட்டது. இன்றுவரை எந்த ஒரு விவசாயியினாலும் எதுவிதமான ஒரு முறைப்பாடும் செய்யப்படவில்லை.

தற்போது ஆலய புனரமைப்புக்கான முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கோப்பாய் சிவஸ்ரீ பரமசாமிக்குருக்கள், கீரிமலை சிவஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள், அரியாலை சிவஸ்ரீ சிவசுப்பிரமணியக்குருக்கள் ஆகிய சிவாசாரியர்களின் நேரடி அவதானிப்பில் ஆலய புனரமைப்புகளும், ஆலய அமைப்பு மாற்றங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனடிப்படையில் இன்று காணப்படும் தேர்க்கொட்டகை அகற்றப்படவும் தேர் ஆலயத்தைச் சுற்றி இழுத்துவரக்கூடியதாகவும் ஆலயத்துக்கு கொள்வனவு செய்யப்பட்ட காணியை ஏற்புடையதாக்க வேண்டியுள்ளது. இதற்காக, இக்காணியை மண்போட்டு நிரவி உள்ளோம். அப்பகுதியில் இன்று கருங்கல் தயாரிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. நாம் கேணியை ஒரு போதும் மூடப்போவதில்லை. ஆலய அபிவிருத்திக்குரிய ஒரு சில திருப் பணிகளையே மேற்கொண்டு வருகிறோம் - என்றார்.

மேற்படி குளம் விவசாய தேவைகளுக்கு அவசியமானது. இது ஒரு விவசாயக்குளமே தவிர ஆலயக்கேணி அல்ல. தெற்குப்புற வாய்க்கால் மூடப்பட்டதனால் வெள்ளம் ஓடமுடியாமல் தேங்கி நிற்கின்றது. ஊர் வெள்ளம் வயல் நிலங்களை மூடியும் ஆலயச் சுற்றாடலிலும் தேங்கி பாதிப்பை ஏற்படுத்துகின்றது. எனவே, மூடப்

**செய்திக்கட்டுரை**

பட்ட வாய்க்கால் திறக்கப்பட்டு குளம் முன்னர் இருந்தது போல விவசாயக்குளமாக விளங்கவேண்டும். இதற்குரிய நடவடிக்கைகளைச் செய்து தாருங்கள் என விவசாய சம்மேளனத்தினர் தமது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தனர்.

நீர்ப்பாசனத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் கருத்துத் தெரிவிக்கையில்:-

ஆலய அபிவிருத்தியும், குளப் பாவனையும் மக்களுக்கு அவசியமானவையே. ஆதிகாலம் தொட்டு வயல்கள், குளங்கள், ஆலயங்கள் எல்லாம் ஒன்றோடொன்று தொடர்புபட்டிருந்தன. குளத்தின் ஒருபகுதி ஆலயக் கேணியாகவும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களத்தினால கையாளப்படும் குளங்களில் திணைக்களத்தின் அனுமதி இல்லாமல் எவரும் எந்தவிதமான புனரமைப்புகளையோ மாற்றங்களையோ செய்யமுடியாது.

மருதடிக்குளத்தைப் பொறுத்தவரை, நான் இப்பகுதியில் கடமையாற்றிய காலத்தில் பலமுறை திணைக்களத்தின் உதவியுடன் இது புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதை அறிவேன். நானே பல புனரமைப்பு வேலைகளைச் செய்துள்ளேன். ஆலயப் புனரமைப்பு அவசியமானதுதான். அதே வேளை - விவசாயத் தேவைகளும் நிறைவு செய்யப்படவேண்டும். இரு பகுதியினரின் நோக்கமும், அபிவிருத்தியும் உற்பத்தியுமேயாகும் ஆகையால், இரு பகுதியினரும் சில விட்டுக்கொடுப்புடன் கூடிய - சமாதான நிலைக்கு வரவேண்டும் - என்றார்.

கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் கருத்துக்கூறுகையில்-

ஆலய நிர்வாகத்தினரும், விவசாய சம்மேளனத்தினரும் இருவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் ஆலோசனையைப்பெற்று ஒரு நல்ல இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் - எனக்கூறினார்.

பிரச்சினைக்குரிய குளம் (கேணி) ஆலயத்துக்குரியது என நிரூபனமாகும் பட்சத்தில் விவசாய சம்மேளனத்தினர் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்கு உடுவில் கமநல சேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது.



மருதடிக்குளம் (கேணி) கழிவுகள், குப்பைகள் கொட்டப்பட்ட நிலை.



மூடப்பட்ட வாய்க்காலுக்குரிய மணல் மேடு.

# குடும்பத்தின் பொருளாதார நிலை உயர பெண்கள் சுயதொழிலில் ஈடுபடவேண்டும்

## யாழ். மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

வலி.தென்மேற்கு,பெப்.29

குடும்பப் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு பெண்கள் சுயதொழில் முயற்சிகளில் அதிக அக்கறை காட்டவேண்டும்.

- இவ்வாறு யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்ட கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா தலைமையில் கடந்த 21ஆம் திகதி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இந்தக் கண்காட்சியை யாழ். மேலதிக அரச அதிபர் திறந்து வைத்து உரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

பெண்களுக்கு தலைமைத்துவத்தை கொடுக்கும் பயிற்சிகள் வீட்டுக்கும், நாட்டுக்கும் பயனைத் தரும் பயிற்சியாக கருதப்படுகின்றன. தற்போது இத்தகைய பயிற்சிகள் மகளிரின் எதிர்கால நல்வாழ்வுக்குத் தேவையான முக்கிய பயிற்சிகளை உள்ளடக்கியதாக நடத்தப்பட்டு வருகின்றன.

தற்போது இங்கு கோலம் போடுதல், பூவேலை, மணப்பெண் அலங்காரம், சிகையலங்காரம் ஆகிய பல்வேறு பயிற்சிகளுடன் புதிதாக வீட்டுத் தோட்டச் செய்கைபற்றிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இங்கு பயிற்சி பெற்ற யுவதிகள் பெற்ற பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்டு சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு முன்வரவேண்டும். இதன் மூலம் அதிக வருமானத்தைப் பெறலாம். பல நோ.கூட்டுறவுச் சங்கம் போன்ற பொது நிறுவனங்கள் இவர்களுக்கு விற்பனை நிலையங்களை அமைப்பதற்கு உதவ முடியும் - என்றார்.

இவ்வைபவத்தில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.செல்வரத்தினம் உரையாற்றுகையில்:-

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அரச உதவிகளை எதிர்பார்க்காது சுயமுயற்சி மூலம் கிராமத்தின் தேவைகளை இனம்கண்டு நிறைவேற்ற முன்வரவேண்டும். வெளிநாட்டு அரச சார்பற்ற உதவி வழங்கும் நிறுவனங்கள் கடந்த ஆண்டுகளில் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு சுழற்சி முறையில் சுயதொழில் முயற்சிக்கான கடனுதவிகளை வழங்கியிருந்தன.

பல சங்கங்கள் இதன்மூலம் தங்களது உறுப்பினர்களுக்கு சுயதொழில முயற்சிக்குக்கடன்களை வழங்கக் கூடியதாக இருந்தது - என்றார்.

சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம், உதவித் திட்டமிடல் பணிப் பாளர் (மு.பாலசிங்கம், வலி. தென்மேற்கு பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர் ச.செல்வரத்தினம் ஆகியோர் உட்படப் பலர் இவ்வைபவத்தில் உரையாற்றினர். (எ-8-135)

### சாவகச்சேரியில் வீதி விளக்குகள்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு 10 வருடங்களின் பின்னர் மீண்டும் வீதி வெளிச்சம் வழங்கப்படவுள்ளது.

சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீதிகளுக்கு மேக்குறி மின் குமிழ்கள் பொருதப்படவுள்ளன என்றும் - இதற்கென பத்து லட்சம் ரூபாவினை நகரசபை செலவிடவுள்ளதாகவும் - நகரசபைச் செயலாளர் மு.செ. சரவணபவ தெரிவித்தார். (எ-117)

### அனுமதி அட்டை அனுப்பிவைப்பு

வடக்கு - கிழக்கு மாகாண அரச திணைக்களங்களில் பயிலுநர் பட்டதாரிகளை அரச முன்னுரிமை நடவடிக்கைக்காக ஆட்சேர்க்கப்பட்டு வேறு பதவியில் அமர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமைகாண் தடைப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பரீட்சை எதிர்வரும் மார்ச் 13ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

# நாகர்கோவிலிலிருந்து இடம்பெயர்ந்தோர் அடிப்படை வசதிகளின்றி அவதி

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வசித்து வரும் பொதுமக்கள் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி வாழ்வதாகக் கூறப்பட்டது.

கடந்த 2000ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளை அடுத்து நாகர்கோவில் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் பருத்தித்துறை, தும்பளை லூர்த்து மாதா கோவிலடி முகாம் மற்றும் தும்பளை இலட்சுமணன் முகாம், குடத்தனையிலுள்ள முகாம்களில் வசித்து வருகின்றனர்.

இவ்வாறு வசித்துவரும் இடம்பெயர்ந்த மக்களே சுகாதாரம், குடிதண்ணீர் வசதி இன்றியும், தொழில் வாய்ப்பு எதுவுமற்ற நிலையிலும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தம்மைச் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துமாறு கோரி போராட்டங்கள் நடத்தியும் பலனேதும் கிடைக்கவில்லை என்று இடம்பெயர்ந்த மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-36)

### உடற்பயிற்சிப் போட்டி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் உடற் பயிற்சிப் போட்டிகள் அடுத்த மாதம் ஐந்தாம் திகதி கொடிகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மைதானத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறும். (எ-117)

# தவக்காலச் சிந்தனை


## சோதனைகள் ஏணிப்படிகளே!

**ஐந்தாம் நாள்**

வீட்டிற்கு வீடு வாசற்படி போன்று ஒவ்வொருவர் வாழ்வும் சோதனைக்கு விதிவிலக்கல்ல. சிலர் வசந்தத்தில் வாழத்துடிக்கின்றனர். வரட்சியில் வாழ மறுக்கின்றனர். அதனால், சோதனையைவிட்டு ஓடுகின்றனர். வேறு சிலர் சோதனையில் துவண்டு விழுகின்றனர். இறைநூல் தரும் மாமனிதர்கள் சோதனைத் தீயினால் புடமிடப்பட்டு வேதனைக் கண்ணீர் மழையில் நனைந்து இறைவனுக்கு பிரமாணிக்கமுடையவர் என நிரூபிக்கப் படுகின்றார்கள். "முடி சூடவே இறைவன் சோதித்துப் பார்க்கிறார்" என்கிறார் புனித அம்புறோசியார். பாலைவனத்தில் சோதிக்கப்பட்ட இயேசு அலகையை வென்று வெற்றி வீரரானார். வாழ்வில் எப்போதும் வசந்தங்களை விரும்புபவர்கள் பெரிதாக எதையும் சாதிப்பதில்லை. மாறாக சோதனைகளை ஏணிப் படிகளாகவும் ஆற்றல்கள்- திறமைகளை வளர்க்கும் களங்களாகவும் உயர்வடைய சந்திக்கும் சந்தர்ப்பங்களாகவும் நோக்குபவர்கள் இருளின் பின் புலரும் விடியலை காண்கிறார்கள்.

- சுவாமி ஜீவா போல் அ.ம.தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அன்றே காசு

வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்புவதற்கு
மிகவும் இலகுவான, குறைந்த செலவிலான,
அதிக பாதுகாப்பான முறை
டோ டு டோ எக்ஸ்பிரஸ்.
இதனால் வெளிநாட்டில் வேலைபார்க்கும்
பெரும்பான்மையோர் டோ டு டோ எக்ஸ்பிரஸ்.
மூலம் பணம் அனுப்புகிறார்கள்.

**இப்போது டோ டு டோ எக்ஸ்பிரஸ்**
**முன்னரை விட முன்னேறி**
**அதி வேகத்துடன் செயற்படுகிறது.**
**வெளிநாட்டில் இருந்து அனுப்பும்**
**பணம் இப்போது மிகவும்**
**இரகசியமாக அன்றே கைவந்து**
**கிடைத்து விடுகிறது.**

**Door to Door EXPRESS**
வெளிநாட்டிலிருந்து அனுப்பும் பணம் அன்றே பாதுகாப்பாக கிடைக்கும்

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

மேலதிக தகவல்களுக்கு அருகிலுள்ள இலங்கை வங்கியில் அல்லது
தலைமை அலுவலகத்தில் திலக் அழகியவன்ன 2445792 அல்லது
உபாலி ரணசிங்க 2471616 அல்லது லக்சிறி விஜேரத்தின 2541933
உடன் தொடர்பு கொள்ளவும்.

PHOENIX O&M 2110

| | | | |
|---|---|---|---|
| வெ. | செவ். ராகு | சந். | சனி |
| சூ. புதன் | இராசிச் சக்கரம் | | |
| | | | வியா. |
| | | கேது | |

# இந்த வார இராசி பலன்

## 29.02.2004 - 06.03.2004

### மாற்றம்

29.02.2004 மிருகசீரிடம் - இடபத்தில் சந்திரன் நிற்கும். 01.03.2004இல் மேடத்தில் வெள்ளி மாறும். 04.03.2004 மீனத்தில் புதன் மாறும்.

தெற்கில் அரசியல் வன்முறைகளால் மக்கள் வேதனைப்படுவார்கள். வடக்கில் அரசியல்வாதிகளிடையே முறுகல் நிலை தோன்றும். தெற்கில் உள்ள இருபெரும் கட்சிகளிடையே பலத்த போட்டிகள் ஏற்பட்டு வடக்கு - கிழக்கில் பெரு வெற்றியீட்டும் கூட்டமைப்பினரின் உதவி கேட்கும் நிலை வருங்காலத்தில் தோன்றும். தமிழ்மக்களின் ஏகோபித்த ஒற்றுமையைக் காட்டும் தேர்தலாக 13ஆவது தேர்தல் அமையும். இந்திய அரசில் தேர்தல் போட்டிகள், சில தலைவர்களை இழத்தல், வன்முறை வெடித்தல் என்பனவும் மத்திய கிழக்கில் அழிவுகளும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பனி, வெய்யில் அதிகரித்து மக்கள் நோய்வாய்ப்படுவர் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

நீங்கள் கருமத்தில் கண்ணாக இருப்பீர்கள். அதனால் எவரும் ஏமாற்றமுடியாத நிலை. பணம் வரும், பகையும் வரும். தொழிலில் மேலதிகாரிகள் உதவுவார்கள். அடிக்கடி பிரயாண எண்ணம், உஷ்ண பீடைகள், வீடு மனைச் சிறப்பு, கட்டடப் பொருள் வரவு, கால்விறைப்பு என்பனவும் ஏற்படும் வியாபாரிகள் சிறப்பு அடைவர். பிரயாணத்தில் கஷ்டங்களும் மாணவர்களுக்கு வெற்றியும் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன்.*

### இடபம்

ஓடிஓடி உழைத்தாலும் மிஞ்சாது. பழைய பாக்கியொன்று தேடிவரும். அடிக்கடி அலைச்சல், தொழில் ஸ்தானத்தில் சிலர் வீண் வதந்தி பரப்புவார்கள். பிறருக்கு ஆலோசனை சொல்லி வீண் பழி கேட்பீர்கள். மெல்லமெல்ல புதிய திட்டங்களைப் புகுத்துவீர்கள். நாரிப்பிடிப்பு, சல வருத்தம் வருத்தும். சங்கீதத்துறை, மருந்துத்துறை, குருத்துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன்.*

### மிதுனம்

தேடிய செல்வம் போய்விடும் நிலை. எதிரிகளால் துன்பம், பயம் வரும். தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்து நடக்கும். பேசிப்பேசி காரியமாற்றுவீர்கள். புதிய வழியில் பணம் வரும். சகோதரர்களுக்காக ஓடியாடித்திரியும் நிலை, வீடு வாகனச் செலவுகள் அதிகரிக்கும். தொண்டை நோ, வாய்வுத் தொல்லை வரும். குளிரால் விறைப்புக் கொடுக்கும். சிறுகாயங்கள் வரலாம். பத்திரிகைத்துறை, ரீ.வி., டெக், கணனி, நடத்துநர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன்.*

### கடகம்

ஏன் அடிக்கடி கோவிக்கிறீர்கள். மற்றவர்களின் பிழைகளைத் தட்டிக்கேட்டு வீண் பகையைச் சம்பாதிக்காதீர்கள். அரசியல் பேச்சு அவலத்தைத் தரும். பொருள் வரும். தூரத்துப் பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். முயற்சிக்குத் தகுந்த இலாபங்கள் கிடைக்கும். வயிற்று வருத்தம், மனப்பயம், பிடிவாதம் கொடுக்கும். அரசியல் துறை, குருத்துறை, பத்திரிகைத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வியாழன், சனி.*

### சிங்கம்

அனபால் எல்லோரையும் வெல்லுவீர்கள். அரசியலில் உங்களுக்கு ஓர் இடம் கிடைக்கும். உசாராக, உறுதியாக மக்களின் அன்பைப்பெறுவீர்கள். வீடு, வாகன வசதிகள் வரும். தாய்வழியினர்கள் பொறாமையால் பிரச்சினை தருவார்கள். நரம்பு விறைப்பு, தோல் வருத்தம், கால் பிடிப்பு, நெஞ்சு நோ, இளைப்பு ஏற்படும். உடம்பைக் கவனித்துக்கொள்ளுங்கள். அரசியல்வாதிகளுக்கும், குருத்தொழில், சட்டத்துறை தொடர்பானவர்களுக்கும் நன்மை கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன்.*

### கன்னி

அரசியல் காலம் இரவில் வெளியில் திரியாதீர்கள். பணப் பிரச்சினை, இனஜன உதவிகள் கிடைக்கும். ஆளறிந்து பேசுங்கள். பிரயாணங்களை ஒத்திவையுங்கள். சளி, இடுப்பு நோ, கிருமித்தாக்கங்கள், காய்ச்சல் என்பன வரலாம். விட்டமின் C பாவிக்கவும். உயர்வு, இலாபங்களுக்காக போராடி வெற்றி அடைவீர்கள். புத்திரர், சகோதரர்களின் குறைகளைத் தீர்ப்பீர்கள். குருத்துறை, ரெலிபோன், செய்தித்துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், சனி.*

### துலாம்

வீட்டுப்பிரச்சினையை நாட்டுப்பிரச்சினையாக்காதீர்கள். அடுத்தவரை வம்புக்கு இழுத்து வீண் பகையை வளர்க்காதீர்கள். உங்கள் வீடு உண்டு, தொழில் உண்டு என இருக்கப்பாருங்கள். அடிக்கடி பொருமல் நிலை, எதிர்ப்பாலாருடன் முறுகல் நிலைவர இடமுண்டு. பொருள் வரவு உண்டு. குடும்பத்தினருக்கு நன்மைகள் கிடைக்கும். பறரின் நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். வியாபாரிகள், அரசியல் வாதிகள், ஆசிரியர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், சனி.*

### விருச்சிகம்

அடிக்கடி அரசியல் பேசிக் குழம்பியபடி இருப்பீர்கள். நண்பர்கள், எதிரிகளாக வரவாய்ப்பு உண்டு. பண வரவு மேலதிகாரிகளின் உதவிகள், பிரயாண வசதிகள், தூர தேசத்து நற்செய்திகள் என்பன கிடைக்கும். கிருமித்தாக்கம், விபத்துக்கள், கண் பாதிப்பு, பனியால் காய்ச்சல், விறைப்பு என்பனவர இடம் உண்டு. வியாபாரிகள், சந்தை வியாபாரிகள், உலோக வேலை, மேசன் வேலை, கட்டடப் பொருள் விற்பனையாளர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், சனி.*

### தனுசு

வாக்குத் தவறுதலால் குறைகேட்டு வேதனைப்படுவீர்கள். பண வரவு உண்டு. புதிய திட்டங்கள் வெற்றி தரும். மேலதிகாரிகள் உதவிகள் செய்து தருவார்கள். புதிய செய்திகள் வெளிநாடுகளிலிருந்து வரும். கால், நெஞ்சு நோ, பனியால் காய்ச்சல் விறைப்பு வரும். நண்பர்கள், இனஜன உதவிகள் கிடைக்கும். வைத்தியத்துறை, கட்டடத்துறை, செய்தி, புத்தகத்துறை, போட்டோப்பிரதி செய்வோர், கணனித்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், புதன், வியாழன், சனி.*

### மகரம்

தொழில் ஊக்கத்தால் வெற்றி கிடைக்கும். பண வரவு உண்டு. இடமாற்றங்கள் சகஜம். கொடுத்த பொருளால் வேதனை. எதிர்ப்பாலாரால் கஷ்டங்கள் வரலாம். பொருள் தவறுதல், அந்நியர்கள் உதவுவார்கள். புதிய பொறுப்புக்கள் வர இடமுண்டு. சளித்தொல்லை, விறைப்பு, கால் வருத்தம், தோல் சம்பந்தமான வருத்தங்கள் கொடுக்கும். அரசியல் துறையினர், வியாபாரிகள், குருத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன், சனி.*

### கும்பம்

புதிய துறைத் திட்டங்களால் நன்மைகள் கொடுக்கும். மேலதிகாரிகளின் சீற்றம் ஏற்படும். நண்பர்கள் உதவி செய்வார்கள். வாகனம், வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். புத்திரர்களின் நன்மைக்காக ஓடியாடித்திரிதல் என்பனவும் தொழில் நிலையில் புதிய பொறுப்புக்களும் கொடுக்கும். கால்நோ, சளி, சல வருத்தம் என்பன கொடுக்கும். வாகனத்துறை, அரசியல்துறை, வியாபாரிகள், சட்டத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், வியாழன், சனி.*

### மீனம்

முயற்சிக்குத் தகுந்தவகையில் வருமானம் கிடைக்கும். வெளிநாட்டுத் தொடர்புகளால் நன்மைகள் கொடுக்கும். புதிய வழிகளில் வருமானம் வரச் சந்தர்ப்பங்கள் கொடுக்கும். புத்திரர்களின் முன்னேற்றத்திற்காக அலைதல், எதிர்ப்பாலாரால் எதிர்புணர்வுகள் தோன்றும். இடமாற்றங்கள் சிலருக்குக் கொடுக்கும். நாரி உளைவு, சிறுநீரக வருத்தம், சல வருத்தம், காய்ச்சல் என்பன கொடுக்கும். வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன், சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

# தவறவிட்ட பாதைகளைச் செம்மையாக்கி புதிய வாழ்விற்கு அத்திவாரமிடுவோம்

**ஞாயிறு நற்பிரசாதம்**

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

கிறிஸ்தவ மக்களின் நோன்பின் காலமான தவக்காலம் கடந்த 25ஆம் திகதி விபூதிப் புதனுடன் ஆரம்பமாகியுள்ளது. சாம்பலை நெற்றியிலே தூவி "மண்ணாக இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய் மனம் திரும்பி நற்செய்தியை நம்பு" என்ற அழைப்பு வசனங்களுடன் கிறிஸ்தவ மக்கள் தவக்காலப் பயணத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் அவர்கள் உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்களை நோக்கி தம்முடைய தவக்காலச் செய்திச் சிந்தனைகளை அனுப்பி, இத்தவக்காலப் பயணத்தைச் செபத்தோடும், தபத்தோடும் தேவையில் இருப்போர் மேல் கரிசனையோடும் ஆரம்பிக்கும்படி அழைப்பு விடுத்துள்ளார். "சிறு பிள்ளை ஒன்றை என் பெயரால் ஏற்றுக்கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார்" என்ற நற்செய்தியின் வசனங்களை மேற்கொள்காட்டி இன்று சிறுவர்களுக்கெதிராக இழைக்கப்படும் எல்லாவிதமான அநீதிகளையும் களைந்து நாளைய ஒரு புதிய எதிர்காலத்திற்காக இச்சிறுவர்களை வைத்து ஒரு நல்ல அடித்தளம் இடும்படி அழைப்பு விடுத்திருக்கிறார்.

இயேசு ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார் என்ற, இயேசுவின் குழந்தைப் பருவம் பற்றிய லூக்காஸ் நற்செய்தியாளரின் மேற்கோளைக் காட்டி எமது குழந்தைகளும் இவ்வாறு வளர்ந்து வரவேண்டும் அப்போதுதான் நல்லதொரு சுபீட்சமான எதிர்கால உலகைக் கட்டியெழுப்ப முடியுமென அவர் சொல்லாமல் சொல்லுகிறார். நசரேத் ஊரில் ஒரு சாதாரண வீட்டிலே இயேசு தம் இளமைப் பருவ வாழ்வை வாழ்ந்தார்.

பெற்றோருக்குக் கீழ்ப்படிவு உள்ளவராக வளர்ந்து வந்தார். 12 வயதில் ஜெருசலேம் தேவாலயத்தில் அவர் தொலைந்து போனபோது, பெற்றோர்கள் அவரை மூன்று நாள்களாகத் தேடிக் கண்டுபிடித்து நிம்மதிப் பெருமூச்சு விட்டபோது, அவர் கூறிய வார்த்தைகளில் பரலோக தந்தையின் அழைப்பின்படி அவரின் அன்புப் பிள்ளைகளாக வாழும் வாழ்வு தமது வாழ்வு என்பதைத் தெளிவுபடுத்தினார். "ஏன் என்னைத் தேடினீர்கள்? என் தந்தையின் இல்லத்தில் நான் இருக்கவேண்டுமென்று உங்களுக்குத் தெரியாதா?" என்ற வசனங்கள் தமது வாழ்க்கை முழுவதும் பரலோக தந்தையின் மேல் தாம் வைத்திருந்த அன்பையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தும் வசனங்களாய் அமைந்திருந்தன.

தவக்கால முதலாம் ஞாயிறு சிந்தனை இயேசு பாலைவனத்தில் 40 நாள் நோன்பிருந்த பின் சோதிக்கப்பட்ட நிகழ்வை எடுத்துக் கூறுகிறது. பாலைவனத்தில் இயற்கையாகவே மூன்று தன்மைகளை சந்திக்கலாம். ஒன்று உணவற்ற நிலை, இரண்டு அதிகாரம் அற்ற நிலை, மூன்று கவனிப்பதற்கு யாருமற்ற நிலை. இந்த மூன்று நிலைகளை வைத்துத்தான் இயேசு சோதிக்கப்படுகிறார்.

முதலாவது நிலையில் "கற்களை அப்பமாக மாற்றி உண்ணும் உமக்குப் பசி எடுக்கிறதே" என்று முதலில் சாத்தான் சவால் விடுகிறான். "மனிதன் அப்பத்தினால் மட்டும் உயிர் வாழ்வதில்லை". இயேசு பதிலடி கொடுக்கிறார். இரண்டாவது நிலையில் அதிகாரம் அற்ற வெறுமையில் தன்னை வணங்கினால் உலகம் முழுவதையும் தன்னால் தரமுடியும் என கேலி செய்து நிற்கிறது சாத்தான். "உன் கடவுளாகிய ஆண்டவரை மட்டுமே வணங்குவாயாக" என்று பதில் கொடுக்கிறார் இயேசு. மூன்றாவது நிலையில் "கவனிப்பதற்கு யாருமற்ற தன்மையில் வானதூதர்கள் உம்மை வந்து தாங்கிக் கொள்ளுவார்கள். நீர் மேலிருந்து குதியும்" என வேண்டி நிற்கிறது. "உன் கடவுளாகிய ஆண்டவரை சோதியாதிருப்பாயாக" என்று இயேசு சாத்தானை விரட்டி விடுகிறார்.

தவக்காலம் எமது அனுபவங்களை, எமது துன்ப துயரங்களை, எமது மகிழ்வின் பொழுதுகளை சிந்தித்து எமது வாழ்வை வளப்படுத்த தரப்பட்ட காலமாகும். ஒவ்வொரு மனிதரும் தமது தனிப்பட்ட வாழ்வையும் தவறான வழிகளையும் தெளிவாக அறிவர். எங்கே திருந்த வேண்டும்? எப்படித் திருந்த வேண்டும்? என்பதை அவரின் தனிப்பட்ட வாழ்வை அறியாத ஒருவர் சொல்லித்தர முடியாது. தமது தனிப்பட்ட வாழ்வை சிந்திக்கவும் சீர்தூக்கிப் பார்க்கவும் [illegible] ★

# பளைப் பிரதேச சபைக்கு புதிதாக மாடிக்கட்டடம்

தென்மராட்சி, பெப்.29

பளைப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திற்கென 70 லட்சம் ரூபா செலவில் இரு மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத்திற்கான அடிக்கல் அண்மையில் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகத்தினால் நடப்பட்டது.

இக்கட்டட நிர்மாணத்திற்கு 'நர்ப்' நிறுவனத்தினர் நிதியுதவி வழங்கியுள்ளனர். பளைப் பிரதேச சபையின் தலைமை அலுவலகம் அமைந்திருந்த காணியிலேயே புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இக்காணியில் அமைந்திருந்த பிரதேச சபையின் தலைமை அலுவலகம், பொதுநூலக நிலையம் ஆயுர்வேத மருந்தகம், பாலர் பாடசாலை ஆகியவற்றின் கட்டடங்கள் கடந்த கால யுத்த நடவடிக்கைகளின் போது சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - பளை ஆயுர்வேத மருந்தகத்திற்கான புதிய கட்டடமும் 20 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இக்கட்டடம் அமைப்பதற்கு பளை பிரசவ விடுதிக்காணியில் ஒரு பகுதி கொள்வனவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)



ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனைக் கிராமத்தில் 'நியாப்' திட்டத்தின் உதவியுடன் உவர்நீர்த் தடுப்பு அணை ஒன்று நிறுவப்படவுள்ளது. இது தொடர்பாக நடைபெற்ற ஆரம்ப வைபவத்தில் விடுதலைப் புலிகளின் ஊர்காவற்றுறை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈழவேந்தன் மங்கல விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், மெலிஞ்சிமுனைக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கி.லக்ஷ்மன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222-2567

(குறிப்பு:- சத்திர சந்திக்கு அண்மையில்) (சி-33076)


## அனுமதிப்பத்திரமின்றி மரம் ஏற்றி வந்தோர் பொலீஸாரிடம் சிக்கினர்

தென்மராட்சி,பெப்.29

அனுமதிப் பத்திரமின்றி மரம் ஏற்றி வந்த டிராக்டரை சாவகச்சேரிப் பொலீஸார் நுணாவில் பகுதியில் வைத்துப் பிடித்துள்ளனர்.

இதுவிடயமாக மல்லாவியைச் சேர்ந்த சுப்பிரமணியம் ரூபன் என்பவரை சாவகச்சேரி நீதிமன்றில் பொலீஸார் ஆஜர் செய்தனர்.

இந்த நபரை 2 ஆயிரம் ரூபா ஆள பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான், வழக்கின் தீர்ப்பு வழங்குவதை எதிர்வரும் ஐந்தாம் திகதி வரை ஒத்தி வைத்தார். (எ-117)

## மகளிர் தினத்தை முன்னிட்டு விவாதப் போட்டி

யாழ்ப்பாணம்.பெப்.29

மகளிர் தினத்தை முன்னிட்டு மாவட்ட மட்டத்தில் விவாதப் போட்டியொன்றை நடத்துவதற்கு யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மகளிர் விவகார அமைச்சினூடாக நடத்தப்படவுள்ள இந்த விவாதப் போட்டி, நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இப்போட்டியில் பங்குபற்றி முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகளுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

முதலாம் இடத்தைப்பெறும் அணி எதிர்வரும் 7ஆம் திகதி மஹரகமவில் தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தில் நடைபெறும் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றும் இப்போட்டியில் ஆண், பெண் என இருபாலரும் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

## திருட்டுப்போன தளபாடங்கள் மீட்பு

செம்பியன்பற்று,பெப்.29

இயக்கச்சி அ.த.க. பாடசாலையில் இருந்து திருட்டுப்போன தளபாடங்கள் உடையார் கட்டில் வைத்துத் தமிழீழ காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 16ஆம் திகதி மேற்படி அ.த.க. பாடசாலையில் இருந்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் திருட்டுப் போயிருந்தன. இது குறித்து பாடசாலை அதிபர், பளை காவல் பணிமனையில் முறைப்பாடு ஒன்றையும் செய்திருந்தார். இதனை அடுத்துத் தளபாடங்கள் மீட்கப்பட்டுள்ளன. (எ-36)


## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்

பதிவு இலக்கம் J/82

ஆரம்பம் : 04.04.1936

**★இரவு பகல் சேவை★**

இந்த வைத்தியசாலை, 06.03.2004 சனிக்கிழமை நணபகல் 12 மணி தொடக்கம் பின்வரும் சேவைகளுடன் செயற்படவுள்ளது.

- ★ 24 மணி நேர வைத்திய சேவை
- ★ நோயாளர் விடுதி வசதி
- ★ வைத்திய நிபுணர்கள் சேவை
- ★ ஆய்வுகூட வசதிகள்
- ★ ECG, Scanning வசதிகள்
- ★ கண் வைத்திய சேவை

இவைகள் யாவும் யாழ்.போதனா வைத்தியசாலையைச் சார்ந்த வைத்திய கலாநிதிகளின் உதவிகளுடன் நடைபெறவுள்ளன.

தலைவர்,
மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை.

(C/33418)(35-16-12-31)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, பலாலி வீதிச் சந்திக்கு அருகாக, இருபாலை வீதியில் அமைந்துள்ள வாசிகசாலைக்குப் பக்கத்தில் இருக்கும் மோட்டோர் வாகனங்கள் திருத்தும் கராஜ்க்குப் பக்கத்தில் 12 அடிப்பாதையுடன் (இருபாலை வீதியில் இருந்து சுமார் 100 அடி தூரத்தில்) வீடு கட்ட, தோட்டம் செய்ய உகந்த 6 3/4 பரப்புக் காணி, கிணற்று நீர் வசதியுடன் விற்பனைக்கு உண்டு. இக்காணிக்கு கிழக்குப் பக்கத்திலும் 10அடி ஒழுங்கை இருப்பதுடன், இலகுவாக மின்சார வசதியும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:

மு.நவரட்ணராசா
தொ.பேசி.இல. 026-2221848

(28893)(35-12-16)

## பாதுகாப்பு அலுவலர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றில் பணிபுரிவதற்கு பாதுகாப்பு அலுவலர்கள், காவலாளிகள் தேவை.

விண்ணப்பதாரர்கள் இத்துறைகளில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் தகுந்த கல்வித்தரமும் உடையவர்களாக இருப்பது அவசியம்.

வயதெல்லை: 28 முதல் 50 வரை.

பொலீஸில் பணியாற்றியவர்களுக்கு வயதெல்லை பொருட்படுத்தப்படமாட்டாது.

கல்வித்தகைமைகள் மற்றும் அனுபவச் சான்றிதழ்களுடன், அண்மையில் உறவினர்கள் அல்லாத இருவரிடம் பெற்ற நற்சான்றிதழ்களுடனும் 02.03.2004 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

இல: 2180
மே/பா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/33481)(31-12-16)

## வீடு வாடகைக்கு உண்டு

சாவகச்சேரி, நுணாவில் மத்தி, கண்டி வீதியில், வைரவர் கோயிலுக்கு முன்னால், 5 பரப்புக் காணியில் அமைந்த 4 பெரிய அறைகளைக் கொண்ட "குமாரபவனம்" எனும் விஸ்தீரணமான வீடு, அரசாங்க மற்றும் தனியார் பிரத்தியேக நிறுவனங்களுக்கு வாடகைக்கு அல்லது குத்தகைக்குக் கொடுக்கப்படும்.

தொடர்பு:

டாக்டர் கு.ஹேமச்சந்திரன்.
026/2222342,
026/2223377. (28851)(35-16-12-31)

## சாரு எலெக்ரோனிக்

உங்கள் வீட்டின், T.V, Radio, CD, VCR, DVD, Computer monitor மற்றும் சகலவிதமான எலெக்ரோனிக் பொருள்களையும் சிறந்தமுறையில் உத்தரவாதம், நம்பிக்கையுடன் திருத்திப்பெற்றுக் கொள்ள சாரு எலெக்ரோனிக்

பலாலி வீதி, கோண்டாவில்.
தொ.இலக்கம்: 077-6153725

(28976)(37)

**Hi TONE® BOSS**

Sold Agent in Sri Lanka
Swedish Trading Audio Visual (Pvt) Ltd
#106, Dharmapala Mawatha, Colombo 7
Tel: 011 2699934 (5 Lines)




யாழ் விநியோகஸ்தர்:
**வீ.கே. ராஜரத்னம்**
#95, ஸ்டான்லி வீதி, யாழ்பாணம்
Tel: 021 2222056

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 28 - 09 - 1945

உதிர்வு 21 - 02 - 2002



**திருமதி சிற்றம்பலம் கமலவேணி**

திதி:29.02.2004

கோலம் போட்ட முற்றம் கொலுவிழந்து போனதம்மா!
நீயிருந்த காலம் எல்லாம் நிம்மதியாய்க் கழிந்ததம்மா!
அணையாத அகல்விழக்கே! அமைதி கொண்டாய் - நீயே!
கலங்கியே வாடுகின்றோம் கண்ணீரில் தேடுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!


இல.47, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி.

கணவர், மகள்,
மருமகன்.பேரத்தி.

(29006)(16-12-31)

## யாழ்.மக்களே! உங்களுக்கோர் அரிய வாய்ப்பு!

**உடனே விரையுங்கள்!**



**hager**

+ பிரான்ஸ் உற்பத்திகள்
+ 5 வருட உத்தரவாதம்



**DAVEY**

+ ஆஸ்திரேலிய உற்பத்திகள்
+ 2 வருட உத்தரவாதம்



Taps and Acceories.

dki

+ மலேசியா உற்பத்திகள்
+ பதிலீட்டு உத்தரவாதம் ஆயுள் முழுவதும்

Importer
General sales Co.Ltd
No 7, Station Road, Col-3
T.P 2574511

Distributor
Jaffna Electricals,
6, stanley Road,
Jaffna.

☎ 021-222 2353
021-222 5766
fax : 021-222 2552

(C/33321) (41-14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் பகுதியிலும் வாக்களிப்பு நிலையங்களை அமைக்கக் கோருகின்றது 'பவ்ரல்' அமைப்பு

வெளியாரின் அழுத்தமோ, அச்சுறுத்தலோ இன்றிச் சுயாதீனமாக வாக்களிக்கும் உரிமை ஒவ்வொரு பிரஜைக்கும் இருப்பது ஜனநாயக அரசியல் முறைமையில் முக்கியமான தேவைப்பாடாகும். ஆனால், கடந்த இரு தசாப்தங்களாக உள்நாட்டு யுத்தம் காரணமாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு இந்த உரிமை மறுக்கப்பட்டே வந்துள்ளது.

வடக்கு - கிழக்கைச் சேர்ந்தவர்கள் தங்களின் வாக்குகளை அளிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் எந்த அரசியல் கட்சியும் அங்கு போட்டியிடலாம் எனவும் புலிகள் இயக்கம் அறிவித்திருப்பதை நீதியும் சுதந்திரமுமான தேர்தலுக்கான மக்கள் செயலணியும் ('பவ்ரல்') தேசிய சமாதானக் கவுன்ஸிலும் வரவேற்கின்றன.

வடக்கு - கிழக்கு வாக்காளர்கள் வெளி அழுத்தங்களின்றித் தங்களின் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தும்படி நாம் தேர்தல் அதிகாரிகளைக் கோருகிறோம்.

கடந்த இரு தசாப்தங்களாக யுத்த நிலைமை காரணமாகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்களை- தேர்தல் அதிகாரிகளால் அமைக்கமுடியாமல் போயிற்று

ஆனால், இந்த யுத்த நிறுத்த காலத்தில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்கள், தங்களின் இடங்களிலேயே தேர்தல் திணைக்களத்தின் கண்காணிப்பின்கீழ் தங்கள் வாக்குகளை அளிக்கக் கூடிய நடைமுறை ஒன்றைத் தன்னுடைய தற்றுணிவு அதிகாரத்தைப் பயன்படுத்தி தேர்தல் ஆணையாளர் உருவாக்கவேண்டும் என நாம் அவரைக் கோருகின்றோம்.

இது நிறைவேற்றப்படுமானால், நாடாளுமன்றத்தில் தங்கள் பிரதிநிதியைத் தெரிவுசெய்வது தொடர்பாக பாரதீனப்படுத்த முடியாத தமது உரிமையைப் பிரயோகிக்கவும், சமாதான முயற்சிகளின் எதிர்காலம் தொடர்பான தங்கள் அபிலாஷைகளை வெளிப்படுத்தவும் அந்த வாக்காளர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வெளியில் கொத்தணியாக வாக்களிப்பு நிலையங்களை அமைக்கும் பழைய நடைமுறையானது, இப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தங்களின் வாக்குகளை அளிப்பதற்கு நீண்டதூரம் பயணஞ்செய்ய வேண்டிய நிலையை ஏற்படுத்தியது. நாட்டின் அப்பகுதியில் பொதுப் போக்குவரத்தும் சீர்கெட்டிருந்ததால் இந்த நடைமுறை மிக அதிருப்தியாக அமைந்தமை நிரூபிக்கப்பட்டது.

அத்தோடு, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வாக்காளர்களை, கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைந்த இடங்களுக்குச் செல்லவிடாமல் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி - மனம்போன போக்கில் - தடுக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

கடந்த காலத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் இதுபோன்ற சில நடவடிக்கைகள் மக்களின் வாக்களிக்கும் உரிமையை மீறிய செயல் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது.

எல்லா மக்களுக்கும் சட்டபூர்வமான வாய்ப்புத் தரும் விதத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் தேர்தலை எவ்வாறு சிறந்த முறையில் நடத்தமுடியும் என்பது குறித்து கலந்துரையாடும்படி நாங்கள் தேர்தல் ஆணையாளரைக் கோருகின்றோம்.

இந்த விடயத்தில் கலந்துரையாடலை இணைந்து நடத்திச் சாத்தியப்படச் செய்வதற்காக அரசினதும் புலிகளினதும் சமாதானச் செயலகங்களை அழைக்கும்படி நாம் சிபாரிசு செய்கிறோம்.

பாதுகாப்பான இடங்களில் வாக்களிப்பு நிலையங்கள் எங்கு அமைக்கப்படலாம் என்பதை அடையாளம் காண்பதற்காக கண்காணிப்புக் குழு, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் ஐ.நா அமைப்புக்களின் உதவியைக் கோரலாம். இந்த முகவர் அமைப்புக்கள் 'பவ்ரல்' அமைப்பின் பங்களிப்பை மேம்படுத்தும் விதத்தில் தேர்தல் கண்காணிப்புப் பணியையும் மேற்கொள்ளலாம்.

இந்தப் பகுதியில் தேசிய மற்றும் சர்வதேச கண்காணிப்பாளர்களும் பிரசன்னமாயிருப்பதன் மூலம் தேர்தல் அதிகாரிகளுக்கும் வாக்காளர்களுக்கும் பொதுமக்களுக்கும் தேர்தல் முடிவுகளின் சட்டபூர்வத் தன்மையை மள உறுதிப்படுத்தும் பணியை ஆற்ற முடியும்.

வாக்களிக்கும் உரிமைக்கு அப்பால்

நாடாளுமன்றத் தேர்தல்கள் சம்பந்தமாக சுயாதீனமாகப் பிரசாரம் செய்வதற்கு அரசியல் கட்சிகளுக்கு உள்ள உரிமை குறித்தும் -

அதன் மூலம் தமது அடிப்படை ஜனநாயக உரிமை தொடர்பான விடயத்தில் வாக்காளர்கள் சகலதையும் அறிந்துகொள்ளும் வசதியை ஏற்படுத்துவது குறித்தும் -

நாங்கள் கருத்தில் கொண்டுள்ளோம்.

நீதியானதும் நியாயமானதுமான தேர்தல் என்பது தேர்தல் தினத்தன்று அச்சுறுத்தலோ குளறுபடியோ இன்றி வாக்காளர்கள் வாக்களிப்பது மட்டுமன்றி முழுத்தேர்தல் பிரசாரக் காலத்திலும் என்ன நடக்கிறது என்பது சம்பந்தமானதுமாகும்.

வடக்கு - கிழக்கில் தேர்தல் பிரசாரம் நடத்த விரும்பும் எல்லா அரசியல் கட்சிகளும் அதனைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் செய்யக் கூடியதான பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்குமாறு நாங்கள் புலிகளைக் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படி ஒரு முடிவைப் புலிகள் எடுப்பது -

ஜனநாயக நடைமுறைகளின் மீது தங்களுக்குள்ள பற்றுறுதி குறித்து சமாதான முயற்சிகளின் ஆரம்பத்தில் தாங்கள் வெளிப்படுத்திய நிலைப்பாட்டுக்கு தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தின் பார்வையில் மேலும் சட்டபூர்வத் தன்மையையும் மற்றும் நம்பிக்கையையும் பெறுவதற்கு உதவும்

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிமால் கொலைச் சந்தேக நபருக்கு யாழ். மேல்நீதிமன்றம் பிணை

யாழ்ப்பாணம்,பெப்.29

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களில் ஒருவரான திருகோணமலையைச் சேர்ந்த பாலச்சந்திரன் உதயபவன் என்பவரைப் பிணையில் செல்ல யாழ். மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

சந்தேகநபர் சார்பில் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு மீதான விசாரணை நேற்று நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா முன்னிலையில் இடம்பெற்றது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சிற்றூழியர் தரத்தில் அல்லாதவர்களான 40 முதல் 50 வயதுக்குட்பட்ட நான்கு அரச ஊழியர்களின் ஒரு லட்சம் ரூபா பிணையில் சந்தேகநபரைச் செல்ல அனுமதிக்குமாறு யாழ. நீதிவான் நீதிமன்றுக்கு உத்தரவிட்டார் நீதிபதி. யாழ். நீதிவான் நீதிமன்றத்திலிருந்து அறிவித்தல் கிடைக்கும்போது தவறாது ஆஜராகுமாறும் சந்தேக நபருக்கு அவர் உத்தரவிட்டார்.

(ம-8)

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை தொடர்பாகச்

### வீடியோப் படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் ஜோன் ஹலஸ், ஜோய் பச்சிலர் ஆகியோரின் இணைநெறியாள்கையில் நாவலாசிரியர் ஜோர்ஜ் ஓர்வெல் எழுதிய 'விலங்குப் பண்ணை' நாவலின் திரை வடிவம் காண்பிக்கப்படும். அத்துடன், ஓவியர் 'கோபுலு' பற்றிய விவரணப்படமும் காண்பிக்கப்படும் என்றும் -

படக்காட்சியின் இறுதியில் அ.யேசுராசா, க.சட்டநாதன், ஏ.ஜே.கனகரட்னா ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் கலந்துரையாடல் இடம்பெறும் என்றும் -

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் அறிவித்துள்ளார். (எ)

# வடமராட்சி கிழக்கில் சவுக்குமரம் அழிக்கப்படுவதைத் தடைசெய்க!

## அரச அதிபருக்கு வளம்பேணல் சங்கம் கடிதம்

செம்பியன்பற்று,பெப்.29

வடமராட்சி கிழக்கில் சவுக்கு மரங்கள் அழிக்கப்படுவதைத் தடைசெய்யக்கோரி வடமராட்சி கிழக்கு வளம் பேணல் சங்கம் யாழ். அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் பாரிய சவுக்குமரங்கள் தறிக்கப்பட்டு விறகுக்காக எடுத்துச் செல்லப்படுவதைத் தினமும் காணக்கூடியதாகவுள்ளது. இதனால் சவுக்குமரக் காடுகள் அழிந்துபோகும் நிலை உருவாகியுள்ளது.

அண்மையில் மருதங்கேணி உதவி அரச அதிபரால் நடத்தப்பட்ட நடமாடும் சேவையின்போது வளம்பேணும் சங்கத்தினால் இது விடயமாக எடுத்துக்கூறப்பட்டது. எனினும் இதுவரை சவுக்குமரங்கள் அழிக்கப்படுவது குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வளம்பேணும் சங்கத்தினால் 30 ஏக்கரில் 40 ஆயிரம் சவுக்குமரக் கன்றுகள் நடுகைசெய்யப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகிறது. 30 கூலியாள்களைப் பயன்படுத்தி ஒரு லட்சம் ரூபா செலவில், இந்தப் பராமரிப்புப் பணி நடைபெற்று வருகின்றது. தினமும் பாரிய சவுக்குமரங்கள் அழிக்கபட்டு வருவதனால் தொடர்ந்தும் சவுக்குமர நடுகையும் பராமரிப்பும் நிறுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே, தயவுசெய்து இவ்விடயத்தில் உடனடியாகத் தலையிட்டுச் சவுக்குமரங்கள் அழிக்கப்படுவதை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று அதில் உள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் மருதங்கேணி உதவி அரச அதிபர், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் பொறுப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(எ-36)

# மானிப்பாய் ~ கைதடி வீதியில் மரக்கிளைகளால் மின்தடை

கோப்பாய்,பெப்.29

மானிப்பாய் - கைதடி வீதியில் பெரிதாக வளர்ந்துள்ள இலவம் மரங்களினால் இப்பகுதிகளில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதாகப் பொதுமக்கள தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.

1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடுகைசெய்யப்பட்ட இலவம் மரங்கள் தற்போது படர்ந்து பாரிய மரங்களாக மாறியுள்ளன.

- இவ்வாறு படர்ந்து வளர்ந்துள்ள இலவம் மரங்களின் கிளைகள் அடிக்கடி முறிந்து மின்சார வயர்களுக்கு மேல் வீழ்வதாகவும் -

இதனால், மின்கம்பிகள் அறுந்து மின்விநியோகத் தொடர்புகள் பாதிக்கப்படுவதுடன் வீதியால், பயணஞ்செய்பவர்களும் பெரும் ஆபத்தைச் சந்திக்கவேண்டியுள்ளதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இவ்வாறு கிளை முறிந்து வீழ்ந்தபோதும் தெய்வாதீனமாக எவரும் பாதிக்கப்படவில்லை என்றும் - கூறப்பட்டது.

எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் இவற்றினை உரியமுறையில் பராமாப்புச்செய்து தரவேண்டுமென பொதுமக்கள் கேட்டுள்ளனர். (எ-72)

# நூல் வெளியீடு

வடமராட்சி,பெப்.29

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளரும், அகில இலங்கை இளங்கோ கழகத்தின் அமைப்பாளருமான பரா.ரதீஸ் எழுதிய "அவன் ஒரு மெழுகுவர்த்தி" என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புற்றளை மகா வித்தியாலயத்தில் மஹாகவி அரங்கில் சி.வ.முகுந்தன் தலைமையில் நடைபெறும்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் சிவஸ்ரீ.தியாகசோமாஸ் கந்தராஜக் குருக்களின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை வருகைநிலை விரிவுரையாளர் கலாநிதி இ.முருகையன் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, அதிபர் திருமதி ச.இந்திரராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள்.

நூல் அறிமுகவுரையை இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர் எம்.எஸ்.அமரசிவமும், ஆய்வுரையை க[illegible] பத்மநாதனும் நிகழ்த்துவார்கள்.

(ம-173)

## மணல் கடத்தப்படுவதாக முறைப்பாடு

தென்மராட்சி,பெப்.29

வரணிப்பகுதியிலிருந்து சட்ட விரோதமாக அகழப்படும் மணல் வாகனங்களில் கப்புதூ ஊடாகப் புத்தூர், ஆவரங்கால பகுதிகளுக்குக் கொண்டுசெல்லப்படுவதாக இப்பகுதி மக்கள் தென்மராட்சி பிரதேச செயலருக்கு முறையிட்டுள்ளனர்.

இப்பகுதியூடாக வாகனங்களில் மணல் கொண்டு செல்வதைத் தடுக்குமாறு [illegible] சகளை தென்மராட்சி பிரதேச செயலர் கோரியுள்ளார். (எ-117)







மாதகல் லூர்து அன்னை 'கெபி'யில் நீண்டநாள்களின் பின்னர் வருடாந்தத் திருவிழா அண்மையில் சிறப்புற நடைபெற்றது. தேரில் லூர்து அன்னையின் திருவுருவம் ஊர்வலமாக எடுத்து வரப்படுவதை முதலாவது படத்திலும் -

வழிபாட்டில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் -

திருவிழா அன்றிரவு கெபிக்கு அண்மையில் ஏ.யேசு அண்ணாவியாரின் நெறிப்படுத்தலில் மேடையேற்றப்பட்ட 'சகோதர பாசம்' நாட்டுக்கூத்தின் ஒரு பகுதியை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

*(படங்கள்: மாதகல் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புலோலி தெற்கு, உபயகதிர்காமத் திற்கு அண்மையில் இருபெரிய தேக்கு மரங்கள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.சி.சிவசுப்பிரமணியம், ஆங்கில ஆசிரியர், இல.51,முதலாவது ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப் பாணம். (சி-33426)

'குக்கஸ் பானியல்' நாய் 8 மாதம், ஆபிரிக்கன் லவ்பேட்ஸ் மற்றும் மொஸ கோலிய வாத்துக்கள் என்பன விற் பனைக்கு உண்டு. தொடர்பு: K.பாலச் சந்திரன், சென்ற் ஆன்ஸ் சேச் லேன், சுதுமலை தெற்கு, மானிப்பாய்.(28981)

பாவித்த LML Select II Scooter, Mountain Cycle என்பன விற் பனைக்குண்டு. ஞாயிறு மட்டும் பார்வை யிடலாம். தொடர்பு: Dr.T.சிவபாதம், இல.32, ஆடியபாதம் வீதி, திருநெல் வேலி (நல்லூர் ப.நோ.கூ. சங்கக் காரியாலயம் முன்பாக). (28988)

மிகவும் நல்ல நிலையில் உள்ள புதிய மொடல் Yamaha News Mate - 50 (Japan) நீல நிறம் மோட்டார் சைக்கிள் உடன் விற்ப னைக்குண்டு. தொடர்பு: 125, பருத் தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப் பாணம் (யாழ். மாநகராட்சி மன்றம் முன்பாக). (28984)

கலர்மீன்கள், புதியவகை மீன் தொட்டிகள், மோட்டர்கள், அழகுப் பொருள்கள், லவ்பேட்ஸ் கூடுகள், பூங்கன்றுகள், பூச்சாடிகள். விற்ப னைக்குண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப் பாணம். (27846)

## கார் விற்பனைக்கு

9ஸ்ரீ தொடரிலக்கமுடைய சொந் தத் தனிப்பாவனையில் உள்ள Lancer(Japan) Car உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 021 222 2982. (29025)

## பி(F)ஞ்சர்ஸ் விற்பனைக்கு

சாதாரணம் (சோடி) ரூபா 500, கலந்த நிறங்கள் சோடி ரூபா 600. விற்பனை. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இரவு 7 மணிக்குப் பின் தொடர்புகொள்ளவும்.
T.P.: 0777 - 222305. (28998)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் இலவச மாக சுத்தம்செய்து கொடுக்கப்படும். தொடர்பு: பரஞ்சன், கலைவாணி வீதி, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. (28894)

## புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

வடமாகாணத்தின் காலநிலைக்கு நன்கு நிறைதரக்கூடிய புதிய இனப் புறொயிலர் குஞ்சுகளை அறிமுகப் படுத்துகின்றோம். இன்றுமுதல் பெற் றுக்கொள்ளலாம். மொத்தமாகப் பெறு வோருக்கு விசேட கழிவு உண்டு. தொடர்பு: பாலா,18, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 6875. (29042)

## சோடினைப் பந்தல் விற்பனைக்கு

40 அடி சோடினைப் பந்தல், புதிய மணவறை என்பன விற் பனைக்கு உண்டு. எந்நேரமும் பார் வையிடலாம். தொடர்பு: S.தயா, இணுவில் சந்தி, இணுவில். (29043)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சு கள் 40/-. Prima பேட்டுக் குஞ்சுகள் 60/-. 01-03-2004 பிற்பகல் விநியோ கிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். பருத்தித்துறைக் கிளை யிலும் பெற்றுக்கொள்ளலாம். (நல் லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (28640)

## தவறிவிட்டது

கொக்குவில் மேற்கு, கொக்கு விலைச் சேர்ந்த விக்னேஸ்வரன் நித் தியவராகினி என்பவருடைய தே.அ. அ. (இல.837644496V) 19.02.2004 அன்று யாழ். போதனா வைத்திய சாலைக்கு முன்பாகத் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பெத்தானிய சபை, குளப்பிட்டிச் சந்தி, கொக்கு வில் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (29027)

கைதடி வடக்கைச் சேர்ந்த குரு சாமி ஐயர் சிவகுமாரசர்மா என்பவரு டைய மோட்டார் சைக்கிள் ஆவணங் கள், சாரதி அனுமதிப்பத்திரம் என பன அடங்கிய பை திருநெல்வேலிச் சந்தி ப.நோ.கூ.சங்கத்துக்கு முன் பாக 24.02.2004 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி ப.நோ. கூ.சங்கத்தில் அல்லது கைதடி ப.நோ. கூ.சங்கத்தில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (29026)

திருநெல்வேலியைச் சேர்ந்த க. சுஜிதா என்பவருடைய உடுபுடவை கள் அடங்கிய மஞ்சள் நிறப்பை (Bag) 26.02.2004 அன்று யாழ். பஸ் நிலையத்தில் (769 மினிபஸ்ஸில்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 15/15, மாரியம்மன் வீதி, திருநெல் வேலி என்னும் முகவரியில் ஒப்படைத் துதவவும். T.P.:0712-358064.(29014)

## கையடக்கத்தொலைபேசி தவறிவிட்டது

திரு.இ.இராஜாராமின் மோட்ட றோலா தொலைபேசி 27.02.2004 வெள்ளிக்கிழமை தாவடிக்கும் யாழ். பிரதான வீதிக்குமிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங் கப்படும். திரு.இ.இராஜாராம், சுது மலை வீதி, தாவடி (வழக்கறிஞர் மதியாபரணம் வீடு). T.P.: 222 6294, 222 2347 (29052)

## திருமண சேவை

1975, திருவாதிரை, 7 இல் செவ் வாய், 90 பாவமுள்ள Swiss மண மகனுக்குப் பொருத்தமான, அழகிய மணமகள் தேவை (வந்து திருமணம செய்வார்). தொடர்பு: துரைவிமலா, இலகு திருமணசேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (29020)

## மணமகள் தேவை

யாழ். உயர்குலத்தைச் சேர்ந்த, 1960 ஆனி 25 இல் பிறந்த, புனர்பூசம 2ஆம் பாதம், பிரான்ஸில் பிரஜாவுரி மையுடையவருக்கு படித்த, அழகிய, தொழில்புரிகின்ற, 1968 இற்கு பின் பிறந்த மணமகள் தேவை. ஜாதகம், புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். வி.இல.2181, மே/பா உதயன்.(28968)

யாழ். இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த, பேராதனை சிவில் பொறியியல் பட்டதாரியும் அரசாங்க ஸ்தாபனத்தில் பதவி வகிக்கும் 32 வயது, விசாகம் 2 ஆம் கால் மண மகனுக்குப் பொருத்தமான, M.B.B.S. இறுதியாண்டு அல்லது தொழில்புரி யும் அதே குலத்தைச் சேர்ந்த மண மகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின் றனர். தொடர்பு: து.இரத்தினசிங்கம், ஊரெழு வடக்கு, சுன்னாகம். T.P.: 0777 287166. (28995)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த, 1971இல் பிறந்த, உதயத்துச் செவ்வாய், U.K. இல் Work Permit இல் தொழில்புரியும் ஸ்பொன்சர் செய்யக்கூடிய M.Sc. பட்டதாரி மணமகளுக்கு, நற்குண முள்ள பட்டதாரி மணமகன் தேவை. ஜாதகம, புகைப்படத்துடன் தொடர்பு: விள. இல.:2171, C/O உதயன். (28692)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி பல்கலைக் கழகத்துக்கும், மக்கள் வங்கிக் கும் அருகில் கிழக்குப் பக்க மாகப் பரமேஸ்வரா ஒழுங்கை யும், தெற்குப் பக்கம் கை ஒழுங் கையும் கொண்ட 4பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு :
த.கனகலிங்கம்,
67/43, தர்மலிங்கம் அவனியு,
கொட்டடி, யாழ்ப்பாணம். (29005) (41)

## பில் கிளார்க் தேவை

*சுன்னாகத்தில் இயங்கும் ஸ்ரூடியோ ஒன் றிற்கு பில் கிளார்க்கும் வெளிப்புறப் படப் பிடிப்பாளரும் தேவை. பழக ஆர்வமுள்ள வர்களும் விண்ணப்பிக்கலாம்.*
விளம்பர இல. 2182
(29038) மே/பா உதயன். (24-11-16)

## சாரமரம் முறிந்ததில் கட்டடத் தொழிலாளி படுகாயம்

தென்மராட்சி,பெப்.29

சாரமரம் முறிந்ததால் கீழே வீழ்ந்து கட்டடத் தொழிலாளி காய மடைந்த சம்பவம் கடந்த வியாழ னன்று காலை மீசாலை வடக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கிருஷ் ணசாமி மாணிக்கராசா (வயது 60) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (எ-117)

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தசாமி சண்முகசுந்தரம்பாள்

தொட்டிலடி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி சண்முகசுந்தரம்பாள் 27.02.2004 வெள் ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், திருமதி க.புஸ்பராணி, திருமதி இ.நாகேஸ்வரி, காலஞ்சென்ற க.செல்வ மலர் மற்றும் க.சிவலிங்கநாதன் (மலேசியா), க.கமலநாதன் ஆகியோ ரின் அன்புத் தாயாரும் வ.கந்தையா, நா.இராசரத்தினம், சி.அனுஷியா, ஆகியோரின் அன்பு மாமியாரும் க.அஜந்தினி, தினேஸ்குமார், சிவா ஜினி,யமினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.02.2004) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சிவலிங்கநாதன் (மகன்)

தொட்டிலடி,
சங்கானை. (29037)(35-11-16-24)

விவசாய சம்மேளனத்தின் உதவியுடன்

# சுதுமலை பெருங்குளம் இவ்வருடம் புனரமைப்பு

வலி.தெற்கு,பெப்.29

உலக உணவுத் திட்டத்தின்கீழ் உடுவில் கமநலசேவைப் பிரிவில் உள்ள சுதுமலைப் பெருங்குளம் இவ்வருடம் புனரமைப்புச் செய்யப்பட வுள்ளது.

உடுவில் கமநல சேவை நிலை யத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சுதுமலை வடக்கு, தெற்கு விவசாய சம்மேளனத்தினர் மனிதவலுவைக் கொண்டு இக்குளத்தைப் புனரமைப் புச் செய்வதற்கு இணக்கம் தெரி வித்ததைத் தொடர்ந்து குளப் புன ரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளன. (ஐ-152)

## பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்
## குடியியல் நடவடிமுறைச் சட்டக்கோவையின் 16இன் கீழான
# அறிவித்தல்

கிருஷ்ணபிள்ளை வர்ணபாலசுந்தரம்,
நெற்கொழு கிழக்கு, வல்வெட்டித்துறை.
- வழக்காளி

வழ.இல.: 17924/காணி

எதிர்

1. துரைச்சாமி செல்வராசா,
கொம்மாந்தறை, வல்வெட்டித்துறை.
2. கந்தசாமி சதீஸ்,
கொம்மாந்தறை, வல்வெட்டித்துறை.
3. நகர சபை,
வல்வெட்டித்துறை.

- எதிராளிகள்

மேற்படி வழக்காளி இம்மன்றில் எதிராளிகளுக்கெதிராக காணி வழக் கொன்றைத் தொடர்ந்து இதன்பின் ஆதன அட்டவணையில் விவரிக் கப்படும் ஆதனத்தின் உரித்தாளரும், சொந்தக்காரரும் வழக்காளி என்ற பிரகடனமும், எதிராளிகளைக் குறித்த ஆதனத்திலிருந்து வெளியேற்றும் கட்டளையும் மற்றும் நட்டமும் கோரியுள்ளார்.

வழக்காளியின் கோரிக்கை தொடர்பாகத் தங்களையும் இவ்வழக்கில் ஒரு கட்சிக்காரராகச் சேர்க்கவேண்டுமென விரும்பும் அக்கறை உடையவர் கள் எவரேனும் இருப்பின் 2004ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இம்மன்றில் தோன்றித் தமது அக்கறையை வெளிப்படுத்துமாறு இத்தால் அறிவித்தல் விடப்படுகின்றது.

2004ஆம் ஆண்டு மாசி மாதம் 26 ஆம் திகதி.

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று, உடுப்பிட்டி இறை, "அவையத்தாபுலம்" நி.பர. 47 தென்னைகள், பனைகள், கிணறுகளும் இதில் சொரியலான 2/3 பாகத்துக்குப் பதிலாக நிந்தமாக ஆட்சிப் பண்ணிய நி.பர. 31 குளி 6 ஆறு. இதற்கு எல்லைகள் கிழக்கு திருஞானசம்பந்தர் வேலுப்பிள் ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு இதன் மிகுதியாதனம், மேற்கு பொன்னம்பலம் புண்ணியமூர்த்திக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு சின்னையா கிருஷ்ணபிள்ளையின் ஆதனம், இவ்வெல்லைக்குட் பட்டவைகள் அனைத்தும்.

*வரைவு*
ந.தங்கராசா
வழக்காளி சட்டத்தரணி. (29044) (24-14)

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
பருத்தித்துறை.


PRINCE
துருபிடிக்காத உலோக கிச்சன் சின்க்
பிரின்ஸ்
நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கள்
பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சின்குகளைவிட விசேஷமானது.


ஏக விநியோகஸ்தர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
காட்சியறை: 516, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 324261-5, 337283-5, 436779 பெக்ஸ்: 446554
295, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 575666
விநியோகஸ்தர்:
நியூலக்கி கட்டடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி அதிகாரம் தொடர்பான போர் தொடங்கிவிட்டது

**இதுவரை இந்நாட்டை ஆண்ட எந்தவொரு தலைவரும் இரண்டு தடவைகளுக்கு மேல் நாட்டை ஆளவில்லை. 2005 ஆம் ஆண்டுடன் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியின் 2 ஆவது தடவை முடிவடைகிறது. இருப்பினும் தனது அரசியல் வாழ்வின் ஆயுட்காலத்தை நீடிக்க அவர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். அவரது கனவுகள் மற்றும் சாத்தியங்கள் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. லங்காதீப நாளிதழில் வெளியான உப்புல் ஜோசெப் பெர்னாண்டோவின் கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**





இந்தப் போட்டி ஐ.தே.கட்சிக்கும் ஸ்ரீல.சு.கட்சிக்கும் ஜே.வி.பிக்குமான போட்டி அல்ல. இது சந்திரிகாவுக்கும் - ரணிலுக்கும் - ஜே.வி.பிக்குமிடையேயான போட்டியாகும். இந்தப் போட்டியானது எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதியுடன் முடிவடையும் போட்டி அல்ல. அடுத்துவரும் வடமேல் மாகாண சபைக்கான தேர்தல், மாகாண சபைகளுக்கான தேர்தல் ஆகிய தேர்தல்களை அடுத்து ஜனாதிபதித் தேர்தல் வரை இந்தப்போட்டி தொடரும். இது 2005 ஆம் ஆண்டிலேயே முடிவுக்கு வரும். இந்தப் போட்டி இன்று நேற்று ஆரம்பமாகவில்லை. இற்றைக்குச் சரியாகப் 10 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற மாகாண சபைகளுக்கான தேர்தல்களுடன் இந்தப் போட்டி ஆரம்பமானது.

சந்திரிகா ஸ்ரீல.சு.கட்சியின் தலைமைக்கும், நாட்டின் தலைமைக்குமான சந்திரிகாவின் போட்டி 1994 மாகாண சபைகளுக்கான தேர்தல்களின் போதே ஆரம்பித்தது. துரதிர்ஷடமான ஆரம்பம் என அத்தேர்தலை சந்திரிகா கருதினார். அவர் கருதியது சரியே. அது ஐ.தே.கட்சியின் துரதிர்ஷ்டத்தின் ஆரம்பமாகும். தென மாகாண சபைக்கான தேர்தலில் ஐ.தே.கட்சி தோல்வியடைந்தது. நான்கு மாதங்களின் பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் ஐ.தே.கட்சி தோல்வியடைந்தது. சில மாதங்களின் பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சி ஜனாதிபதிப் பதவியைப் பறிகொடுத்தது. அவ்வேளையில், ஐ.தே.கட்சியின் பயணம் முடிவுக்கு வந்தது. சந்திரிகாவின் பயணம் ஆரம்பமானது.

அடுத்த மாதத்துடன் அந்தப் பயணம் ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகளாகின்றன. 10 ஆண்டுகளுக்கு முன்னர் சந்திரிகாவால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 2005 ஜனாதிபதித் தேர்தலுடன் முடிவடையவுள்ளது. இருப்பினும், அந்தப் போராட்டத்தை அத்துடன் முடித்துக்கொள்ளச் சந்திரிகா தயாராயில்லை. 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை தவிர்த்துப் போராட்டத்தை தொடர்ந்து மேற்கொள்வதே அவரது தேவையாகும். வேறு விதத்தில் கூறுவதாயின் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை ஒழித்து ஸ்ரீல.சு.கட்சியின் தலைமையைத் தக்க வைத்திருப்பதேயாகும். அவரது அந்த எண்ணம் நிறைவேற வேண்டுமாயின் அவர் ஏப்ரல் 2 ஆம் திகதி வெற்றி பெற்றேயாகவேண்டும்.

## ரணிலின் போராட்டம்

ஐ.தே.கட்சியின் தலைமைப் பதவிக்கும் நாட்டின் தலைமைப் பதவிக்கும் ரணிலும் 1994 களிலேயே தனது போராட்டத்தை ஆரம்பித்தார். அப்போது தென் மாகாணச் சபைக்கான தேர்தல் நடைபெறவிருந்தது. அப்போது ரணிலும் பிரதமர் பதவியை வகித்தார். கட்சியின் தலைமைப் பதவி மற்றும் ஜனாதிபதிப் பதவி ஆகியனவற்றுடன் அவரது போராட்டம் முடிவடையவிருந்தது. தென்மாகாண சபைக்கான தேர்தலை (1994) எதிர்கொள்ள ரணில் தயாரானார். அந்தத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வி காரணமாக ஐ.தே.கட்சியின் செயலாளர் சிறிசேன கூரேயின் பயணம் முடிவடைந்தது.

1994 பொதுத் தேர்தலையடுத்து ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவின் பயணமும் முடிவுக்கு வந்தது. 1994 ஜனாதிபதித் தேர்தலுடன் காமினி திசாநாயக்காவின் பயணமும் (வாழ்க்கையும்) முடிவடைந்தது. ரணில் ஐ.தே.கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றார். 2001 இல் பிரதமர் பதவி கிடைத்தது. ஆனால், நாட்டின் தலைவராக ஜனாதிபதி பதவி கிடைக்கவேண்டும். இது ஜனாதிபதிப் பதவிக்கான அவரது போராட்டத்தின் ஆரம்பமாகும்.

## ஜே.வி.பியின் புத்துயிர்ப்பு

றோகண விஜேவீர மற்றும் அவரது அரசியல் சகாக்களின் மரணத்தின் பின்னர் காணாமற்போன ஜே.வி.பி. மீண்டும் 1994 இல் நடைபெற்ற தென்மாகாண சபைக்கான தேர்தலுடன் புத்துயிர் பெற்றது. ஐ.தே.கட்சியின் முடிவின் ஆரம்பத்தை உறுதிப்படுத்தும் சந்திரிகாவின் போராட்டத்திற்கு ஜே.வி.பி. திரைமறைவில் இருந்தவாறு ஒத்துழைப்பை வழங்கியது. இருப்பினும், சந்திரிகா தென் மாகாண சபைக்கான தேர்தல் வெற்றியை வர்த்தக சமூகத்தினருக்குத் தாம்பாளத்தில் வைத்து வழங்கிவிட்டார் எனக்கூறி ஜே.வி.பி. உறவை முறித்துக்கொண்டது.

ஆனால், சந்திரிகாவை ஜனாதிபதிப் பதவியில் அமர்த்த ஜே.வி.பி. பாடுபட்டது. நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் என சந்திரிகா அளித்த வாக்குறுதியின் பேரில் ஜே.வி.பி. ஒத்துழைப்பை வழங்கியது. அந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படாததையடுத்து மீண்டும் ஜே.வி.பி. சந்திரிகாவிடம் இருந்து தூர விலகியது. இருப்பினும், 1994 இல் நடைபெற்ற தென்மாகாண சபைக்கான தேர்தலின் போது கிடைத்த மக்கள் ஆதரவை நாடளாவிய ரீதியில் அதிகரிக்கும் முயற்சியில் வெற்றிபெற்றுள்ளது. 1994 இல் ஒரு நாடாளுமன்ற ஆசனத்தை மட்டுமே பெற்ற ஜே.வி.பி., தற்போது 16 ஆசனங்களாகப் பெருக்கிக்கொண்டுள்ளது. இந்தப் 16 ஆசனங்களைப் பெற்றுள்ள நிலையில், அது மீண்டும் சந்திரிகாவுடன் இணைந்து வர்த்தக சமூகத்தினரைச் சந்தித்து தாம் அமைக்கப் போகும் அரசின் பொருளாதாரக் கொள்கை குறித்து ஆராய்ந்துள்ளது.

1994இல் தென்மாகாண சபைக்கான தேர்தலில் வெற்றிபெற்றவுடன் சந்திரிகாவும் இதையே செய்தார். இதற்காக அன்று சந்திரிகாவை விட்டுச் சென்ற ஜே.வி.பி. இன்று சந்திரிகாவுடன் இணைந்து அதையே செய்கிறது. இன்று சந்திரிகா தனது போராட்டத்தை நீடிப்பதற்காக ஜே.பி.வி.யின் ஒத்துழைப்பை நாடியுள்ளார். நாட்டின் முக்கிய கட்சிகளில் ஒன்றாக வளர்வதற்காக ஜே.வி.பி. அந்த ஒத்துழைப்பை வழங்குகிறது.

## ஜே.வி.பியின் ஊடுருவல்

ஸ்ரீல.சு.கட்சிக்குள் ஊடுருவி, அதனுள் பெரும்பான்மையினராக வளர்ந்து பிரதமர் பதவியையோ அல்லது எதிர்கட்சித் தலைவர் பதவியையோ தம் வசமாக்கி, நாட்டின் தலைமைப் பதவிக்கான போராட்டத்தில் ஈடுபடுவதே ஜே.வி.பியின் நோக்கமாகும். 1994இல் தென்மாகாண சபைத் தேர்தலில் வெற்றியைப் பெற்றுக்கொடுத்தே ஜே.வி.பி. இன்று அந்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளது. சந்திரிகாவின் அரசியல் நடவடிக்கைகளின் ஆயுள் காலம் நீடிப்பதானது ஜே.வி.பியின் போராட்டத்தின் முடிவின் ஆரம்பமாகும். சந்திரிகாவின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்வதாயின் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேணடும். 2005இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறக்கூடாது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறக கூடிய வேட்பாளர் எவரும் ஜே.வி.பியில் இல்லாதிருப்பதே இதற்குக் காரணமாகும். 1994, 1999 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு ஜே.வி.பி. அந்தப் பாடத்தைக் கற்றுக் கொண்டுள்ளது.

அந்த ஜனாதிபதித் தேர்தல்கள் இரண்டிலும் ஜே.வி.பி.போட்டியிட்டு படுதோல்வியடைந்தது. 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் முடிவு இதுவாகவே அமையும் என்பதை ஜே.வி.பி நன்கு அறியும். நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதிப் பதவி கிடைக்காத ஒன்று என்பதையும் ஜே.வி.பி அறியும். எனவே, அந்தப் பதவியை இல்லாதொழிப்பதே ஜே.வி.பியின் தேவையுமாகும். அப்போது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டிய தேவையோ அதன் மூலம் படுதோல்வியடைய வேண்டிய நிலையோ ஜே.வி.பிக்கு ஏற்படாது. 2005 ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக சந்திரிகாவுக்கு உள்ள அச்சம் ஜே.வி.பிக்கும் உள்ளது. எனவே தான், ஏப்ரல் 2ஆம் திகதியைக் குறிவைத்து ஜே.வி.பி. நடத்தும் போராட்டமும், சந்திரிகா நடத்தும் போராட்டமும் வெவ்வேறானவை அல்ல. இரண்டும் ஒன்றே. ஸ்ரீல.சு.கட்சிக்குள் ஊடுருவி அதைக் கைப்பற்றிப் பின்னர் நாட்டின் அதிகாரத்தைக கைப்பற்றுவதே ஜே.வி.பியின் தேவையாகும்.

இதற்காகவே ஜே.வி.பி.போராட்டத்தை நடத்துகிறது.

இந்தப் போராட்டத்தில் சந்திரிகா வெற்றிபெற்றால்,

✪ ரணிலின் தலைமைக்கு கட்சிக்குள் அச்சுறுத்தல் உருவாகும்.

✪ ஐ.தே.கட்சிக்குள் மோதல்கள வெடிக்கும்.

✪ ஐ.தே.கட்சி உடைந்து அதில ஒரு குழுவினர் தேசிய அரசுடன் இணையக்கூடும்.

அவ்வாறு பிரிந்து செல்லும் ஐ.தே.கட்சிக்குழுவினரின் ஒத்துழைப்புடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து தனது அரசியல் வாழ்வின் ஆயுள்காலத்தை நீடித்து 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை சந்திரிகா தவிர்த்துக்கொள்ளக்கூடும். எதிர்வரும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களிலும் ஐ.தே.கட்சி தோல்வியடைந்து அக்கட்சி பலவீனமடையக்கூடும்.

இந்தப் போராட்டத்தில் ரணில் வெற்றிபெற்றால், சந்திரிகா அரசியலிருந்து ஓய்வுபெற நேரிடும். எதிர்வரும் மாகாண சபைகளுக்கான தேர்தலில் ஸ்ரீல.சு.க - ஜே.வி.பி.கூட்டமைப்பு படுதோல்வியைச் சந்திக்க நேரிடும். எதிர்கட்சித் தலைமைப் பதவிக்கு அக் கூட்டமைப்பிற்குள் மோதல்கள் இடம்பெறும். அந்தக் கூட்டமைப்பை விரும்பாத குழுவினர் அதிலிருந்து வெளியேறி ரணிலின் தலைமையிலான தேசிய அரசில் சேர்வர்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை எதிர்த்துப் போட்டியிட வேட்பாளர் கிடைக்காத நிலை உருவாக ஜனாதிபதித் தேர்தல் ரணிலின் ஓரங்க நாடகமாக அமையும்.

இந்நிலை உருவாகுமானால் நாட்டின் முக்கிய சக்தியாக உருவாக ஜே.வி.பிக்கு இருக்கும் வாய்ப்பு அற்றுப்போய் அவர்கள் மீண்டும் தமது முன்னைய இடதுசாரிப் போக்குடைய கட்சியாக மாறிச் செயலற்றவர்களாகக் கூடும்.

"ஜே.வி.பி 38 ஆசனங்களை அல்லது அதற்குக் கிட்டத்தட்ட எண்ணிக்கையிலான ஆசனங்களைப் பெற்றால்"

✪ கூட்டமைப்பு வெற்றிபெற்றால் உருவாகும் அரசு செயற்படுவதும், அமைச்சரவை தெரிவு செய்யப்படுவதும், ஜே.வி.பியின் விருப்பத்திற்கு [illegible]

✪ கூட்டமைப்பு தோல்வியுற்றால் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு ஜே.வி.பியின் சொற்படியே ஒருவரைத் தெரிவுசெய்ய நேரிடும்.

✪ 2005 ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை ஜே.வி.பி.யின் விருப்பத்திற்கேற்பவே தெரிவு செய்ய நேரிடும்.

✪ மாகாண சபைகளுக்கான தேர்தல்களின் போது கூட்டமைப்பின் சார்பில் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதும் முதலமைச்சர்களைத் தெரிவு செய்வதும் ஜே.வி.பியின் விருப்பத்திற்கேற்பவே மேற்கொள்ள நேரிடும்.

கூட்டமைப்பின் தேர்தலில் வெற்றி பெற்றால் ஒன்றில் ஜே.வி.பியின் கூட்டு அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகளை ஏற்றுத் தேசியத் தோற்றத்தை உருவாக்குவார்கள். அல்லது என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா ஆகியோர் போன்று இருக்கும் நற்பெயரையும் கெடுத்துக் கொள்வார்கள்.

ஜே.வி.பிக்கு தற்போதுள்ள ஆசனங்களை விடக் குறைவாகக் கிடைக்குமாயின் அக்கட்சிக்குள் உட்பூசல்கள் பாரிய அளவில் உருவெடுக்கும். ஒரு பகுதியினர் ஸ்ரீல.சு. கட்சியில் இணையக்கூடும். மறுதரப்பினர் கூட்டமைப்பிலிருந்து வெளியேற முயற்சிப்பர்.

ஸ்ரீல.சு.கட்சியுடன் கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என முயற்சிகளை மேற்கொண்டவர்களுக்கு எதிராக ஜே.வி.பிக்குள்ளேயே கிளர்ச்சி உருவாகி அக்கட்சி இரண்டாகப் பிளவுபடக்கூடும்.

1982 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து ஜே.வி.பிக்கு ஏற்பட்ட கதியே தற்போதும் ஏற்படக்கூடும். 1982 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் குறித்து ஜே.வி.பியின் அப்போதைய தலைவர் றோஹன விஜேவீர மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தார். தனது கட்சிக் கூட்டங்களுக்குத் திரளும் மக்களின் எண்ணிக்கையைக் கண்டு குறைந்தது பத்து லட்சம் வாக்குகளாவது தனக்குக் கிடைக்கும் என எதிர்பார்த்தார். அந்தத் தேர்தல் மூலம் நாட்டின் முக்கிய சக்தியாக உருவெடுத்த ஸ்ரீல.சு.கட்சியை ஒழித்து நாட்டின் முக்கிய எதிர்க்கட்சியாகலாம் என விஜேவீர கனவு கண்டார்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் அவரது கனவுகளை தவிடு பொடியாக்கியது மாத்திரமல்லாமல் அவரது நிலையையும், அவரது கட்சியின் நிலையையும் அவருக்குப் புரிய வைத்தது. ஜனநாயக வழிமுறைகளில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற நினைத்துக் கூடப் பார்க்க முடியாது என்பதை அவர் அன்று புரிந்து கொண்டார். சரியாகக் கூறுவதாயின் 1982 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் ஜே.வி.பியானது காற்றுப்போன பலூனின் நிலைக்குத் தள்ளப்பட்டது. ஜே.வி.பி. நினைக்கும் எண்ணிக்கையிலான ஆசனங்கள் அவர்களுக்குக் கிடைக்காவிடின் இம்முறையும் ஜே.வி.பிக்கு அவ்வாறான நிலைமையே உருவாகும். அவ்வாறு அமையுமாயின் எதிர்வரும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களிலும் அதே சோகக்கதையே தொடரும்.

தற்போது உருவாகியுள்ள போராட்டங்கள் ரணிலுக்கும் சந்திரிகாவுக்கும் தீர்க்கமான ஒன்றாக அமைவது போலவே ஜே.வி.பிக்கும், தீர்க்கமான ஒன்றாக அமையவுள்ளது. இது சரியாக கழுத்தில் "சயனைட்" வில்லைகளைக் கட்டிக் கொண்டிருப்பதற்கு ஒப்பானதாகும். இருப்பினும், இதில் தற்கொலைப் போராட்டத்தில் இறங்கியிருப்பது சந்திரிகாவே. காரணம் இந்தப் போராட்டத்தின் சூத்திரதாரி அவர் என்பதாகும்.

## அரசியல் ஆயுள்காலத்தை நீடிக்க முயலும் சந்திரிகா

சந்திரிகா நாட்டைப் பத்து ஆண்டுகள் ஆட்சி புரியலாம் என இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தார். ஆனால், அது போதாது தொடர்ந்தும் நாட்டை ஆள வசதியாக தனது அரசியல் வாழ்வின் ஆயுள்காலத்தை நீடிக்க முனைகிறார்.

இந்த நாட்டிலுள்ள எந்தத் தலைவருக்கும் நாட்டை ஆளுவதற்கு இரு தடவைகள் மாத்திரமே வாய்ப்பு இருந்து வந்துள்ளது. டி.எஸ்.சேனநாயகாவுக்கு இரு தடவைகள் முற்றாக ஆட்சிபுரியக் கிடைக்கவில்லை. பண்டாரநாயக்காவுக்கும் அதே நிலை. டட்லி சேனநாயக்கா 1951 - 1953 மற்றும் 1967 - 1970 என இரு தடவைகள் ஆட்சிபுரிந்தார். சிறிமாவோ 1960 - 1965 மற்றும் 1970 - 1977 என இரு தடவைகள் ஆட்சிபுரிந்தார்கள். 1977 - 1994 வரை எதிர்க்கட்சித் தலைவியாக சிறிமா விளங்கிய போதிலும் 1994இல் அவரது கட்சி தேர்தலில் வெற்றிபெற்றும் நாட்டை ஆள (மூன்றாவது தடவை) அவருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஜே.ஆர்.ஜயவர்தன 1977-1982 மற்றும் 1982- 1988 என இருதடவைகள் ஆட்சிபுரிந்தார். பிரேமதாஸாவால் முதற்தடவையையே பூர்த்திசெய்ய முடியவில்லை.

2005 ஆம் ஆண்டு சந்திரிக்கா இரு தடவைகள் நாட்டை ஆளும் கால அவகாசம் முடிவடைகிறது. ஆனால், அவர் அதை அத்துடன் பூர்த்திசெய்ய விரும்பவில்லை. 1999 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான காலத்திலிருந்தே அவர் இதைத்தீர்மானித்துள்ளார். 1999 ஜனாதிபதித் தேர்தலின்பின்னர் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்யும் விதத்தில் அரசமைப்புத் திட்டத்தை முன்வைத்தார். அதை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்காக ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை தம் பக்கம் இழுக்க முயற்சித்தார். அந்த முயற்சி தோல்வியடையவே 2000 ஆம ஆண்டு நாடாளுமன்றத்தைக கலைத்தார். 2001 இல் தான் தொடர்ந்து அரசியலில் இருந்து நாட்டை ஆள வசதியாக அரசமைப்புத்திருத்தத்தை கொண்டுவந்து அதைநிறைவேற்றுவதற்கு மக்கள் கருத்துக்கணிப்பை மேற்கொள்ள முயற்சித்தார். அதற்கென பலமில்லியன் மக்கள் நிதியில் வாக்குச்சீட்டுக்கள் கூட அடிக்கப்பட்டன. ஆனால், திடீரென அந்த மக்கள் கருத்துக்கணிப்பு ரத்துச்செய்யப்பட்டது.

அதன்பின்னர் சந்திரிக்கா ஜே.வி.பியுடன் தகுதிகாண் அரசுக்கான உடன்பாட்டை எட்டி தேவையான அரசமைப்புத்திருத்தங்களை மேற்கொள்ள முயற்சித்தார். அந்த முயற்சிகளும் தோல்வியடையவே நாடாளுமன்றத்தைக்கலைத்து அரசமைப்புத்திருத்தத்திற்காக மக்கள் ஆணையைப் பெற முயற்சித்தார். அந்தத் தேர்தலில் தோல்வியடைந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அரசமைப்புக்கான திருத்தங்களை மேற்கொள்வதற்கு இன்று அவர் மக்கள் ஆணையைக் கோருகிறார். இவற்றின்படி அவருக்குத் (சந்திரிக்காவுக்கு) தேவைப்படும் அரசமைப்பிற்கான திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு அவர் பலமில்லியன் பொதுநிதியைச் செலவுசெய்துள்ளார்.

**- கஜனி -**

தனது அரசியல் வாழ்வின் ஆயுளகாலத்தை நீடிப்பதற்கு அவர் எடுத்த முயற்சிகள் இவற்றின் மூலம் தெரியவருகிறது. இந்தத்தேர்தலில் அவரது அணிவெற்றி பெற்றால் பிரதமர் பதவிக்கு ஒரு வேட்பாளரை நிறுத்தாமல் தானே பிரதமர் என அறிவிக்கவுள்ளார். எனத்தகவல்கள் அடிபடுவதால் இந்தப்போராட்டம் சந்திரிக்காவின் போராட்டமாக மாறியுள்ளது. இந்தப்போராட்டத்தில் அவர் வெற்றிபெற்றால் அவருக்கு அரண்மனைவாசம். தோல்வியடைந்தால் கறுவாக்காட்டிலுள்ள வீட்டு வாசம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் வங்கி

இணுவிலில் கன்னாதிட்டிக் கிளையின்

நடமாடும் வங்கிச் சேவையின்

## ஆரம்ப விழா அழைப்பு

இடம்: காங்கேசன்துறை வீதி, இணுவில்
(இணுவில் ஆஸ்பத்திரி முன்பாக)
காலம்: நாளை (01.03.2004) திங்கட்கிழமை
நேரம்: காலை 9.00மணி (புதிய நேரம்)

**இந்தக் கிளையை ஆரம்பித்து எம்மை மகிழ்விப்பவர்**

பிரதம விருந்தினர்: உயர்திரு.சி. இளம்பிறைநாதன் (F.I.B.)
(உதவிப் பொதுமுகாமையாளர், வடவலயம்)
சிறப்பு விருந்தினர்: திரு.சி.திருவாகரன்
(உதவிப் பிரதேச செயலர்)
திருமதி ச.சொக்கலிங்கம்
(செயலாளர், பிரதேச சபை, வலி.மேற்கு)

**இந்த வைபவத்தில் கலந்து சிறப்பிப்பதுடன் புதிய கணக்கினை ஆரம்பித்து, வாடிக்கையாளராக இணைந்து வங்கியின் சேவையைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இச்சேவை தினமும் முற்பகல் 9.00மணிதொடக்கம் பி.ப.2.00மணிவரை நடைபெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

பிராந்திய முகாமையாளர்,
**மக்கள் வங்கி,**
**யாழ்ப்பாணம்.**

மக்கள் வங்கி

முகாமையாளரும், ஊழியர்களும்,
**மக்கள் வங்கி,**
**கன்னாதிட்டி.**

(C/33491) (26-14-24)


## பாராட்டு விழாவும்; பரிசளிப்பு விழாவும்

பிரபல தொழிலதிபர்

**திரு.S.குலேந்திரராசா அவர்கள்**

**நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதற்கான பாராட்டு விழாவும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவும்**

காட்சி ஆட்டம்

**பொற்பதி வி.கழகம் Vs யாழ். வைத்தியசாலை அணி**

இடம்: யா/கோண்டாவில்
இராமகிருஷ்ண வித்தியாலயம்
காலம்: **இன்று (29.02.2004) ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00**

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**- விழா ஏற்பாட்டுக்குழு.**

கொக்குவில்.

(29047)(3414-24)

## நுண்கலை மாணவர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.29

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலை வளாக மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடனத்துறை வளாக நடேசர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்து வருட மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கவின்கலை மன்றத்தின் தலைவர் கேட்டுள்ளார்.

(ஜ-10)

## மனித உரிமைகள் கல்வித் திட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.29

யாழ்.கல்வி வலயமும் கிறிஸ்தவ வாலிபர் சங்கமும் இணைந்து ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பான கல்விச் செயற்றிட்டம் ஒன்றை நடத்தவுள்ளன.

இதன்படி, அடுத்தமாதம் 3ஆம் திகதி புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியிலும், 17ஆம் திகதி அச்சுவேலி சென்.திரேசா கல்லூரியிலும், அச்சுவேலி மகாவித்தியாலயத்திலும், 24ஆம் திகதி உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும், 31ஆம் திகதி நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும் இச்செயற்றிட்டம் இடம்பெறவுள்ளது.

(ஜ-10-6)

## பாஷையூர்க் கடலில் மீனவர் வலையில் முதலை சிக்கியது

அரியாலை,பெப்.29

பாஷையூர்க் கடலில் மீனவர்களின் வலையில் சிக்கிய முதலை ஒன்று பின்னர் கரைக்குக் கொண்டுவரப்பட்டது. சுமார் 5அடி நீளம் கொண்ட இந்தச் சிறிய முதலை கடந்த பல ஆண்டுகளுக்குப் பின்னர் முதற்தடவையாக மீனவர்களின் வலையில் சிக்கியதாக மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

உயிருடன் பிடிக்கப்பட்ட இந்த முதலையை மீனவர்கள் மீண்டும் கடலில் விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-17)


லங்கா
டைல்ஸ்
லிமிட்டெட்,
பளபளப்பான செரமிக் தரை
ஓடுகள் உற்பத்தியின்
முன்னோடிகளாவர். ஆரம்பம் முதல் இன்றுவரை
நாட்டின் பாரிய நிறுவனமாயும் சந்தைக்களத்தில்
முன்னணியிலும் இருப்பதுடன், 26 நாடுகளில் பரந்துபட்ட
உலகச்சந்தையிலும் தற்போது இடம் பிடித்திருக்கிறது.
இலங்கையிலும் வாடிக்கையாளரின் நாட்டம்
அதிகரித்திருக்கிறது. இரண்டையும் விரிவாக்கம்
செய்வதற்கு, ஒவ்வொரு கடமையையும்
உயர்வாகச் செய்யும் திறமையுடைய
அலுவலர்கள் எமக்குத் தேவை
தெரிவுகள் நடைமுறை
செய்யப்படும்.

## விற்பனைப் பிரதிநிதிகள் - யாழ்ப்பாணம்

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் எம்மால் நியமிக்கப்பட்ட விநியோகஸ்தருடன் கடமையாற்றுவர். திறமையுடனும், அர்ப்பணிப்புடன் கடமையாற்றுபவராயும், 20க்கும் 25க்கும் இடைப்பட்ட வயதினராயும் இருக்க வேண்டும். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி ஆகக்குறைந்த தகைமையாகக் கருதப்பட்டாலும், கல்வித்தகைமைச் சிறப்புகள் விசேமாகக் கவனிக்கப்படும். தகுதி வாய்ந்த நிறுவனத்தில் 3 வருட விற்பனை அனுபவம், தமிழ், ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் திறமை, மோட்டார் சைக்கிள் ஓட்டும் லைசென்ஸ் என்பன தேவை.

விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணத்தையும் அதை அண்மித்த நகர்ப்புறத்திலும் வசிப்பவராயிருக்க வேண்டும். மாதாந்த ஊதியம் பேசித் தீர்க்கப்படும். உற்சாகமூட்டும் ஊக்குவிப்புகளும் வழங்கப்படும்.

*விண்ணப்பங்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட வேண்டும். இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட 10 நாட்களுக்குள் விண்ணப்பம் பின்வரும் முகவரிக்கு வந்துசேர வேண்டும். தபாலுறையின் மேல் இடது மூலையில் 'SALES REP' எனக் குறிப்பிடவும்.*

*சந்தைப்படுத்தல் முகாமையாளர்*

**லங்கா டைல்ஸ் லிமிட்டெட்**
தரை ஓடு நிறுவனம்
34/5, டபிள்யூ.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02.



## இன்று வகுப்புகள் ஆரம்பம்!

**கோப்பாய்ப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஆங்கிலம், தையல், கேக் ஐசிங், ஓகன், தமிழ், ஆங்கில தட்டச்சு வகுப்புகள்**

**இன்று (29.02.2004) ஞாயிறு மாலை 4.00 மணிக்கு**

**பிரதேச சம்மேளன அலுவலகத்தில் (கோப்பாய் பெற்றோல் செற் முன்பாக) ஆரம்பமாகின்றன.**

☞ பயிற்சியில் இணைந்து பயிலவிரும்பும் மாணவர்கள் அலுவலகத்துக்கு நேரில் சமுகமளிக்கவும்.

(24-14) (29053)


## மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

எங்கள் ஆலயமான ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலில் சுமார் முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக அரும்பாடுபட்டு வண்ணங்கள், கண்கவர் ஓவியங்கள் தீட்டி ஒரு கலைக்கோயிலாக்கிய பெருமையும் கல்யாண மண்டபத்திற்கு வண்ணம் தீட்டி ஒரு கலைக்கூடமாக்கிய பெருமையும் சித்திரத் தேர்களையும் மஞ்சம், கைலாச வாகனம், சப்பரம், வாகனங்கள் போன்றவற்றிற்கு அழகுற வண்ணம்தீட்டிய பெருமையும் 'கலாபூஷணம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஆனைப்பந்தியைச் சேர்ந்த,

**உயர்திரு.**

## கந்தையா சுந்தரலிங்கம்

அவர்களையே சாரும். இவர் மேலும் பல சிறப்புப்பெற்று வாழவேண்டுமென எல்லாம்வல்ல ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையாரை வேண்டி வாழ்த்துகின்றோம்.

*ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் தேவஸ்தானம்,*
*இணுவில்.*

**சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக் குருக்கள் குடும்பம்.**

(34-24) (C/33489)


## Diploma in Hardware Engineering

- ※ நீங்களே உங்கள் கணனியை அமைத்துக்கொள்வதற்கான 100% செய்முறைப் பயிற்சிநெறி. அத்துடன் Program Installation & CD Writing.
- ※ யாழ். மண்ணில் வித்தியாசமான முறையில் இப்பயிற்சிநெறி எம்மால் அறிமுகப்படுத்தப்படுகிறது. எவரும் கற்கலாம். பாடக் குறிப்புகள் வழங்கப்படும்.
- ※ பயிற்சியை முடித்த இருபிரிவு மாணவர்களிடம் கேட்டறியுங்கள். ரஷ்ய கணனி பொறியியலாளரினால் தமிழிலேயே விரிவுரைகள் நடத்தப்படும்.
- ※ ஒருபிரிவில் 10 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.
- ※ பயிற்சிக் காலம் ஒரு மாதம் மட்டுமே. காலை, மாலை வகுப்புகள்.

**Lectures By: Mr.R.Rohan**
(Engineer, University of Russia)

**புதிய பிரிவுகளுக்கான பயிற்சி ஆரம்பம்**
**01-03-2004**

**NORTH LANKA**
**INSTITUTE OF INFORMATION TECHNOLOGY**
பிரதான வீதி, சங்கானை.

(29045)(34-14-24)


## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை வைத்திலிங்கம்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், நில அளவைத் திணைக்களம்)

நுணாவில் மத்தியைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு, அங்கிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை வைத்திலிங்கம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், நில அளவைத் திணைக்களம்) அவர்கள் 26.02.2004 வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை - சிதம்பரம் தம்பதியினரின் அன்பு மருமகனும் யோகம்மாவின் (யோகம்) அன்புக் கணவரும் சிவகலா (சுவிஸ்), சிவகுமார் (நடத்துநர், C.T.B. கோண்டாவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருள்நாதனின் (பிரபா-சுவிஸ்) அன்பு மாமனாரும் கஜந்தன், கஜீவன் (சுவிஸ்) ஆகியோரின அன்புப் பேரனும் கந்தவனம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், C.T.B.), செல்லம்மா, அன்னமுத்து, காலஞ்சென்ற ஆச்சிமுத்து மற்றும் கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலேஸ்வரி, ஆறுமுகம், காலஞ்சென்ற கதிர்காமர் மற்றும் கந்தையா, சதாசிவம், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் திலகவதி (கனடா), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தெட்சணாமூர்த்தி, காலஞ்சென்ற செகராசபிள்ளை ஆகியோரின் சகலனும் ஆவார்.

அனனாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.02.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரின இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.சிவகுமார் (மகன்),
கா.அருள்நாதன் (மருமகன் - பிரபா)

*இணுவில் கிழக்கு,*
*அங்கிலிப்பாய்.*

(29009) (24-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மண்ணிலேயே முதன்முறையாக....

இந்தியாவின் **Praba's Institute of health care management** நிறுவனங்களின் இயக்குநரும் தியாகராஜர் **Poly Tecnic** மற்றும் காமராஜர் பல்கலைக்கழகத்தினதும் (மதுரை) விரிவுரையாளருமான

## திருமதி பிரபாரெட்டி(M.A., M.S.)



அவர்களாலும் அவரது குழுவினராலும் இரண்டு நாள் அழுக்கலை பயிற்சி வகுப்புக ளையும் அதனைத் தொடர்ந்து ஐந்து நாள்க ளுக்கு செய்முறைப் பயிற்சிகளையும் வழங்க வுள்ளார்கள். இப்பயிற்சி வகுப்பினை முன்னிட்டு இன்று (29.02.2004) ஞாயிறு காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில **இலவச கருத்தரங்கு** நடைபெற வுள்ளது. இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கி றோம்.

(29073)(36-12-32)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி, கல்வயல் (ஜே/305) பிரிவில் கிராம அலுவலராகக் கடமையாற்றி இளைப்பாறிய

உயர்திரு.

## சி.தில்லையம்பலம்

அவர்க[illegible] பிரிவு மக்களுக்கு [illegible]ளப்பரிய சேவையை ம[illegible]ந்து பாராட்டுகின்றோம். ஓய்வுக்காலத்தில் அவரது பணி மென்மேலும் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.

கல்வயல் மகளிர் அபிவிருத்திச் சங்கம்,
கல்வயல் சமூக சேவா சங்கம்,
கல்வயல் பிரிவு மக்கள்.

C-33502)(38-17-18-30)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



2003 ஐந்தாந்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது அன்புச் செல்வங்களான *செல்வி பிராசாயினி, செல்வி தர்மினி* ஆகிய இரு மாணவிகளையும் மேலும் கல்வியிற் சிறப்புற்றுத் திகழவேண்டும் மென்று பாரட்டி வாழ்த்துகிறோம்.



செல்வி
கணேசமூர்த்தி
பிரசாயினி
(125 புள்ளி)
குமரகோட்டம்,
கோண்டாவில்.

வாழ்த்துவோர்:
இ.இரத்தினதாசன், செ.தர்மலிங்கம், ப.பாலசுப்பிரமணியம், இ.தங்கவேல், பொ.புஸ்பராசா, இ.கணேசதாஸ், ந.சிவராசா, கு.ஜெயஈஸ்வரன்.

செல்வி
தளையசிங்கம்
தர்மினி
(121 புள்ளி)

(29064)(17-18-30)

# மாபெரும் பிரசார எழுச்சிக் கூட்டம்

இடம்:- சாவகச்சேரி நகரசபை வளாகம்.

காலம்:- இன்று (29.02.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணி (தாயக நேரம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து வேட்பாளர்களும் கலந்து சிறப்பிக்கும் நிகழ்வில் தென்மராட்சி வாழ் மக்கள் அனை வரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தேசிய எழுச்சிப் பேரவை,
தென்மராட்சிக் கோட்டம்.

(29067)(40-17-18-30)

# மரண அறிவித்தல்

## செல்லையா நடராசா (வார்ப்புத்தொழில்)



கொழும்புத்துறை, ஆனந்தன் வடலி வீதி, 2ஆம் ஒழுங் கையைச் சேர்ந்த செல்லையா நடராசா அவர்கள் 27.02.2004 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசமணியின் அன்புக் கணவரும் சறோஜா (லண்டன்), விஜயகுமார், விமலா, வசந்தகுமார் (டோமி னிக்), சாரதா, லூயிஸ் வின்சன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பீற்றர் பேரின்பம் (லண்டன்), லீலா, சிவராசா, பவானி, யேசுதாஸ் (யாழ். பல நோ.கூ.சங்கம்), நந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பவளரெத்தினம் மற்றும் செல்வறதி ஆகியோரின் மைத்துனரும் சரசுவின் ஒன்றுவிட்ட சகோதரியும் தேவாவின் (ஒப்பந்தகாரர் - பெயின்ரிங்) சகலனும் விஜிதா ஆனந்த் (சுவிஸ்), பெலிக்ஸ் தீனா (சுவிஸ்), செலஸ், துஷா, றஜிதா, சேவியர் (பிரான்ஸ்), ராஜு ஜெயந்தன், சர்மிளா, கவிதா, சுகிர்தா, ஜான்சன் (டோகா), ஜனார்த்தன், சுனிதா, சுதா, கபற்றன், சியா, டொனோல்ட் (பிரான்ஸ்), மயூரன், கஜீவ், தனு, சுபட்சன், ஆரோன் ஆகியோரின் அன்புப் பேரனும் சஞ்சீவ், பிங்கு, செவ்வந்தி, சூட்டி, டியூறியா, சாந்தனா, சகானா ஆகியோரின் அன்புப் பூட்டனும ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.15, சென் மேரிஸ் 2ஆம் ஒழுங்கை,*
*கொழும்புத்துறை.*
*T.P.: 021 222 3337* (29065)(31-17-18)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.29

நல்லூர் சயன்ஸ் அக்கடமி கல்வி நிறுவனத்தின் இந்த வருடத்திற்கான முதலாவது இடைத்தவணைப் பரீட் சையின் கணிப்பீட்டறிக்கை வழங்க லும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று மாலை 4.00 மணிக்கு ஆசிரியர் இரா.யோகேஸ் வரன் தலைமையில் மேற்படி நிறுவ னத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவன செயற் றிட்ட அதிகாரி ஆர்.பி.சங்கர் கலந்து கொள்வார். (ம)

## கழிவு கொட்டுவதை நிறுத்தக் கோரிக்கை

புத்தூர், வாதரவத்தைப் பகுதியில் மக்கள் நடமாட்டம் உள்ள பிரதேசங் களில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படு வதாகவும், இதனால் தமது சுகாதாரத துக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்படுவ தாகவும் இப்பகுதி மக்கள் முறையிட் டுள்ளனர்.

யாழ். நகரப் பகுதியிலிருந்து வாக னங்கள் மூலம் கொண்டு வரப்படும் கழிவுப் பொருள்கள் இப்பகுதிகளில் கொட்டப்படுவதாகவும், மக்கள் நட மாட்டம் அதிகமாகவுள்ள பகுதிகளில இவ்வாறு கழிவுப் பொருள்களைக் கொட்டுவதை நிறுத்துமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டோரிடம் கோரி யிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட டது. (ம-178)

## படையினர் சிரமதானம்

அச்செழு மெதடிஸ்த மிசன் பாட சாலை விளையாட்டு மைதானத்தை அச்செழு இராணுவ முகாம் இராணுவ சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்து வருகின்றனர்.

இம்முறை இப்பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியை இந்த மைதானத்திலேயே நடத்தக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிக்கப்பட்டுள்ளது. (ம-4-27)


**NOW ON SALE**

* New Medical Books for 1st year and 2nd year students
* Great lifco and Mega Dictionaries (Treble the Rate in Indian price)
- and Secend hand Typeriters
* 1) OLYMPIA - Traveller de Luxes
2) Typechoice de Luxe

SRI LANKA BOOK DEPOT
234, K.K.S. ROAD,
JAFFNA.
Phone:-222-2573
(C/33506)(40)

லக்சுமி இணுவில்
விஜய், சிம்ரன், பிரியங்கா, விவேக் நடிப்பில்
யூத்
(ரீல்ஸ்)
காட்சிநேரம்: 11.00, 3.00, 6.30 (பி.நே.)
(28965)

லிபேட்டி அச்சுவேலி
பயங்கரச் சண்டை நிறைந்த படம்
DUNGEONS DRAGONS
காட்சிநேரம்: 3.00, 7.00 (பி.நே.)
(சி-33049)

நிறஞ்சனாஸ் சங்கானை
சாமி
விக்ரம், த்ரிஷா, விவேக், மனோரமா நடித்த
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
(ரீல்ஸ்)
வெள்ளி, சனி, ஞாயிறு
ஜேம்ஸ்பொண்ட் நடித்த *CHICACO*
இரவு 8.45 (பி.நே.)
(C/33384)

ராஜா யாழ்ப்பாணம்
பார்த்திபன், விக்னேஸ் நடித்த
ஆரி
(ரீல்ஸ்)
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.) (C-33080)

நாகம்ஸ் சுன்னாகம்
சத்தியராஜ், ரக்சா, அரவிந்தன்(அறிமுகம்), ஆனந்தராஜ் நடித்த
சேனா
(ரீல்ஸ்)





காட்சிநேரம் :
கம்பீரம்
(C/33345)


# 6ஆம் மாத நினைவஞ்சலி

அமரர்

## M.KATHIRGAMASEGARAM

**(B.A. London, Dip. in Education)**
**(இளைப்பாறிய அதிபர்)**



தோற்றம் 20.05.1920 — மறைவு 30.08.2003

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
அன்பின் திருவுருவாய், அறிவுக் கடலாய்
பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய்
சிறப்புற வாழ்வாங்கு வாழ்ந்து
எமக்கெல்லாம் நல்வழி காட்டிய தெய்வமே!
எம்முயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு அகலாது.

மனைவி, பிள்ளைகள்,
யாழ்ப்பாணம். மருமக்கள். (29071)(30-17-18)

# மரண அறிவித்தல்கள்

## நல்லதம்பி சுப்பிரமணியம்

**(பாய்க்கடை மணியம்)**



கொட்டடியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இராசா வின்தோட்டம் வீதி மற்றும் அசோகா கார்டின் பம்பலப் பிட்டியை வசிப்பிடமாகவும் நயினாதீவு அமுதசுரபி அன்ன தானசபை ஆரம்பகால உறுப்பினருமாகிய நல்லதம்பி சுப்பிரமணியம் (உரிமையாளர் மணிகரன் ஸ்ரோர்ஸ், மணியம் பாய்க்கடை) 25.02.2004 அன்று யாழ்ப்பாணத்தில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி - வள்ளியம்மை தம்பதிகளின் அன்புமகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதி களின் அன்பு மருமகனும் தனலெட்சுமி (பத்மா)வின் அன்புக் கணவரும் கருணாநிதி (சுவிஸ்), கலைச்செல்வி (பிரான்ஸ), முத்தமிழ்ச்செல்வி (லண்டன்), பங்கயற்செல்வி (ஜேர்மனி), திருவருட்செல்வி (கனடா), கதிர் காமநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வனஜாம்பிகை (சுவிஸ்), ஞானவரோதயன் (பிரான்ஸ்), ரமணபாலன் (லண்டன்), ராதா மணாளன்( ஜேர்மனி), ஜெயகரன் (கனடா), அகல்யா (பிரான்ஸ்) ஆகி யோரின் மாமனாரும் ஆரத்தி, உமாசுதன் (பிரான்ஸ்), நிரோஷன், கௌதமன் (சுவிஸ்), நிஷாந்தன், நதீஸ் (லண்டன்), நர்மதன், கீர்த்தனா (ஜேர்மனி), நிதர்சன், அதிரா (கனடா), சங்கீத்மன், சபீஷ்மன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் சுந்தரலெட்சுமி, காலஞ்சென்ற பழனிச் சாமி, இரத்தினகோபால் மற்றும் லீலாவதி, நாகேஸ்வரி (பத்மா) ஆகி யோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், தங்கமணி (பிரான்ஸ்), பங்கயத்தம்மா (இந்தியா), காலஞ்சென்ற இலகுப்பிள்ளை, பாலகிருஷ்ணன் (கொழும்பு), அன்னலெட்சுமி, தனேஸ்வரி, நகுலேஸ்வரி, பரமேஸ்வரி, ஜெயரெட்ணம் (பாப்பையா), பேரின்பநாயகி, குணசேகரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.02.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது யாழ்ப்பாணம் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத் துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*135, இராசாவின் தோட்டம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(சி-33507)(21-11-18-17)

தகவல்:
சு.தனலெட்சுமி (பத்மா)
(மனைவி).

## இராமு கந்தசாமி



காரைநகர், வெடியரசன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட இராமு கந்தசாமி அவர்கள் 26.02.2004 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவராணி மற்றும் கமலாம்பி கையின் அன்புக் கணவரும் முருகதாஸ் (பாபு - கனடா), ரோகினிதேவி (கீதா - பிரான்ஸ்), குகதாஸ் (ரகு - கனடா), உஷாளினி (உஷா), கோபாலகிருஷ்ணன் (கோபி) ஆகி யோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.02.2004) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு இவரது சகோதரன் இ.மாரிமுத்து அவர் களின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வெடியரசன் வீதி,*
*காரைநகர்.*
(C-33494)(40-17-18-30)

தகவல்:-
இ.லகுகுமார்
(மைத்துனர்).

## திருமதி இரத்தினம் முத்துலிங்கம்

சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் முத்துலிங்கம் 27.02.2004 வெள்ளி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான சங்கரப்பிள்ளை - அன்னம்மாவின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான நாகலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியின் மருமகளும் பொன்மலர், தங்கமலர், முத்துமலர், நடேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராசையூர, மகேந்திரன், தில்லைநாதன், சகுந்தலாதேவி ஆகி யோரின் மாமியாரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் ஆச்சிப்பிள் ளையின் அன்புச் சகோதரியும் குமரகுரு (U.K.), வளர்மதி (U.K.), ஐங்கரன (ஆசிரியர்), சாந்தமலர், வேணுகாணன், ஸர்வஞ்ஜா, உமைசேரி, வித்தி யாதரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆகீசன், ஏரகன், இலம்போதரன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.02.2004) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக காலை 10.00 மணியளவில் காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத் துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*கந்தசுவாமி கோயிலடி,*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.* (29070)(40-30-17-18)

தகவல்:-
மு.நடேஸ்வரன்
(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரத்தில் மூன்று செய்தியாளர் மாநாடு

ஐக்கிய தேசிய முன்னணியின் செயற்பாடுகளுக்கு விளக்கம் அளிக்கும் நோக்குடன் வாரத்தில் மூன்று தினங்கள் செய்தியாளர் மாநாட்டை சுதந்திரக் கூட்டமைப்பு நடத்தவிருக்கிறது.

திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் இந்த மாநாடு இடம்பெறும்.

ஊடகத்துறை அமைச்சர் லஷ்மன் கதிர்காமர், ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா ஆகியோர் இந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொள்வர்.

ஐக்கிய தேசிய முன்னணியின் பிரசாரங்களை முறியடிக்க இத்தகைய செய்தியாளர் மாநாட்டை சுதந்திரக் கூட்டமைப்பு நடத்தத் திட்டமிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ளேன் என்றும் அவர் கூறினார்.

நிபந்தனைகளுடன் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது மீண்டும் ஒரு யுத்தத்துக்குச் செல்ல வழிவகுத்துவிடும். அவ்வாறு செயற்படும்போது, சமாதான உடன்படிக்கைகள் செயலற்றுப் போய்விடும் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார். (ம-3)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒருவருக்கு இராணுவச் சோதனைக்கு 30 செக்கண்ட் தேவையாக இருந்தால் ஒருவருக்கு ஒரு மணித்தியாலயத்தில் சுமார் 120 பேரையே அனுமதிக்க முடியும் எட்டு மணி நேரத்தில் ஆகக்கூடியது 2 ஆயிரம் பேர்தான் வாக்களிக்க முடியும்.

எனவே சோதனை ஏதும் இன்றி வாக்களிக்க அனுமதித்தால் பெரும் எண்ணிக்கையானவர்கள் வாக்களிக்க வாய்ப்புக் கிட்டும் - என்றுள்ளது. (ம-3)

SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURES BY:
MR.M.A. HARI
புதிய பிரிவு ஆரம்பம்:
02.03.2004
செவ்வாய் மாலை 3 மணி
TUESDAY THURSDAY } 3 p.m. - 4 p.m.
HARY'S INSTITUTE
இல. 564, கஸ்தூரியார் வீதி
(யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில்)
(29040)(12) யாழ்ப்பாணம்.

## தேர்தல் சுவரொட்டிகள் அகற்றப்பட்டன

கொழும்பில் ஒட்டப்பட்ட தேர்தல் சுவரொட்டிகளை அகற்றும் பணி யில் இரவு - பகலாக மாநகர ஊழியர்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

இயந்திரம் மூலம் நீரைப் பீச்சி சுவரொட்டிகளை அகற்றும் பணி கொழும்பு நகரம் முழுவதும் நேற்று இடம்பெற்றது.

சுவரொட்டிகளை ஒட்டவேண்டாம் என்று அரசியல் கட்சிகளை மாநகர நிர்வாகம் கேட்டுள்ளது. (ம-3)

## சோதனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வாக்களிக்க வருவேரை படையினர் சோதனை செய்வதன் மூலம் தாமதம் ஏற்படும் என்றும் - இதன் காரணமாக சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்றும் - பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்தன.

மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளும் அரச அதிபர்களும் இதே கோரிக்கையை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பியிருந்தனர்.

இது குறித்துக் கேட்டபோதே, தமது செயற்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ம-3)

## பூந்தோட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உடைமைகளை இழந்து நிர்க்கதி நிலைக்குள்ளான 115 குடும்பங்களைச் சேர்ந்த 450 பேருக்கும் உடனடி உதவிகள் வழங்கப்பட்டன.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம், 'யுனிசெவ்', செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் வவுனியா செயலக அதிகாரிகளும் உடன் நிவாரணப் பணிகளில் இறங்கினர்.

அருகில் உள்ள வீடுகளில அகதிகள் குடியமர்த்தப்பட்டனர். உதவிப் பொருள்களும் , நிவாரண உணவுப் பொருள்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டன .

தீ விபத்துக்கு மின் ஒழுக்கு காரணம் எனக் கூறப்பட்டபோதும் உண்மை நிலையை அறியப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தீ விபத்தில் இரு சிறுவர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். அவர்கள் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். (ம-3-164)

## சோதனை நிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யங்களை அமைக்கவேண்டியுள்ளது. இதற்கு வசதியாக முகமாலை இராணுவச் சோதனை நிலையத்தைப் பின் நகர்த்தி, எந்தவித சோதனைகளும் இன்றி மக்கள் வாக்களிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் - என்று அக்கடிதத்தில் அரச அதிபர் கோரியுள்ளார்.

அதேவேளை -

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச மக்கள் வாக்களிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளுடனும் தேர்தல் ஆணையாளருடனும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் தொடர்ந்து பேசிவருகின்றனர். (ம-3)

## கட்டுப்பாடற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சம்பந்தப்பட்டுள்ளன. எனவே, கண்காணிப்புக் குழு எமது மக்கள் வாக்களிப்பதற்கான சில நடைமுறை ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுள்ளோம் - என்றார்.

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைமைப் பதவியை மீண்டும் ஏற்றுக்கொண்ட பின்னர் ரொன்ட் புறுஹெராவ்டே புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துப் பேசியது இதுவே முதற்றடவை.

பின்லாந்து, டென்மார்க் நாடுகளில் இருந்து கண்காணிப்புக் குழுவுக்கு ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த கண்காணிப்புக் குழுத் தலைவர், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் வாக்களிப்பது தொடர்பான விடயமே முக்கியமாக ஆராயப்பட்டது என்று கூறினார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வது குறித்தும் தான் தமிழச்செல்வனுடன் ஆராய்ந்தார் என்றும் அவர் கூறினார்.

யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்தும் பேணுவதற்கு தமிழ்ச்செல்வன் உறுதியளித்துள்ளார். இப்போதைய நோக்கமெல்லாம் உடன்படிக்கையில் கண்ணும் கருத்துமாக இருப்பதே என்று அவர் மேலும் சொன்னார். (ம-3-ரி)



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திப்பதற்காக நேற்றுக் கிளிநொச்சிக்கு வருகைதந்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொண்ட் புறுவ்ஹெராவ்டேயை அவர் வரவேற்றபோது எடுத்த படம்.

## காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று அதிகாலை மீன்பிடித்துக் கொண்டிருந்த ஆதிகோயிலடி மீனவர்கள் சடலத்தைக் கண்டனர்.

இத்தகவலை மீனவர்கள் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவருக்குத் தெரியப்படுத்தினர்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் கவனத்துக்கு இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டது. அதையடுத்து கண்காணிப்புக்குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்றனர்.

கண்காணிப்புக் குழுவினரும் படையினரும் பிரசன்னமாகி இருக்க, இன்பருட்டி மீனவர்கள் படகுகளில் சென்று நேற்றுப் பிற்பகல் 2.15இற்கு சடலத்தை மீட்டு கரைக்குக் கொண்டு வந்தனர்.

நேற்று மாலை 7மணியளவில் சம்பவ இடத்துக்கு வந்த பருத்தித்துறை நீதிவான் சடலத்தைச் பார்வையிட்டதுடன். இறந்தவரின் மைத்துனரான மணிவண்ணன் என்பவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தனர்.

இறந்தவரின் மனைவி, இறந்தவருடன் தொழிலுக்குச்சென்ற இரு மீனவர்கள் ஆகியோரை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராகும்படியும் நீதிவான் உத்தரவிட்டார். சடலத்தைப் பிரேத பரிசோதனை செய்த பின்னர் உறவினர்களிடம் ஒப் படைக்கும்படி அவர் பொலீஸாருக்குப் பணித்தார்.

இறந்தவரின் கையில் இருந்த மணிக்கூடு ஒழுங்காக இயங்கிக் கொண்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

சடலம் சிதைவடைந்த நிலையிலும் துர்நாற்றம் வீசிய நிலையிலும் காணப்பட்டது. உடலில் பல வெட்டுக் காயங்கள் காணப்பட்டன. (ம-3-70-173)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் குணபாலசிங்கம் (J.P.)

(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், சாமுவேல் அன்சன்ஸ் யாழ்ப்பாணம், இயக்குநர், மாஸ்டர் சேல்ஸ் சேவிஸ் சென்ரர், அமைப்பாளர் சாயி பஜனை நிலையம், சுண்டுக்குளி.)



கொட்டடியைப் பிறப்பிடமாகவும் கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குணபாலசிங்கம் அவர்கள் 28.02.2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுப்பிரமணியம் சுந்தரலெச்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் கந்தையா தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மருகரும் தயாநிதி (தாதி உத்தியோகத்தர் போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு கணவரும் யாதவன் (உத்தியோகத்தர் சிலிங்கோ கிராமின் கிறடிட் கொம்பனி, யாழ்ப்பாணம்), லகுஷியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற வைத்தியக் கலாநிதி தனபாலசிங்கம் மற்றும் சிவபாலசிங்கம், ஜெயபாலசிங்கம் (ஆஸ்திரேலியா), அமரர் பூபாலசிங்கம் (அலுவலர் முன்னாள் மாநகரசபை வைத்திய அதிகாரி காரியாலயம்), கிருஷ்ணபாலு, ஸ்ரீபாலு, தெய்வேந்திரபாலு (ஜேர்மனி), நாகேந்திரபாலு (லண்டன்), ஆகியோரின் அன்புச் சகோதரரும் வசந்தாதேவி, கைலைநந்தினி, புஸ்பாவதி, மங்களேஸ்வரி, செல்வராணி, கெங்காதேவி, சிவசோதி, தனலட்சுமி, அமரர் தனபாலசிங்கம் மற்றும் சரஸ்வதி லோகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் இரத்தினசிங்கம் (பிரதம ஆசிரியர், சுடர் ஒளி), அமரர் விக்கிரம ஆராட்சி, கோமளேஸ்வரி, சுசீலாதேவி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (01.03.2004) திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.14, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (29075) (40-12-17)

தகவல்:
திருமதி தயாநிதி குணபாலசிங்கம் (மனைவி).

## திருமதி தவஞானவதி பாலசுப்பிரமணியம்

ஏழாலை கிழக்கு, ஏழாலையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தவஞானவதி பாலசுப்பிரமணியம் அவர்கள் 28.02.2004 சனிக்கிழமை ஏழாலையில் அகால மரணமடைந்தார்.

அன்னார் செல்லையா பாலசுப்பிரமணியத்தின் (நீர்ப்பாசன இலாகா) அன்பு மனைவியும் பாலகௌரி (ஆசிரியை, ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்) பாலகிருஷ்ணன் (லண்டன்) பாமினி, பாலமுரளி(லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும் நடராசா பவன் (ஆசிரியர், ஸ்கந்தவரோதயா கல்லூரி,கந்தரோடை), நளாயினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். இவரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*ஏழாலை கிழக்கு,*
*ஏழாலை.* (29076) (38-12-17)

தகவல்:
கணவர்.

தரம் 1 முதல் G.C.E.(O/L) வரை
முதலாம் தவணைப் பயிற்சிப்பரீட்சை
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும்
சுந்தர் வெளியீடு
844,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம் ☏ 021 222 7086
(கோயில் வீதிச்சந்திக்கருகாமை)







இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.02.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

1977ஆம் ஆண்டு, அப்போது பிரிந்திருந்த தமிழ்த் தலைவர்களை ஒன்றுபடுத்தியது. தமிழ்த் தேசயத்தை கிளர்ந்தெழ வைத்த வட்டுக்கோட்டை மாநாட்டு தனித்தமிழ்நாட்டுத் தீர்மானம் தந்தை செல்வா, ஜி.ஜி.பொன்னம்பலம், தொண்டமான் ஆகியோர் ஒன்றுகூடியிருக்க நிறைவேற்றப்பட்டது.

தமிழ்த் தேசியம் வலுப்பெற்று, அதுவே வளர்ந்து ஆயுத ரீதியிலான விடுதலைப் போராட்டமாக வெடிப்பதற்கு அடித்தளமிட்டது வட்டுக்கோட்டைத் தீர்மானம். இலங்கை என்ற ஒரு தேசத்தில் சிங்களவர்களுடன் இணைந்து வாழமுடியாது என்பதை முதன் முதலாக வடக்கு – கிழக்கில் உள்ள தமிழர்கள் உலகுக்கு வெளிப்படுத்திய தேர்தலாகவும் 1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் அமைந்தது.

வாகவே நடக்கும் தேர்தல்கள் போன்று – அல்லாமல் இம்முறைத் தேர்தல் இறுக்கமாகவும் கனதியாகவும் இருக்கின்றது. அரசியல்வாதிகளுக்காக வாக்களிக்கும் நிலை மாற்றப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் விடிவுக்காக உயிர்நீத்த போராளிகளின் – மாவீரர்களின் – பெயராலும் அவர்கள் சிந்திய இரத்தத்தின் பெயராலும் வாக்குகள் கேட்கப்படுகின்றன.

ஒருபுறத்தில் தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையின் மீதான வாக்களிப்பாக இது அமைந்தாலும் இன்னொருபுறத்தில், 27வருடங்களின் பின்னர் ஆயுதப் போராட்டம் தொடர்பாக மக்கள் வழங்கும் கருத்துக் கணிப்பாகவும் இது இருக்கும். 1977இற்குப் பின்னர் மீண்டும் ஒரு தடவை தமிழ் மக்கள் தமது கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச்சொல்லும் ஒரு சந்தர்ப்பமாக இந்தத் தேர்தல் சர்வதேச சமூகத்தால் பார்க்கப்படும்.

இருந்து அதிகம் ஒதுங்கிக்கொண்டது. சந்திரிகாவின் கட்சி அரசை இழந்ததும் இதற்கு ஒரு காரணமாகலாம்.

ஆனாலும், அக்கட்சிக்கு இருந்த வாக்கு வங்கி என்பது இந்த அற்பசொற்ப சலுகைகளைப் பெற்றவர்களினூடானதே. கடந்த 2 வருட காலத்துக்கும் மேலாக அது அத்தகைய தனது செயற்பாடுகளை நிறுத்திக்கொண்டதில் அதற்கு செஞ்சோற்றுக்கடன் செலுத்தவேண்டிய மக்கள் கூட்டத்தின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறைந்துள்ளது.


டக்ளஸ் அமைச்சராக இருந்த காலப்பகுதியில் வடக்கு – கிழக்கில் கட்டடங்கள் கட்டுவதற்கும் ஏனைய செயற்பாடுகளுக்கும் ஒதுக்கப்பட்ட அமைச்சு நிதியைத் தாங்கள் தான் ஒதுக்கினோம், அதன் மூலம் புனரமைத்தோம் என்பதைத் தவிர

கிடையில் போட்டி போட்டுக்கொள்ளமுடியாத நிலைமையும் தோன்றியுள்ளது. தேர்தலின் சூடு, சுவை, சுவாரஸ்யம் குறைந்து போவதற்கு இதுவும் காரணம் எனலாம்.

என்னதான் சூடு, சுவை குறைந்து தெரிந்தாலும் மிகக் காத்திரமான முடிவுகளை இந்தத் தேர்தல் தரும் என்பதில் சந்தேகமில்லை.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாக்காளர்கள் எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்கும் விடயம் மிக முக்கிய பிரச்சினையாக இருக்கும். இதுவரை இதற்கான இணக்கப்பாடொன்று காணப்படவில்லை. புலிகளினதும் இராணுவத்தினதும் முன்னரங்க எல்லைகளுக்கு இடைப்பட்ட யுத்த சூனியப் பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பது சாத்தியப் படாது என்றே தெரிகின்றது. புலிகளின் பகுதிகளுக்குள் சென்று ஸ்ரீலங்காப் பொலிஸார் சீருடையுடன் கடமையில் ஈடுபடுவதும் முடியாத சூழலில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வைக்கப்படும் வாக்களிப்பு நிலையங்களுக்கே அவர்கள் வந்து வாக்களிக்க வேண்டி ஏற்படும்.

# காத்திரமான முடிவுகளை தரப் போகின்ற தேர்தல்



நன்கு திட்டமிட்டு – அரசியல்வாதிகளின் இலாபங்களுக்காகவாயினும் – தமிழ்த்தேசியம் கட்டியெழுப்பப்பட்டதன் விளைவாக 165 ஆசனங்களைக் கொண்ட அப்போதைய நாடாளுமன்றத்தில் 18 ஆசங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கிடைத்தன. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார். பின்னர் அவர் அதனை மறந்துபோனதும் ஆயுத வன்முறைப் போராட்டம் தீவிரம் பெற்றதும் வரலாறு.

அன்று மக்கள் வழங்கிய கட்டளையின் படிதான் ஆயுதப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது என்று விடுதலைப் புலிகள் தொடர்ந்து கூறிக்கொண்டிருக்கிறார்கள். தமிழீழத் தனியரசுக்கான அல்லது இலங்கைத் தேசத்தில் இருந்து விடுபடுவதற்கான கருத்தை ஒட்டுமொத்த தமிழ்மக்களும் தெரிவித்து இரு தசாப்தத்துக்கும் மேற்பட்ட – காலம் கடந்துவிட்ட நிலையில் – இப்போது மீண்டும் மக்கள் கருத்துக் கணிப்பாக இம்முறை நாடாளுமன்றத் தேர்தல் மாற்றமடைந்துள்ளது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தொடர்ந்து உச்சம் பெற்ற ஆயுதப் போராட்டம் குறித்து தமிழ்மக்களின் கருத்துக் கணிப்புக்கள் எவையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. தெற்கில் சந்திரிகாவும் ஏனைய இனவாதிகளும் பெரும்பான்மையான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை நிராகரிக்கிறார்கள் என்று கூறுவதற்கான வசதி வாய்ப்பை இது வழங்கியது. எதிர்வரும் தேர்தல் மூலம் அந்த நிலை மாற்றமடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள்.

இலங்கையின் நாடாளுமன்றம் மூலம் தமிழ் மக்களுக்கு எந்த விடிவும் ஏற்படப்போவதில்லை என்பதை உறுதியாக நம்பும் விடுதலைப் புலிகள், இப்போது தமிழர் போராட்டத்தை வலுப்படுத்தக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் அனைத்தையும் பயன்படுத்த முன்வந்திருக்கிறார்கள். 2001ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அவர்கள் தமது ஆதரவுப் பின்புலம் ஒன்றை வெளிப்படுத்தியதில் இருந்து இது தெளிவானது.

விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான சக்திகள் உள்ளேயும் சரி வெளியேயும் சரி பூலம்பெறுவதைத் தவிர்ப்பதற்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை எல்லாம் பயன்படுத்தவேண்டிய தேவையும் இருப்பதால், நாடாளுமன்றத்தில் தமது ஆதரவுத் தளத்தை அதிகரிப்பதில் புலிகள் அதிக நாட்டம் செலுத்துகிறார்கள். இதைச் சரியாகப் புரிந்துகொண்ட இந்தியா இடைத் தேர்தல் ஒன்றை நடத்தினால் நாடாளுமன்றில் புலிகளின் ஆதரவுப் பலம் அதிகரிக்கும் என்று சரியாகச் சொல்லியிருந்தது. சந்திரிகாவுக்கு இது குறித்து இந்தியா எச்சரிக்கை செய்ததாகவும் செய்திகள் வெளியாகின.

இந்தியா எது நடக்கக்கூடாது என்று எண்ணியதோ அதுவே வடக்கு – கிழக்கில் நடந்து கொண்டிருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பை முழுமையாக வழிப்படுத்தும் பொறுப்பை விடுதலைப் புலிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசியல்வாதிகளின் தேர்தலாக இல்லாமல் போராளிகளின் தேர்தலாக ஏப்ரல் மாத தேர்தல் புதிய பரிமாணம் எடுத்துள்ளது.

கடந்த முறைத் தேர்தல் போன்று – பொது

கடந்த தேர்தலின்போது கிழக்கில் இவ்வாறு வாக்களிக்கவந்த மக்கள் இராணுவத்தால் திருப்பியனுப்பப்பட்டனர். இது தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்கில் இராணுவத் தளபதி உட்பட சிலருக்கு உயர் நீதிமன்றம் அபராதம் விதித்தது. அந்த நிலையில், இராணுவம் இம்முறை அத்தகைய கைங்கரியத்தைச் செய்யாது என்று எதிர்பார்த்தாலும், பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியின் கையில் இருப்பதால் எதனையும் உறுதியாகச் சொல்லமுடியாது.

வடக்கு – கிழக்கில் தேர்தல் சுறுசுறுப்பு இன்னும் தொற்றிக்கொள்ளாத போதும் தெற்கில் நிலைமை தலைகீழாக உள்ளது.

"ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி – ஜே.வி.பி. கூட்டணி புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்க்கின்றது. நோர்வே அனுசரணையாளர்களை நாட்டைவிட்டு வெளியேற்றவேண்டும் என்று ஜே.வி.பி. விடாப்பிடியாக நிற்கின்றது. இந்தநிலையில், அந்தக் கூட்டு அரசமைத்தால் சமாதானத்துக்கு அதோகதிதான், அதனால் யாருக்கு வாக்களிப்பது என்பதை உங்களிடமே விட்டுவிடுகின்றேன் என்று பிரதமர்.

புலிகள் இந்தத் தேர்தலில் வெளிப்படையான ஆதரவைக் கூட்டமைப்புக்கு வழங்கி, அதனை வழிப்படுத்த ஆரம்பித்திருப்பதாலும் செய்யப்பட்ட தியாகங்களின் அடிப்படையில் மக்களை வாக்களிக்குமாறு வெளிப்படுத்துமாறு கேட்பதாலும் கிடைக்கும் வாக்குகள் புலிகளின் ஆதரவுத் தளத்தை சர்வதேச நாடுகளுக்கு, குறிப்பாக விடுதலைப் புலிகளைத் தடைசெய்துள்ள மேற்கு நாடுகளுக்கு எடுத்துக்கூற வல்லவையாக இருக்கும்.

தெற்கு அரசியல்வாதிகளும் ஏனைய அவதானிகளும் கருத்துத் தெரிவிப்பது போன்று வடக்குக் கிழக்கில் பெரும்பான்மையான – அநேகமாக முழுமையான – ஆசனங்கள் கூட்டமைப்புக்குக் கிடைத்தால், அது தமிழ்த் தேசிய ஒற்றுமைக்குக் கிடைத்த வெற்றி என்பதற்கு மேலாக விடுதலைப் புலிகளுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக அமையும். இது சர்வதேச நாடுகளில் மாற்றமடைந்துவரும் புலிகள் பற்றிய கருத்துக்கள் மேலும் அவர்கள் சார்புப் போக்குக்குத் திரும்புவதற்கும் வழிசமைக்கும்.

இந்தத் தேர்தலில் வடக்கு – கிழக்கில் கூட்டமைப்புக்கு எதிரான பிரதான போட்டித் தமிழ்க் குழுவாக இருக்கப்போவது டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.அர்.எல்.எவ். வரதர் அணியை உள்ளடக்கிய கூட்டணிதான்.

கடந்த 2001 தேர்தலுக்கு முன்னர் வடக்கு – கிழக்கில் அள்ளித் தெளிக்கும் பணிகளில் அதிகம் ஈடுபட்ட ஈ.பி.டி.பி கட்சி, கடந்த தேர்தலில் ஏற்பட்ட பெரும் பின்னடைவுடன் சோர்ந்து போனது. விடுதலைப் புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரசியல் பணிபுரிய வந்த பின்னர் தமக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது என்று அக் கட்சி கூறிக்கொண்டாலும், அது சாதாரண மக்களுக்கு எதையாவது பெற்றுக் கொடுக்கும் [illegible]

இந்தத் தேர்தலில் மக்கள் முன்வைக்க அந்தக் கட்சியிடம் கவர்ச்சிகரமான தேர்தல் கோஷங்கள் ஏதும் இல்லை.

இந்தக் கோஷங்களும் தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டு, போராளிகளின் தியாகம் என்பவற்றுக்கு முன்னால் தாக்குப்பிடிக்கக் கூடிய வல்லமையைக் கொண்டவை என்று எதிர்பார்க்கமுடியாது. புலிகளுக்கு எதிரான வாக்குகளைக்கூட ஆனந்தசங்கரி இந்த முறை பிரித்துக்கொண்டு போக கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து கிடைக்கக்கூடிய வாக்குகளையும் கொண்டால், அக்கட்சிக்கு குடாநாட்டில் ஆசனங்கள் கிடைப்பதென்பது சாத்தியமற்றுப் போகலாம். கிழக்கு மற்றும் வன்னி மாவட்டங்களில் அதற்கு அதிகளவில் செல்வாக்கு ஏதும் இல்லை.

கடந்த முறைபோன்று தமது கோட்டைப் பகுதி என்று சொல்லிக்கொள்ளக்கூடிய தீவுப் பகுதியும் அதன் வசத்தில் இல்லாத நிலையில் கட்சி வாக்குவேட்டையில் இறங்குவது மிகமிகக் கடினமானதே.

அதனாலேயே குடாநாட்டிலும் வடக்குக் – கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் தேர்தல், தெற்கைப் போன்று பரபரப்பானதாக இல்லாமல் ஒரு வித அமைதியுடன் காணப்படுகின்றது.

இன்னொரு தேர்தல் என்பதைத் தவிர, வேறு விதங்களில் மக்கள் இதுபற்றி அலட்டிக் கொள்ளவில்லை. கூட்டமைப்புக்கு வடக்கு – கிழக்கில் அனைத்து ஆசனங்களும் கிடைக்குமா? அல்லது ஒன்றிரண்டு குறையுமா? என்பது பற்றியே அவர்கள் சுவாரஸ்யமாக விவாதிக்கிறார்கள்.

தமிழ்க் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் விருப்பு வாக்குகளைக் கோருவது எனத் தீமானிக்கப்பட்டி [illegible] போராளிகளின் பேரால் கேட்கப்படும் வாக்குகளுக்கு அவர்கள் பொறுப்பாளிகளாக்கப் பட்டுள்ளார்கள். இதன்மூலம், அவர்கள் தங்களுக்

ரணில் அறிவித்துவிட்டார்.

தங்களை சமாதானத்தின் விரோதிகள் என்ற ரீதியில் மக்களிடம் பிரசாரம் செய்து ரணில் மீண்டும் வென்றுவிடுவாரோ என்ற பயம் தொற்றிக் கொள்ள ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அவசர அவசரமாக ரணில் மக்களை மிரட்டுகிறார் என்று ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். அதில் புலிகளுடன் பேசத் தாங்கள் தயார் என்றும் தெரிவித்திருக்கிறார்.

புலிகளுடன் மட்டுமல்ல ஏனைய கட்சிகளுடனும் இனப்பிரச்சினை குறித்துப் பேசுவோம் என்று கூறிவந்த சந்திரிகாவும் கதிர்காமரும் நேற்றுமுன்தினம் நடத்திய மாநாட்டில் சகல கட்சிகளையும், சகல தரப்புக்களையும் இணைத்துக் கொண்டு பேச்சு நடத்துவது என்பது யதார்த்தமாகாது எனறும் தெரிவித்திருக்கிறார் என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

**- அன்ரன் -**

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் புலிகள்தான் என்று ஏற்றுக்கொண்டு, சிங்கள மக்களின் தெளிவான ஆணையுடன் அதிகாரத்துக்குவரும் தரப்புடனேயே தாம் பேச்சு நடத்த முடியும் என்று புலிகள் ஏற்கனவே தெரிவித்துள்ள நிலையில், கதிர்காமரின் இந்தக் கூற்று மிகப் பெறுமதியானது.

ஆட்சிக்கு வருவதற்காக எந்தப் பேயுடனும் கூட்டு வைக்கத் தயார் என்று தெரிவித்த சந்திரிகா, இப்போது தனது கூட்டாளிகளான ஈ.பி.டி.பியினரையும் கைவிடுவதற்குத் தயாராகி விட்டார் போன்று தோன்றுகின்றது.

மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதற்காக புலிகளைத் திருப்திப்படுத்தியாவது தேர்தலில் வெற்றிபெறுவதற்கு அவர் தயாராகிவிட்டார் என்பதையே மிகப் பிந்தி வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - பாகிஸ்தான் சமாதானப் பேச்சுக்கள்; காஷ்மீரின் போர்ச்சூடு குளிர்ந்து ஆறுமா....?

ஜவஹர்லால் நேரு வெள்ளைக்கார ஆட்சியாளர்களால் அஹமட்நகர் கோட்டைக்குள் – சிறைச்சாலைக்குள் 1944ஆம் ஆண்டு ஏப்ரல் தொடக்கம் செப்ரெம்பர் வரைக்கும் கைதியாக அடைக்கப்பட்டிருந்தார். அக்காலத்துள் THE DISCOVERY OF INDIA என்ற நூலை எழுதி முடித்தார். பின்னர் சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான நேரு, அந்த நூலில் கூறுகிறார் பக்கம் 306 இல் THE GROWTH OF THE INDIAN STATES SYSTEM என்ற உப தலையங்கத்தின் கீழ்)

"இன்று இந்தியாவிலுள்ள அதிமுக்கிய பிரச்சினைகளில் ஒன்று இந்திய மாநிலங்கள் சம்பந்தப்பட்டதாகும். இந்த மாநிலங்களின் வகையைப் பொறுத்தவரையில் அவை உலகிலேயே தனித்துவமான தன்மைகள் வாய்ந்தவை. அளவு, அரசியல், சமூக நிலைத்தளங்களில் அவை வேறுபடுகின்றன. அவற்றின் மொத்த எண்ணிக்கை 601 (அறுநூற்றி ஒன்று) ஆகும். அவற்றுள் பிரதானமானவையும் பெரியவையும் என்று கருதக்கூடியவை கிட்டத்தட்ட 15 (பதினைந்து) ஆகும். ஹைதராபாத், காஷ்மீர், மைசூர், லவன்கோர், பரோடா, கவாலியர், இந்தோர், கொச்சின், ஜெயிபூர், ஜொட்பூர், பிக்கானீர், போபால், பட்டாலியா ஆகியவை அவற்றுள் ஆகப்பெரிய ராச்சிய அலகுகள் (மாநிலங்கள்). இம்மாநிலங்களின் எண்ணிக்கைக்குள் அடங்கும் சிறு சிறு குட்டிக் குட்டி மாநிலங்கள் கத்தியவார், மேற்கு இந்தியா, பஞ்சாப் ஆகிய பெரும் பிராந்தியங்களுள் உள்ளடங்குகின்றன....."

நேருவின் 'கண்டுபிடிப்பான இந்தியா' (The Discovery of India) இன்று இல்லை–காஷ்மீரத்திலிருந்து சிலோன் வரைக்கும் (வடக்கு முனையிலிருந்து தெற்கு முனைவரை) இருந்த அந்தக் கண்டுபிடிப்பு சிதைய அவர் கண் முன்னேகாண, பாகிஸ்தான் என்ற நாட்டுப் பிரிவினை மத அடிப்படையில் ஏற்பட்டது. 1947 இல் இந்தியாவிடமிருந்து தனியாகப் பிரிந்த நிலையிலேயே – இந்தியா, பாகிஸ்தான் என்ற இரு தனித்தனி நாடுகளாகவே காலனித்துவ ஆட்சியாளர்களிடமிருந்து 'சுதந்திரங்களை' பெற்றிருந்தன. தனது The Discorery of India இல் பல இடங்களில் காஷ்மீரின் இயற்கை அழகு, புவியியல், பொருளாதாரம், வரலாறு, சமூகவியல், அரசியல் மற்றும் அந்தமாநிலத்தின் தத்துவவியல் செறிவும் தத்துவார்ந்த அறிவாற்றல் மிக்க அமைவுகள், ஆராய்ச்சி மையங்கள், பல்கலைக்கழகம் (நலந்தா) என்றெல்லாம் விபரித்து தனது ஆன்மாவுக்குள் ஆன்மாவாக கஷ்மீரத்தைக் கொண்டாடும் நேரு, காஷ்மீர் இந்தியாவுக்கா பாகிஸ்தானுக்கா என்ற மாபெரும் சர்ச்சை – இந்தியா, பாகிஸ்தானிய சுதந்திர தினத்தன்று கூடவே பிறந்தபோது – எதுவும் செய்ய முடியாமலேயே இருந்தார்...

தொடர்ந்து இந்து ஆட்சியாளர்களிடம் காஷ்மீர் இருப்பதை விரும்பாத பாகிஸ்தான், விடுவிக்கும் புனிதப்போரை 1947 இல் தொடங்கியது. 1947 இல் இரு நாடுகளும் சுதந்திரம் பெற்றதிலிருந்து, இரு நாடுகளுக்குமிடையில் காஷ்மீர் தொடர்பாக சர்ச்சைகளும், மோதல்களும், சண்டைகளும் தொடர்ந்தன. அந்நிலையில், 1949 இல் ஐ.நா.மத்தியஸ்தத்துடன் இருதரப்பாருக்குமிடையில் போர்நிறுத்தம் ஏற்பட்டதுடன், காஷ்மீர் இரண்டாகப் பிரியும்வகையில் ஒரு எல்லைக்கோடு (Line of Control) அறிவிக்கப்பட்டு பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் ஓர் பகுதியும் மறுபகுதி இந்தியக் கட்டுப்பாட்டிலும் விடப்பட்டன.

தனது நூலில், வெள்ளையர்கள் இந்த, இஸ்லாமிய மத அடிப்படைவாத மிக உணர்வெழுச்சிகளைத் தூண்டி, பிரித்தாளும் உபாயத்தை மிக உச்ச அளவில் பயன்படுத்தினர் எனத் தெளிவாக விவரித்துச் செல்லும் இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவஹர்லால் நேரு, அன்றைய தினம் இஸ்லாமிய உணர்வெழுச்சிவாதம் என்ற இரு பெரும் 'கொடிய வாதங்களுள்' காஷ்மீர் பிரச்சினைக்கான தீர்வுகாணப்பட முடியாததாக இருந்தது என்பதை மறைமுகமாக ஒத்துக்கொண்டுள்ளார்.

அன்று இந்தியா என்ற ஓர் அகன்ற பெரும் தேசத்துக்குள் இந்துக்களும் இஸ்லாமியர்களும் மதபேதங்களை மறந்து 'பிரிவினை' இன்றி ஒருமித்து வாழவேண்டும் என்றே அன்றைய இந்திய சுதந்திரத்துக்காகப் போராடிய மகாத்மா காந்திஜியிலிருந்து சகல காங்கிரஸ் தலைவர்களும் பாடுபட்டனர்; தியாகங்கள் செய்தனர். ஆனால், முடியாது என்று 1947 ஆம் ஆண்டிலேயே பாகிஸ்தான் பிரிந்தது. சேர்ந்திருக்கத்தவறிய பாகிஸ்தானை பழிவாங்கிச்சிதைப்பதில் இந்தியா தொடர்ந்து இயங்கியது. 1971இல் கிழக்குப் பாகிஸ்தானுக்குள் ஆக்கிரமித்த இந்தியப்படைகள், பங்காளாதேஷ் என்ற நாடு 'விடுதலை' பெற மருத்துவிச்சியாக சத்திரசிகிச்சை செய்துகொடுத்தது. காஷ்மீர் மாநிலம் தன்னுடையது. என்று உரிமைகோரி 1965 இல் பாகிஸ்தான் இராணுவ நடவடிக்கை எடுத்தபோது அந்த ஆண்டில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் காஷ்மீர் தொடர்பான முதற்போர் மூண்டிருந்தது. காஷ்மீர் விவகாரத்தில் பரம வைரியாகவும், வரலாற்று எதிரியாகவும் மாறிய பாகிஸ்தானுக்கு ஒரு 1971இல் பங்களாதேஷின் விடுவிப்பு என்ற பெயரில், இந்தியப்படைகள் நல்லபாடம் படிப்பித்திருந்தன.

எனினும், இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் தளத்திலிருந்து பாகிஸ்தானின் உள்ளூர் சமூக அரசியல் சக்திகள் செயற்பட்டு வந்தவேளை, அவ்வப்போது அங்கு ஆட்சிக்கு வந்த இராணுவ ஆட்சியாளர்களும், அப்துல்கதீர்கான் போன்ற அணுவிஞ்ஞானிகளும், இஸ்லாமிய தலைவர்கள், ராஜதந்திரிகளும் இணைந்து இராணுவரீதியாகப் பாகிஸ்தானை வளர்த்தெடுத்துள்ளனர். இன்று அணு ஆயுத வல்லரசாக பாகிஸ்தான் பரிணமித்துள்ளது. இந்தியாவுக்குச் சமாந்தரமாக இது நடந்துள்ளது.



கடந்த வாரம் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடந்த தூதரக அதிகாரிகள் மட்டப் பேச்சுக்களில் கலந்துகொண்ட இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சுச் செயலாளர் அருண்குமார் சிங் (இடது) பாகிஸ்தான் வெளிவிவகாரத்துறை அமைச்சுச் செயலாளர் ஜலீல் அப்பாஸ் ஜிலானி.

அவ்வப்போது இந்தியாவில் ஆட்சிக்கு வந்த அரசு (இந்துத்துவ கட்சியான பி.ஜே.பி அரசு உள்ளிட்ட) மதச்சார்பற்ற ஆட்சிமுறைதான் தாம்செய்வதாகச் சொன்னாலும் விரும் பியோ விரும்பாமலோ இந்துத்துவ தளத்தில்தான் இந்தியாவின் பொருளாதார, இராணுவ வளர்ச்சி சாத்தியமாக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் அணுகுண்டின் தந்தை என்று சொல்லப்படும், தற்போதைய இந்திய ஜனாதிபதியான அப்துல்கலாம் (மொழியால் தமிழனாகவும், மதத்தால் இஸ்லாமியனாகவும் பிறந்தார்) உள்ளிட்ட பல இஸ்லாமியர்கள் இந்தியாவின் வளர்ச்சியில் பாரிய பங்களிப்புக்கள் செய்துள்ளார்கள் என்றாலும் அன்றைய நேருவிலிருந்து இன்றைய வாஜ்பாஜ் வரை விரும்பியோ விரும்பாமலோ 'இந்தியா இந்துதத்துவ நாடு' என்றே பார்க்கவேண்டிய கட்டத்திலிருந்தனர்.

இந்நிலையில், இரு நாடுகளும் அணுவாயுத வல்லரசாகப் பரிணமித்த போது இந்தியாவின் குண்டு 'இந்துத்துவ அணுகுண்டு' என்றும் பாகிஸ்தானின் குண்டு 'இஸ்லாம் அணுகுண்டு' என்றும் செல்லமாக அழைக்கப்பட்டன. காஷ்மீரை இரண்டாகப் பிரிக்கின்ற போர்நிறுத்த எல்லைக்கோடு என்றும் எல்லைக்கட்டுப்பாட்டுக் கோடு என்றும் அழைக்கப்படுகின்ற எல்லை மிகவும் சவால் நிறைந்த மலைச்சிகரங்கள் கொண்ட கடுங்குளிரான புவியியல் காலநிலைச் சூழமைவு கொண்டதாகும்.

இந்தியா 1984 ஏப்ரல் 13 அன்று 'மேக்தூத்' என்ற பெயரிலான பாரிய இராணுவ நடவடிக்கையை சியாச்சின் மலைச்சிகரங்களைக் கைப்பற்றுவதற்காக மேற்கொண்டது. பாகிஸ்தானியர் சியாச்சினை தங்கள் வசம் எடுத்துக்கொள்ளப்போவது பற்றி புலனாய்வுத்தகவல் கிடைத்திருப்பதாக இந்தியா தெரிவித்தது. இந்தியப்படைகளிடம் கடும் உயிரிழப்புகளை அப் 'பனிப்போர்க்களத்தில்' சந்தித்த பாகிஸ்தானியப் படைகள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சியாச்சின் சிகரங்களை இழந்து ஒன்றரை கிலோமீற்றர் கீழிறங்கி பின்வாங்கி கீழே பரிதாபமாக மலைச்சரிவுகளில் தொற்றியபடி இரண்டு பிரிகேட் படைகளை நிறுத்தியிருந்தன. அதன் பிறகு அவ்வப்போது தொடர்ச்சியாகத் தொடர்ந்த காஷ்மீரச் சண்டைக் களங்களில் 1989 உடன் புதிய பரிணாமம் ஏற்பட்டது. பாகிஸ்தானில் ஆயுதப் பயிற்சி பெற்று ஆயுதங்கள் பெற்ற காஷ்மீர் தீவிரவாதிகளின் இந்தியப் படைகளுக்கு எதிரான போராட்டம் வெடித்தது.

இதனையடுத்து காஷ்மீரைப் பிரிக்கும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில், இரத்தத்தை உறையவைக்கும் கடுங்குளிர் கொண்ட பனிப்படலங்களால் மூடப்பட்ட மலைத்தொடர்களிலும் மலைச்சிகரங்களிலும் கணவாய்களிலும் நவீன கனரக ஆயுத தளபாடங்களுடன் மொத்தமாக நிலைகொண்டிருக்கும் இந்திய, பாகிஸ்தான் துருப்புக்களின் எண்ணிக்கை மூன்று லட்சத்து எழுபதினாயிரம் ஆகும். இந்தியத் துருப்புக்களின் எண்ணிக்கை மூன்று லட்சமாகவும் பாகிஸ்தானியத் துருப்புக்களின் எண்ணிக்கை எழுபதினாயிரமாகவும் உள்ளது. கோடான கோடிக்கணக்கான டொலர்களை வருடந்தோறும் இந்த யுத்தம் விழுங்குகிறது.

கடந்த இருபது ஆண்டுகளில் அடிக்கடி பேச்சு மற்றும் இராஜதந்திர முயற்சிகளை இரு நாடுகளும் மேற்கொண்டிருந்தபோதும் அவை தோல்விதண்டன. 1990களின் பிற்பகுதியில் பேருந்து இராஜதந்திரம் (Bus Diplomacy) என்று அழைக்கப்படும் வகையில், பாகிஸ்தானின் முக்கிய நகரமான லாகூருக்கான பஸ்சேவையை ஆரம்பித்து வைத்த இந்தியப் பிரதமர் வாஜ்பாஜ், பாகிஸ்தான் அரசுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தினார். ஆனால் காஷ்மீர் விவகாரம் தொடர்பில் ஓர் அங்குலம் கூட அந்தப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணமுடியவில்லை. அது முறிந்தது. 1999இல் கார்கில் யுத்தம் வெடித்தது. கார்கில் யுத்தத்தின் ஆரம்பத்தில் பாகிஸ்தானியப் படைகள் மூர்க்கமாகச் சண்டை செய்தன. எனினும், பின்னர் தோல்வியைத் தழுவிப் பின்வாங்கினர். அதனைத் தொடர்ந்து 'புயலின் அமைதி மையமாக' ஏறத்தாள 2 ஆண்டுகளாகத் தோற்றம் காட்டிய எல்லைக் ... 2003இல் புதிய ... மேகங்கள் சூழத்தொடங்கின. இந்தியாவினதும் பாகிஸ்தானினதும் மொத்தத் ... எண்ணிக்கை மூன்று லட்சத்து எழுபதினாயிரத்திலிருந்து பத்து லட்சமாக அதிகரிக்கப்பட்டது. இந்திய – பாகிஸ்தான் போர், அணுவாயுதப் போராக மாறுமோ என்ற அளவுக்கு ஆபத்தின் விளிம்புக்கு நிலைமை சென்றது. எனினும், சர்வதேச நாடுகள், ஐ.நா. ஆகியவற்றின் ஆலோசனைகளின் அடிப்படையில் இரு நாடுகளும் தணித்தன.

அதன்பின்னர், 2004 ஜனவரியில் இஸ்லாமாபாத்தில் இடம்பெற்ற சார்க் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற இந்தியப் பிரதமர் வாஜ்பாய், பாகிஸ்தானியப் பிரதமர் மிர்சவ்வருல்லா கான் ஜமாலி அவர்களைச் சந்தித்து, இரு நாடுகளுக்குமிடையில் நன்கு திட்டமிட்ட ஒரு பல்லின விவகாரத் தளம் கொண்ட பேச்சுக்களை (Composite dialogue) ஆரம்பிக்க அத்திபாரமிட்டார். "தூரநோக்கு, அர்ப்பணிப்பு, விட்டுக்கொடுப்பு" என்ற பரிமாணங்களில் வாஜ்பாய் செயலாற்றுவதாகப் பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப புகழ்ந்து பேசினார். "பாகிஸ்தான் தனது மண்ணில் எந்தச் சூழ்நிலையிலும் பயங்கரவாதம் வளர இடமளிக்காது" என்ற உறுதிமொழியை எழுத்து மூலம் வழங்கியது.

இப்பொழுது பலமாதங்களாகக் காஷ்மீரின் எல்லைக்கட்டுப்பாட்டுக் கோடு வழியே நிலவும் போர்நிறுத்தமும் புதிய சமாதான முயற்சிகளும் நல்ல அறிகுறிகளைக் காட்டத் தொடங்கினாலும் போதிய நம்பிக்கை இன்னும் ஏற்படவில்லை.

பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் எதிர்வரும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்குச் சென்று போட்டிகளில் பங்குபற்றவிருக்கிறது. அச்சுற்றுப் பயணங்களின்போது இந்திய அதிரடிப்படை வீரர்கள்தான் இந்திய கிரிக்கெட் வீரர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையில் அபிப்பிராயம் நிலவுகின்ற அளவுக்கு நம்பிக்கையீனம் நிலவுகிறது. இஸ்லாமியத் தீவிரவாதிகளின் பிரசன்னங்கள் நிறைந்த கராச்சி, பெஷாவர் ஆகிய பாகிஸ்தானிய நகரங்களில் டெஸ்ட் போட்டிகளை (Test Matches) கட்டுப்பாட்டுச்சபை விரும்பவில்லை. இந்தியத் துணைப் பிரதமர் அத்வானி இந்திய கிரிக்கெட் வீரர்களின் பாதுகாப்பை பாகிஸ்தான் உறுதிப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஜனவரியில் இந்திய – பாகிஸ்தானிய பிரதமர்கள் இட்ட அத்திபாரத்தினடிப்படையில் இருவாரங்களுக்கு முன்பு 16ஆம், 17ஆம், 18 ஆம் திகதிகளில் முதல் கட்டப்பேச்சுக்கள் இஸ்லாமாபாத்தில் நடந்து முடிந்துள்ளன. இந்திய வெளியுறவுச் செயலாளர் சஸாங், பாகிஸ்தானிய வெளியுறவுச் செயலாளர் றியாஸ் கோக்கர் ஆகியோர் தலைமை வகித்த இரு நாட்டு வெளியுறவுத்துறை இராஜதந்திரிகள் மட்டத்தில் நடந்த இப்பேச்சுக்கள் பெரும் பலனளித்துள்ளதாக இரு தரப்பினரும் தெரிவித்தனர்.

**–புவியரங்கன்–**


இப் பேச்சுக்களின்போது காஷ்மீர் – சியாச்சின் பிரச்சினை, பயங்கரவாதப் பிரச்சினை, எல்லை கடந்த போதைப்பொருள் விவகாரம், இந்திய – பாகிஸ்தானிய வர்த்தகப் பொருளாதாரம் உள்ளிட்ட ஐந்து அம்சத் திட்ட விடயங்கள் இணங்காணப்பட்டுத் தொடரவுள்ள பேச்சுக்களுக்கான செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அணுவாயுத விவகாரம் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்றே தெரிகிறது. பாகிஸ்தான், அணுவாயுத தொழில்நுட்பத்தை வேறுநாடுகளுக்கு விற்றமை தொடர்பான விடயம் இருதரப்பு விடயமல்ல என்றும் அது சர்வதேச கரிசனைக்குரிய விடயமென்று இந்தியா 'வசதியாக' தெரிவித்துவிட்டது.

மீண்டும் மே மாதத்தில் அல்லது ஜூன் ஆரம்பத்தில் வெளியுறவுச்செயலர் மட்டப்பேச்சுக்களும், தொடர்ந்து இவ்வாண்டு ஓகஸ்டில் இரு நாட்டு வெளிவிவகார அமைச்சர்கள் மட்டப் பேச்சுக்களும் இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியப் பொதுத்தேர்த லில் வெற்றிநடைபோட முயலும் இந்தியப்பிர தமர் வாஜ்பாஜ், காஷ்மீர் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகண்டு, தனது வரலாற்று எதிரியான பாகிஸ்தானை உற்ற நண்பனாக்க முடியுமா? வரலாற்றில் தன்பெயரைப் பொறிக்க முடியுமா? இந்தியாவின் இரண்டாவது நேருவாக ஓர் இந் திய மீள் கண்டுபிடிப்பை (The Rediscovery of India) வாஜ்பாஜ் செய்வாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையிலிருந்து கிராமங்கள் வரை....



யாழ். மாவட்டத்தில் குற்றவியற் செயற்பாடுகள் தனி நபர்கள் ஒவ்வொருவரையும் அச்சுறுத்தும் அளவிற்கு இடம்பெற்றுவருகின்றன. இது விடயத்தில் விழிப்புக்கொண்டு செயலாற்ற வேண்டிய நிலையில் நாம் அனைவரும் இருக்கின்றோம். இதனைக் கருத்திற்கொண்டு நாம் ஏறக்குறைய ஒரு வருடகாலமாக ஓர் அரங்க ஆய்வினை யாழ். சிறைச்சாலையினையும் எமது சமூகத்தையும் மையப்படுத்தி மேற்கொண்டிருந்தோம். இந்த ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு 28, 29.05.2003 ஆகிய திகதிகளில் ஆய்வுக்கட்டுரை ஒன்று 'உதயன' பத்திரிகையில் பிரசுரமாகியது. அக்கட்டுரையானது குற்றவாளிகளின உருவாக்கம். அவர்களின் பின்னணி பற்றி ஆராய்ந்திருந்தது.

எமது ஆய்வு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டபோது குற்றவாளியாகக் காணப்பட்டவரின் சிறைச்சாலையினுள்ளான சமூக வாழ்வு, அவன் வாழும் சமூகத்தில் அவனது சமூக வாழ்வு எத்தகையது என்பதை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையிலேயே இங்கு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

கட்டுரையின் அமைப்புக்கருதி விடய தானங்கள் கீழ்வரும் பிரிப்புக்களினூடு அணுகப்படுகின்றன.

1. ஒரு கைதி – சிறையில்:
 – வாழ்புலத்தில்:
 – இரு தளங்களிலும்.
2. கைதியின் புனர்வாழ்வு
3. ஏன்? இந்த நிலை
4. ஆய்வின் அரங்கப்பயன்பாடு

யாழ்ப்பாணத்தில் ஒரு நபர் தடுத்து வைக்கப்படுகின்றபோதே இன்னொரு வகையான குற்றவாளியாக உருவாக்கப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது. இலங்கை அரசின் சிவில் நிர்வாகம் யாழ்ப்பாணத்திலும் நடக்கிறது என்பதைக் காட்ட வேண்டும் என்பதற்காகவோ என்னவோ நீதித்துறை இங்கு இயங்க வைக்கப்பட்டிருக்கிறது. குற்றச்செயல், கைது, தடுத்துவைப்பு, தண்டனை, விடுவிப்பு என்ற வட்டச செயல் முறை மட்டுமே யாழ்ப்பாணத்தில் நடைமுறையில் உள்ளது.

இவ்வட்டச் செயல் முறையானது எமது சமூகத்தை குற்றவாளிகளின் கூட்டமாக்கி கடைகெட்ட இழி நிலைககே இட்டுச் செல்லும்.

ஒரு கைதியின் விடுதலைக்குப் பின்னால் அவன் மீண்டும் குற்றவாளியாகாமல் அல்லது ஆக்கப்படாமல் இருப்பதையே நோக்காகக்கொண்டு எமது ஆய்வுச் செயற்பாடுகள் அமைந்தன.

### ஒரு கைதி சிறையில்

யாழ்ப்பாணச் சிறைச்சாலை, சிறைச்சாலைக்குரிய தான கட்டமைப்போடு இல்லை. இங்கு தடுத்து வைக்கப்படுபவர்கள் ஒரே கூட்டமாக, ஒரே இடத்தில் அடைக்கப்பட்டிருப்பதனால் தமக்குள் கதைக்கவும், திட்டமிடல்களை மேற்கொள்ளவும் அவர்களுக்கு களத்தையும், போதிய நேரஅவகாசத்தையும் கொடுக்கிறது. இதனால் அவர்கள் தமக்கிடையில் வலைப்பின்னல் அமைப்பினை உருவாக்கி களவு போன்ற குற்றச்செயல்களில் கச்சிதமாக ஈடுபடுகின்றனர். உதாரணமாக, சிறையில் இருந்தபோது சக கைதியொருவரின் திட்டமிடல் தகவலை பெற்ற ஒரு கைதி விடுதலையான பின்னர் அவ

வட்டச் செயல்முறை




ரின் திட்டத்தையும், வழிகாட்டலையும் பயன்படுத்திக் களவில் ஈடுபட்டு மீண்டும் கைதாக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதே போன்று வேறுபட்ட ஊர்களிலிருந்து சிறைச்சாலைக்கு வருபவர்களும சிறைச்சாலைக்குள்ளேயே தொடர்புபட்டு குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். உதாரணமாக விடுதலையாகிய பின் சங்கானைப் பிரதேச நபர் ஒருவர் பருத்தித்துறை நபரின் வழி காட்டலில் அங்கு களவில் ஈடுபட்ட பருத்தித்துறை நபர் சங்கானைப் பகுதியில் தன் கைவரிசையைக் காட்டுவார். இவர்களுக்கிடையில் 'பங்குப்' பிரிப்பும் உண்டு.

சந்தேகத்தின் பெயரில் தடுத்து வைக்கப்படுபவர் கூட குற்ற நடத்தையில் ஈடுபடுவதற்கான மனப்பாங்கை அவர் பெற்று குற்றங்களைப்புரிய யாழ்ப்பாணச் சிறைச்சாலை களமாகிறது. உதாரணமாக குழு மோதல் ஒன்றில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கபட்டு கைதாகிய ஒருவர் "நான் வந்தது சண்டைக் கேசில இஞ்ச இருக்கேக்கதானே விளங்குது எப்படியெல்லாம் அடிக்கலாம் (களவு) மெண்டு..." என்கிறார்.

இவற்றை நோக்குகிறபோது யாழ்ப்பாணச் சிறைச்சாலை குற்ற நடத்தைகளை இங்கு குறைப்பதை விடுத்து அதிகரிப்பதையே அதிகம் செய்து வருகிறது.

### ஒரு கைதி வாழ்புலத்தில்...

விடுதலை பெற்றுச் செல்லுகின்ற கைதி தனது வாழ்புலத்தில் எவ்வாறு தன்னை நிலைப்படுத்திக்கொள்ள முடியும் என்பதனைக் கண்டுகொள்வதற்காக எமது ஆய்வுக்குட்பட்ட கைதிகளின் வாழ்விடங்களை நேரில் சென்று அவதானித்தோம். அவர்களின் வாழ்புலம் அவர்களது மறுவாழவுக்குரியதாக இருக்கவில்லை.

எம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுப்புலங்களாக,

வடமராட்சியில் ~
 ~ அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடி.
 ~ கோணந்தீவு.
 ~ தும்பளை சைவப்பிரகாசப் பாடசாலை அருகில்.
 ~ துன்னாலை: ஆட்டுப்பட்டி முன் கொலனி, பின்கொலனி.
 ~ நெல்லியடி.

வலிகாமத்தில் ~
 ~ நல்லூர், முத்திரைச்சந்தியடி.
 ~ இணுவில், இளந்தாரி கோவிலடி.
 ~ சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதி.
 ~ மயிலங்காடு, சனசமூகநிலையம் அருகில்.
 ~ குப்பிளான், சந்தியருகில்.
 ~ மாகியப்பிட்டி.

தென்மராட்சியில் ~
 ~ நுணாவில்

தீவகம் ~
 ~ ஊர்காவற்றுறை: சென்ரான்ஸ் பாடசாலைக்கு அருகில்.

ஆகியன அமைந்தன.

எமது ஆய்வுப்புலன்களை அவதானித்தபோது அதிகமானவை அடிப்படை வசதிகள் கூடக்கிடைக்கப் பெறாத ஆரம்ப நிலைக்கிராமங்களாகவே இருந்தன.

அங்கு ~

~ குறைந்த அளவிலான கல்வி மட்ட அடைவினைக் கொண்ட சூழல்.

~ உறவினர்களில் பலர் கைதியாகியும், விடுதலையாகியும் இருக்கின்ற நிலைமை.

~ குற்ற நடத்தையில் ஈடுபட்டாவது பொருளாதார உச்சநிலையை அடைந்து விடவேண்டும் என்ற எண்ணம்.

~ விடுதலை அடைந்து சென்றாலும் அவனை ஏற்றுக்கொள்ளத் தவறும் அயலவர்கள்.

~ குற்றச் செயல்களில் ஈடுபடுதல், கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படல்... ஆகிய செயற்பாடுகளை மிகச் சாதாரணமாகவே நோக்குவது போன்றவற்றை அவனது வாழ்புலச் சூழலிலிருந்து அவதானிக்க முடிந்தது.

### ஒரு கைதி இரு தளங்களிலும்...

கைதிகளை எவ்வாறு சமூகத்திற்கு உரியவர்கள் ஆக்குவது? அவர்களை, அவர்கள் சார்ந்த சமூகம் எவ்வாறு விளங்கி, ஏற்றுக்கொள்ள வேண்டும்? என்பதையும் முக்கியப்படுத்தியதாகவே எமது ஆய்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

நீண்டகாலமாக சில கைதிகள் பெற்றோர்களாலும், உறவினர்களாலும் கைவிடப்பட்ட நிலையில் சிறைச்சாலையில் இருந்தனர். அக்கைதிகளின் வீடுகளுக்குச் சென்று கைவிடப்பட்ட கைதிகளின் நிலையை அவர்களுக்கு வெளிப்படுத்தினோம். எமது ஆரம்பச் சந்திப்புக்களின் போது உறவினர்கள் குற்ற நடத்தையில் ஈடுபட்டுக் கைதாகிய தமது உறவுகளை கைவிட்டு விட்டதாகவும் "இவர்களது உறவு தமக்குத் தேவையில்லை" என்றும் கூறினர். பின்னர் கைதாகியிருப்போரின் நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியபோது தமது உறவுகளைச் சந்தித்து தொடர்பைப் பேண விரும்பினர்.

சிறைச்சாலை அத்தியட்சகரின் உதவியுடன் சந்திப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. சிறைச்சாலையினுள் பிரத்தியேகமான இடம் ஒன்று பெறப்பட்டு இருபகுதியினருக்குமான சந்திப்புக்கள் தனித்தனியே இடம்பெற்றன. சந்திப்புக்களின்போது அனைவருமே உள்ளக்குமுறலை வெளிப்படுத்தல் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டல, அழுதல கோவித்தல், ஆரத்தழுவுதல் ஒருவரையொருவர் கும்பிடுதல், முத்தமிடுதல், அன்பு பாராட்டுதல் தமது இறந்தகால, நிகழ்கால, எதிர்காலம் பற்றிய கலந்துரையாடல்கள் ஆகியவற்றை இவர்களில் இணைவின்போது நாம் கண்டோம்.

> யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி க.சிதம்பரநாதனின் வழிகாட்டலில் அரங்கக் கற்கைகள் மற்றும் உளவியல் கற்கைகளை மேற்கொள்ளும் மாணவர்களான, ப.கேதீஸ், கி.ஐங்கரன், க.தர்மசேகரம் ஆகிய மூவரும் ஒரு வருட காலமாகச் சிறைச்சாலையையும், சமூகத்தையும் மையப்படுத்திச் செய்த ஆய்வின் இரண்டாம் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

### கைதியின் புனர்வாழ்வு

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படும் கைதிகளுக்கு இதுவரை எந்தவிதமான புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகளும் முன்னெடுககப்படுவதாகத் தெரியவில்லை.

ஒரு நபர் மீண்டும் மீண்டும் தொடர்ச்சியாகக் குற்றச் செயல்களில் ஈடுபட்டு சிறைச்சாலைக்கு வந்து செல்வதற்குரிய புனர்வாழ்வு அளிப்பு இன்மையும் ஒரு காரணமாகும்.

ஆகவே, பொருத்தமான புனர்வாழ்வளிப்பு கைதிகளுக்கு வழங்கப்பட வேண்டியமை இன்றைய காலத்தில் தேவையாகிறது.

கைதிகளுக்கான புனர்வாழ்வு என்பது, உள, சமூக, பொருளாதாரத் தளங்களிலிருந்து கட்டி அமைக்கப்படல்வேண்டும்.

உளரீதியான புனர்வாழ்வளிப்பானது மனப்பாங்குகளில் மாற்றம், முடிவெடுப்பதில் நிதானத்திறன், ஆக்ரோஷ உணர்வுகளைக் கையாளும் திறன் நெருக்கீட்டு நிலைகளிலிருந்து தங்களைத் தற்காத்துக்கொள்வது ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும். உள அளவில் கைதிகளுக்கு 'உரிய உள வலுதிறன' வழங்கப்பட்டால் அவர்கள் தம் வாழ்வில செம்மை பெறுவர் என்பதில் இருவேறு கருத்திற்கு இடமில்லை.

ஒரு கைதிதான் சார்ந்த சமூகத்தில் சமூக ஒத்துணர்வுள்ளவனாக உரிய சமூக இடைவினைப் புரிபவனாக செயற்பட்டு, பொருத்தமான சமூகப்பெறுமானத்தை ஈட்டிக்கொள்ளும் வகையில் சமூக அளவிலான புனர்வாழ்வு அமைத்தல் வேண்டும். பொருளாதார ரீதியில் தாழ்நிலையில் இருக்கின்ற மக்களில் சிலர் களவு போன்ற குற்ற நடத்தைகளில் அதிகம் ஈடுபடுகின்றார்கள் என்பது ஒரு பொதுவான கருத்தாகும்.

யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற பல கைதிகள் உரிய தொழில் வாய்ப்பு அற்றவர்களாக, குறைந்த வருமானம் உடையவர்களாகவே காணப்படுகின்றனர். சிறைச்சாலையில் இருந்து சென்றவர்கள் தமது குடும்பம் பட்ட கடன்களைத் தீர்ப்பதற்காக மீளவும் களவு, கசிப்புப் போன்ற குற்ற நடத்தையில் ஈடுபடும் நிலைமையும் இங்குண்டு.

சிறைச்சாலையினுள்ளே கைதிகள் திறன்களின் அடிப்படையில் பொருத்தமான தொழிற்சார் பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்கள் விடுதலையாக்கப்படும்போதுதான் இவர்களால் ஒழுங்கான பொருளாதாரத்தை ஈட்டிக்கொள்ளக் கூடிய வாய்ப்புக் கிட்டும். இப் பயிற்சிகளை வழங்குவதற்கான எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றியே யாழ்ப்பாணச் சிறைச்சாலை இயங்கி வருகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்புனர்வாழ்வென்பது மனிதநேய அணுகுமுறைகளூடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும். அதுவே பயன்தரவல்ல வழிமுறையாகும். எல்லாவற்றிக்கும் மேலாக கைதிகளின் புனர்வாழ்விற்கென தனியான 'அரச திணைக்களம்' உருவாக்கப்பட்டு பொருத்தமானவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு ஒரு கிரமமான முறையில் புனர்வாழ்வு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அரச நிர்வாகத்தின் கடமையாகும்.

### ஏன் இந்த நிலை?

குற்ற நடத்தைகளுக்குப் பின்னால் உள, சமூக, பொருளாதாரக் காரணிகள் இருப்பது பொதுவானது. இருப்பினும் யாழ்ப்பாணத்தில் இக்காரணிகளோடு சில அரசியற் காரணிகளும் பின்னூட்டலாக இருக்கின்றன. இதன் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் குற்றச்செயல்களைக் தூண்டுபவர்கள் யார் அதற்கான நோக்கங்கள் என்ன என்பது ஆழமாகக் கண்டறியப்பட வேண்டும்.


யாழ்ப்பாணத்தில் பொலீஸாரினதும், இராணுவத்தினரதும் இருப்பைத் தொடர்ந்து பேணுவதற்காகவே இத்தரப்பினர் குற்றச் செயல்களைத் தூண்டுகின்றார்களா? யாழ்ப்பாணத்தில் ஒரு குழப்பமான சமூகநிலை தொடர்கிறது என்பதை உலகிற்கு காட்ட அரச தலைமைகள் முனைகின்றனவா? விடுதலைப் புலிகளின் யாழ். பிரவேசம் தான் குற்றச்செயல்களின் அதிகரிப்புக்குக் காரணம் எனக்காட்ட சிலர் திரைமறைவிலிருந்து செயற்படுகின்றார்களா? என்பதெல்லாம் விடை காண முடியாத கேள்விகளாகவே உள்ளன.


யாழ்ப்பாணத்தில் மீள் கட்டுமானங்களுக்கான திட்டங்கள் வகுக்கப்படுவதாகக் காட்டப்படுகின்ற அதேநேரம் குற்றநடத்தைகளைக் குறைப்பதற்கான திட்டங்களோ. நடவடிக்கைகளோ ஏன் இன்னமும் காத்திரமாக முன்னெடுக்கப்படவில்லை என்பது புரியாத மர்மமாகவே உள்ளது. இப்படியான அசமந்தப்போக்கு குற்ற நடவடிக்கைகளை அதிகரிக்கவே வழிசெய்யும்.


### ஊடகத்தின் செல்வாக்கு

குற்றச்செயற்பாடு தொடர்பில் ஒரு நபர் ஆரம்பத்தில் பெரும்பாலும் சந்தேகத்தின் பேரிலேயே கைது செய்யப்பட்டு நீதி விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுகிறார். ஆனால், இக்குற்றச் செயற்பாடுகளை வெளிப்படுத்துகின்ற ஊடகங்கள் தமது செய்திகளில் அவற்றைத் தீர்ப்பிடுகின்ற வகையிலேயே செய்திகளை வெளியிடுகின்றன. இந்த நிலையானது தமது செய்திகள் சூடாக, சுவாரஸ்யமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயோ என்னவோ தான் இவ்வாறு வெளியிடப்படுகின்றன. இவ்விடயத்தில் ஊடகங்களின் சமூக அக்கறைதான் என்ன, ஒருவர் ஒரு குற்றச்செயல் தொடர்பில் கைது செய்யப்பட்டதை வெளிப்படுத்துவதில் ஆர்வம் காட்டும் ஊடகங்கள், அவர் சில சமயம் நிரபராதியாக விடுதலையாகும்போது எப்போதாவது முன்னைய தமது செய்திக்காக குறைந்தபட்சம் வருத்தமாவது தெரிவித்தது உண்டா? இது, இங்கு குறிப்பிடப்படுவதன் நோக்கம் என்னவெனில், ஊடகங்களின் பொறுப்பற்ற செய்தி வடிவமைப்புக்களால் ஆளுமையில் சிதைவுற்ற சமூகப் பெறுமானங்களில் நம்பிக்கை இழந்த பலரை எமது ஆய்வின் வழி அறிந்தோம். கைதிகளின் மறுவாழ்வு தொடர்பில் செய்தி ஊடகங்கள் பொறுப்புணர்ந்து ஊடக தர்மத்துடன் செய்திகளை வெளியிடுவதும், கைதிகளின் மறுவாழ்வுக்கு உதவும் என்பதை ஊடகத்துறை சார்ந்தோர் உணர்ந்து கெள்ள வேண்டும்.

(வளரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகைப் பூ தமிழீழத்தின் தேசியப்பூ

தேசியத்தின், தேசத்தின் அடையாளச் சின்னமாக பூக்கள் இலங்குவது யாவரும் அறிந்ததே. அந்தந்த தேசியத்தினதும், தேசத்தினதும் வரலாற்று சமூக பண்பாட்டு கலாசாரத்தின் பால் பின்னிப்பிணைந்துள்ள தொடர்புபட்டுள்ள மலர்கள் தேசியப் பூக்களாக பிரகடனப்படுத்தப்பட்டு அந்தந்த தேசியங்களால் கௌரவிக்கப்படுவதும், தேசியக்கொடிக்கு சமமாக பேணப்படுவதும், தொன்றுதொட்டு நிலவிவரும் மரபு.

இந்த வகையிலேயே தமிழர்களின் தேசியப்பூவாக, தமிழீழத்தின் தேசியப் பூவாக கார்காலத்தில் மலர்ந்திடுவதும், தமிழீழ தேசியக்கொடியின் வர்ணங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதும், தமிழீழத் தேசியத் திருநாளாம் மாவீரர் நாள் வருகின்ற திங்களில் கொடிபரப்பி பூத்துக் குலுங்குவதும், தமிழீழ தேசமெங்ஙனும் பரவி முகிழ் விடுவதுமான கார்த்திகைப் பூ பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இறை நம்பிக்கைகளிலும் பூக்கள் பங்கு வகிக்கின்றன குறிப்பாக இந்துக்களினதும், பௌத்தர்களினதும் அன்றாட வாழ்வில் இறை வணக்கத்திற்கு பூக்கள் பயன்படுகின்றன. இஸ்லாமியர்களின் ஐதீகத்தின் பிரகாரம் வெள்ளை றோசாக்கள் மொகமட் ஆனவர் சொர்க்கத்திற்கு செல்கின்ற வழியில் அவரது இனிமைப்பாட்டின் வெளிப்பாடாக மலர்வதாகக் குறிப்பிடுவர். முருக ஆராய்ச்சியாளரும் கவிஞருமான அறிவுமதியவர்கள் பண்டைத் தமிழர்களின் போர்க்கடவுளாம் முருகனது மலரும் கார்த்திகைப் பூவே என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

பண்டைய கிரேக்கத்தில் புன்னை ஆனது அப்பலோ தெய்வத்திற்கு அர்ப்பணிக்கப்படுவதோடு புலமையாளர்கள் கௌரவிக்கப்படுவதற்கும் உரியதாக விளங்கியது. ஒலிவ் ஏதேன்ஸ் நகர தேவதைக்குரியதாகவும், மெய்வல்லுநர்களையும், களத்தினில் சாதனை படைத்தோரையும் கௌரவப்படுத்துவதற்கும் உரியதாக இருந்தது. ரோமானியர்கள்



தங்களுடைய புகழ்பூத்த தளகர்த்தர்களுக்கு சிந்தூர மரத்தின் இலைகளாலும் பூக்களாலும் வனையப்பட்ட கிரீடங்களைச் சூட்டினர்.

இராணுவச் சின்னங்கள், நாடுகள், நகரங்கள், மாநிலங்கள் என்பனவும் தத்தமது இருப்பை, கௌரவத்தை வெளிப்படுத்த தமது சமூக கலாசார பண்பாடு பின்னிப் பிணைந்துள்ள பூக்களைப் பயன்படுத்துகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஒவ்வொரு குடியரசிற்கும் ஒவ்வொரு பூ குடியரசுப் பூவாய் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மலர்கள் தரணியில் இலங்கிடும் தேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வழமை தொன்றுதொட்டு வேதாகமக் காலத்திலிருந்து நிலவி வருகின்றது. கிறித்தவ வேதாகம நூலின் பழைய ஏற்பாட்டிலிலே சாலமனின் பாடல் என்ற அத்தியாயத்தில் (Song of Solomon) பண்டைய எகிப்திய தேசத்தினை தாமரையும், நீலோற்பலமும் பிரதிநிதித்துவப்படுத்தின என்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

பண்டைய தமிழ் மன்னர்கள் தத்தமக்கென தனித்தனியான மலர்களைக் கொண்டிருந்தனர் என்பதை வரலாற்றிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. அதாவது சோழருக்கு அத்திப் பூவும், சேரருக்கு பனம் பூவும், பாண்டியர்க்கு வேப்பம் பூவும் தேசிய மலர்களாக இருந்துள்ளன.

மேற்குறிப்பிட்ட பூக்களின் மாலைகளையே அவர்கள் களமுனைகளுக்குச் செல்லும் போது அணிந்து சென்றதாக அ.தட்சிணாமூர்த்தி என்பார் யாத்த 'தமிழர் நாகரிகமும் பண்பாடும்' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்நூலில் குறுநில மன்னர்களும் தத்தமக்குச் சொந்தமாக மலர்கள் கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடப்படுகின்றது. வீரத்தில் சிறந்தவர்களாம் வேளிர் மன்னர்களில் ஆய் அண்டிரன் என்பார். சிறுபுன்னைப் பூவின் மாலையையும், ஏறைக்கோன் என்பார் காந்தள் மாலையும் அணிந்ததாக மேற்படி நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கே காந்தள் என்பது கார்த்திகைப் பூவின் பாரம்பரியத் தமிழ்ப் பெயராகும். இவ்வரலாற்றுச் சான்றாதாரத்தினூடாக கார்த்திகை மலருக்கும் தமிழர் வரலாற்றுக்கும் உள்ள தொடர்பு உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெட்டத்தெளிவாகின்றது. தேசத்தோடு மாத்திரமின்றி தேசத்தில் வாழுகின்ற மக்களின்

தமிழீழத் தேசியப் பூவாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கார்த்திகைப் பூவைப் பற்றிய மூலாதார விடயங்களை அறிவோம்.

கார்த்திகைப் பூவினை பண்டைத் தமிழ் இலக்கியங்களிலே காந்தள் என்றே அழைப்பார். ஒற்றை விதையிலைத் தாவரங்களில் வெங்காயக் குடும்பமாகிய லில்லி ஆசியே (Lili aceae) எனப்படும் வகையினைத் சேர்ந்ததாகும்.

இக்கொடியின் தண்டு பசுமையானது. பலமில்லாதது. இலைகளின் நுனிகள் நீண்டு சுருண்டு பற்றுக்கம்பிகள் போல பக்கத்திலுள்ள மரஞ்செடி முதலிய ஆதாரங்களைப் பிடித்துக்கொண்டு இந்தத்தண்டு 10-20 அடி உயரம் வளரும்.

கிளை விட்டுப் படரும் ஆண்டுதோறும் புதிய கொடிகள் நிலத்தினுள்ளே இருக்கும் கிழங்கிலிருந்து வளரும். கிழங்கு சாதாரணமாக இரண்டு பிரிவுள்ளதாக இருக்கும். 6-12 அங்குல நீளமும் 1-1.5 அங்குலத் தடிப்பும் உள்ளது. இது கலப்பை போலத் தோன்றுவதால், இதனைக் கலப்பை எனவும் அழைப்பர்.

கிழங்கின் ஒவ்வொரு பிரிவின் முனையிலும் புதிய கணு உண்டாகும். இலைகளுக்குக் காம்பில்லை எனலாம். 3 அங்குலம் தொடக்கம் 6 அங்குலம் வரையான நீளம். 0.75 அங்குலம் தொடக்கம் 1.75 அங்குலம் வரை அகலமிருக்கும். மாற்றொழுங்கில் அல்லது எதிரொழுங்கில் அமைந்திருக்கும். கணுவிடைகள் வளராமையால் வட்டவொழுங்கில் அமைந்திருப்பதுமுண்டு. இலை அகன்ற அடியுள்ள ஈட்டிவடிவில், நுனி கூராக நீண்டு பற்றுக்கொம்பு போலச் சுருண்டிருக்கும்.

பூக்கள் பெரியவை. இலைக்கக்கத்தில் தனியாக இருக்கும். அல்லது கிளைகளின் நுனியில் இலைகள் நெருங்கியிருப்பதால் சமதள மஞ்சரி போலத் தோன்றும். அகல் விளக்குப் போன்ற,

ஆறு இதழ் கொண்ட இப்பெரிய பூக்கள் (6-7 செ.மீ நீளம்) செப்ரம்பர் தொடக்கம் ஜனவரியிலும், மார்ச்சிலும் மலர்கின்றன. பூக்காம்பு 3-6 அங்குல நீளமிருக்கும். முனையில் வளைந்திருக்கும். 2.5 அங்குல நீளம், 0.3-0.5 அங்குல அகலம் கொண்டதாகும். குறுகி நீண்டு ஓரங்கள் அலைபோல நெளிந்திருக்கும்.

தளை அவிழ்ந்த மலர் ஏழு நாள்கள் வாடாமல் இருக்கும். இதழ்களில் நிறம் முதலில் பச்சை, பிறகு வெண்மை கலந்த மஞ்சள், பிறகு மஞ்சள், பிறகு செம்மஞ்சள், பிறகு துலக்கமான சிவப்பு (Scarlet), நீலம் கலந்த சிவப்பாக மாறிக்கொண்டு போகும்.

இதழ்கள் விரிந்து அகன்றோ, பின்னுக்கு மடங்கிக் கொண்டோ இருக்கும். கேசரங்கள் 6 அங்குலம், தாள் 1.5- 1.75 அங்குலம், மரகதப்பை 0.5 அங்குலம். முதுகொட்டியது, இங்குமங்கும் திரும்பக் கூடியது. சூலகம்: 3 அறையுள்ளது. சூல் தண்டு 2அங்குலம் ஒரு புறம் மடங்கியிருக்கும்.

பூவின் நிறம் இருவேறாக மாறுபடுவதால் இதனை வெண்காந்தள், செங்காந்தள் என்ற இரு வேறு வகைகளாக வருணிப்பார்கள். கிழங்கு பிரிந்து கணுக்கள் உள்ளதை ஆண்காந்தள் என்றும் கணுக்களில்லாததை பெண்காந்தள் என்றும் குறிப்பிடுவர்.

கார்த்திகைச் செடியின் கிழங்கு ஆயுர்வேதம், யுனானி முறைகளில் பலவிதமாகப் பயன்படுகின்றது. இக்கிழங்கில் காணப்படும் நச்சுப்பொருளான கொல்சிசைனே வைத்திய முறைகளில் பயன்படுகின்றது. மேற்கு வைத்தியத்திலும் கொல்சிசைன் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் இரு வைத்திய முறைகளிலும் கொல்சிசைசின் பயன்பாடு வித்தியாசப்படுகின்றது. தோலைப்பற்றிய ஒட்டுண்ணி நோய்களுக்கு இதனைப் பற்றுப் போடுவார்கள். தேள் கடிக்கும் இதனைப் இழைத்துப் போடுவதுண்டு. நேரடியாக இக்கிழங்கினை உட்கொள்ளின் நஞ்சாகும். சிறதளவு உட்கொண்டாலும் முடி உதிரும்.

காந்தள் என அழைக்கப்படும் கார்த்திகைத் திங்களில் முகிழ்விடும் இம்மலர்க் கொடி தமிழீழம் தவிர இந்தியா, சீனா, மலாக்கா தீபகற்பம், அயனமண்டல ஆபிரிக்கா முதலான பகுதிகளிலும் காணப்படும். இதன் பூ தீச்சுவாலை போலக் காணப்படுவதால் 'அக்கினிசலம்' எனப்படும். இதன் கிழங்கு கலப்பை வடிவமானதாக இருப்பதால் கலப்பை எனவும் 'இலாங்கிலி' எனவும் அழைக்கப்படும். இலைகளின் முனை சுருண்டு காணப்படுவதால் தலைச்சுருளி என்றும் அழைக்கப்படும். அவற்றால் இது பற்றி ஏறுவதால் பற்றியென்றும் அழைக்கப்படும். அவ்வாறு வளைந்து பற்றுவதால் கோடல், கோடை என்று அழைக்கப்படும். கார்த்திகை மாதத்தில் மலர்வதால் கார்த்திகைப் பூ என்றும் அழைக்கப்படுகின்றது. மாரிகாலத்தில் முதலிலேயே வனப்பாய்த் தோன்றுவதால் 'தோன்றி' என்றும் அழைக்கப்படும். சுதேச வைத்தியத்திலே இதனை 'வெண்தோண்டி' எனவும் அழைப்பர். இவ்வாறு தமிழ்மொழியில் பலபெயர்களால் அழைக்கப்படும்.

கார்த்திகைச் செடியானது வேலிகளிலும், பாதையோரங்களிலும், காட்டோரங்களிலும் கொடி படர்ந்து நிமிர்ந்து அழகிய விரல்கள் போலவும், சுடர்கள் போலவும் தோன்றும். இதனாலேயே இச்செடிக்கு மிக மேலான மாட்சிமை பொருந்தியது எனும் பொருளில் Gloriosa Superba என்ற பெயரில் அழைப்பர்.

கார்த்திகைப் பூவின் ஏனைய மொழிப் பெயர்கள் வருமாறு: சிங்களம்: நியன்கல, சமஸ்கிருதம்: லன்கலி, இந்தி: கரியாரி, மராட்டி: மெத்தொன்னி

தாவரவியற் பெயர்: லல்லி ஆசியே குளோறி லில்லி (Liliaceae Glory lili)

தேசத்தின் பூவாம் கார்த்திகைப் பூவினை இனிவரும் காலங்களில் தேசிய நிகழ்வுகள் அனைத்திலும் அணிந்து தேசியமாண்பினை வெளிப்படுத்துவோம். இல்லங்கள், பொதுக் கூடங்கள், வாணிப மையங்கள், கல்விச்சாலைகள் என எல்லாவிடங்களிலும் கார்த்திகைச் செடி வளர்த்துப் பேணி கார்த்திகைப் பூவால் தமிழர் தேசமதை நிறைத்திடுவோம். ▼

தொகுப்பு:வீரநாதன்
நன்றி: தமிழ்நாதம்

## சுவர்

ஓர் வெய்யில்

சுவர்
அழுக்கூட நீரின்றி
வரண்டிருக்கிறது

ஈரச்சுவர் காய -
ஏறிய நத்தைகள்
உதிர்ந்தன.

மூகம் மூடிப்
படிந்திருந்த
பாசி கருகிப்போக
குருவிகள் குடிபெயர்ந்தன.

அழுத்தமாய் உரசி
விலாமொய்த்த ஈக்களை
விரட்டின மாடுகள்

எங்கிருந்தோ கொத்திவந்த
எச்சில் உணவுவைத்து
பங்குபோட்டுத்தின்று
எச்சமிட்டன
காக்கைகள்

ஏளனமாய் நோக்கி
எச்சநீர் விசிறின
தெருநாய்கள்

இடுக்குகளில் புகுந்து
இம்சை பெருக்கின
எறும்புகள்
வெண்கட்டி கொண்டு
விரசம் கீறிப்போயின
சில விரல்கள்.

தெருவோரப் பையன்கள்
வெற்றுப்போத்தல் பொறுக்கி
வீசியெறிய
பட்டுச்சிதறியது
சுவர் மனசுபோல்

சுவர்
கனத்துக்கனத்துக்
காத்திருக்கிறது...

என்றாவது
மழைவரும்;
பாசிபெருகும்;
நத்தைகள் நாடிவரும்;
குருவிகள் கூடும்;
பள்ளிப் பிள்ளைகள்
ஆசையாய் ஸ்பரிசிப்பார்கள்...

என்றாவது
மழைவரும்...

~ சவிதா.
யாழ். மருத்துவ பீடம்

## நான் தேடும் களம்

உண்மையான விருப்பங்களை
திறந்த வெளி நட்புக்களை
இந்த உலகில் எங்கே
பெற முடியும்?
நண்பனிடமா?
அவன் கூட மனிதனில்லை
நண்பியிடமா?
உற்றம் சுற்றமிடமா?
அவர்களும் அப்படித்தான்
அந்தோ!.........
சிரிப்பொலி வானில் முழங்க
அதிர்கிறது........
அந்த பெருவெளி
'அரங்கு' ...........அது
என் சுதந்திரக் களம்
நான் தேடும் களம்.

~ யாழவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"களம்" என்ற சொல் எமக்கு மிக மிக பழக்கப்பட்ட சொல். ஆடுகளம் என்றதும் கிரிக்கெட் மட்டுமே எம்மில் பலருக்கு ஞாபகம் வரலாம். நாங்கள் மிகச் சிறந்த மறதிக்காரர்கள் தானே! இரண்டுவருடகால 'போர்முழக்க ஓய்வோடு' போர்க்களங்களின் புயல் சன்னதங்களும் அகதி அலைச்சல்களும் துப்புரவாக மறக்கப்பட்டாயிற்று. துன்பங்களை மறந்து மனமகிழ்ச்சியோடு இருப்பது நல்லதுதானே என்கிறீர்களா? மகிழ்ச்சியோடு இருப்பதை தனிப்பட்டரீதியில் வைத்துக்கொள்க. வரலாற்றுத் துன்பங்களையும் துயரங்களையும் வரலாற்றுத் தவறுகளையும் மறக்கவே முடியாது. சிலவேளைகளில் மன்னிக்கவும் முடியாமற் போய்விடுகின்றது.

சண்டைக் களங்களில் மடிந்த போராளிகளின் கல்லறைகளில் சத்தியமெடுத்துவிட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல்களத்தில் இறங்கியுள்ளது.

இதுவரை சண்டைக் களங்களுக்குச் செல்லும் புலிகளே தமது மடிந்த சக சாதனையாளர்களின் கல்லறைகளில் உறுதியுரைத்துப் புறப்பட்டனர் என்பதை அறிந்துள்ளோம்.

ஏப்ரல் இரண்டாம் திகதி தேர்தல் களமாடவுள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த 'அரசியல் போராளிகளான' மாவை சேனாதிராசா, நடராஜா இரவிராஜ், பொன்னம்பலம் கஜேந்திரகுமார், எம்.கே.சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன், சி.வி.கே.சிவஞானம், ஈழவேந்தன் உள்ளிட்ட ஏனைய அனைவரும் ஒரு புதிய திருப்புமுனையின் உந்து சக்திகளாகப் பார்க்கப்பட வேண்டியவர்கள்.

வட அயர்லாந்தின் ஐ.ஆர்.ஏ. அமைப்பின் அரசியல் – இராணுவப் பரிமாணம், சின்பெயின் அமைப்பின் அரசியல் வேலைத்திட்டத்தினால் பூரணத்துவம் கண்ட சில கட்டங்கள் உண்டு. ஒப்பீட்டுக்கு முழுவதுமான பொருத்தப்பாடு இல்லையெனினும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒரு 'சின்பெயினாக' தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒப்பிட்டுப் பார்க்கப்படலாம்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் மௌன வணக்கம் செய்தபின்னர், தமிழரசின் தந்தை அமரர் செல்வநாயகம் அவர்களின் தூபிக்கும் வணக்கம் செலுத்திவிட்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் யாழ்.செயலகத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

பல தசாப்தகால அரசியல் வாழ்வில் தமிழர் உரிமைக்காகக் குரல் கொடுத்து அகிம்சா ரீதியில் போராடிய தந்தை செல்வா 'தமிழினத்தைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்' என்று சொல்லியதுடன், எமது இளைஞர்கள் எதிர்காலத்தில் இனத்தின் உரிமைகளை வாயினால் கேட்கமாட்டார்கள் என்றும் எச்சரித்திருந்தார். இனப்பிரச்சினை இனப்போராக வெடித்தபோது தமிழ் இளைஞர்கள், சிங்கள இளைஞர்கள் எனப் பல்லாயிரம் பேர் போர்க்களங்களில் மடிந்தனர். சிங்களப் பேரினவாதம் பூதாகரமானபோது தமிழ்த் தேசியவாதம் 'ஆயுதப்போர் வடிவத்தை' தனது விடுதலை யுக்தியாக்கிக் கொண்டது. அதன் வழி உயிர்விட்ட புலிகளின் சமாதிகள் மீதும், அரசியல் தீர்க்கதரசி செல்வாவின் தூபிமீதும் அஞ்சலித்து, அதே தந்தை செல்வாவின் தாய்க் கட்சியான தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தேர்தல் களத்தில் குதித்துள்ளமை, சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள் மீது இரட்டித்த பொறுப்புணர்ச்சியை, 'வகை கூறுதலை' (Respondibility and Accountability) வரலாற்றுக் கட்டாயமாக நிர்ப்பந்தித்துள்ளது.

தந்தை செல்வாவின் படிப்பினைகளிலிருந்து கூர்ப்படைந்த, தமிழ்த்தேசிய வாதத்தின் காவல் போர், தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது – அதன் வழி முழுத்தமிழினத்தின் தோள்களின் மீது சுமத்தப்பட்டு வந்தது. இனியும் தொடர்ந்து சுமக்கும் நிலை தொடருமா? உரிமைகளுடன் கூடிய சமாதானத் தீர்வு கிடைக்குமா? எல்லாம் கேள்விகளே!

சரியோ, பிழையோ – இரண்டுக்கும் அப்பால் 'தூய அரசியல்' நடத்திய தந்தை செல்வநாயகத்தின் தமிழரசுக்கட்சியும் அவரது 'வீடு' சின்னமும், வரலாற்றுப் பரிணாமம் (கூர்ப்பு) பெற்றுள்ள புலிகளின் அரசியல் இராணுவவியல் (Politico Militarism) நகர்வில் பயன்படவேண்டியதாயிற்று என்பது உண்மையில் ஒரு வரலாற்று வினோதம்தான். நிச்சயமாக இது ஒரு வரலாற்று இயங்கியலின் பின்னடைவு அல்ல. சர்வதேச மயப்பட்ட இலங்கை இனப் போரில், தமிழர் தமக்கு என மிகத்தெளிவோடு தெரிந்தெடுத்த 'அரசியல் யுக்தி'.

# தேர்தல் களமாடுவோர்




நாடாளுமன்ற அரசியலில் நம்பிக்கையிழந்து ஆயுதப் போராட்டம் மூலமே உரிமைகளைப் பெற முடியும் என்று புறப்பட்ட தமிழ் இளைஞர்கள் பல இயக்கங்களாக, அமைப்புக்களாக பிளவுபட்டு நின்று மோதினர்.

1987 இலங்கை இந்திய உடன்படிக்கையையடுத்து விடுதலைப் புலிகளைத் தவிர ஏனைய அனைத்துப் போராளி இயக்கங்களும் 'தேசிய ஜனநாயக நீரோட்டத்தில்' இணைந்தன. பின்னர் அவை நாடாளுமன்ற அரசியலில் மீண்டும் நம்பிக்கை வைத்தன. அதேவேளையில் போரியல்வாத அரசியல் (அல்லது அரசியலே போரியலாக) என்று கூறுமளவுக்கு முனைப்போடு – சர்வதேச சக்திகள் மற்றும் சில உள்ளூர் சக்திகள் எவற்றினதும் சரி கூறல்கள், பிழை கூறல்கள் அனைத்துக்கு மத்தியிலும் – நின்று நீடித்த அரசியல் இராணுவ இயக்கமான (Politico Military Movement) விடுதலைப் புலிகள், இன்றைய சர்வதேச அரசியல் சூழலின் அப்பட்டமான யதார்த்தத்தில் நன்கு தெளிவு பெற்றவர்களாக, தமக்கான அரசியல் வேலைத்திட்டத்தில், இனப்பிரச்சினைக்கான எதிர்கால யதார்த்தத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமக்கான இயல்தகவையும் தகைமையையும் அதிகரித்துக்கொள்ளவும் மேலும் ஒழுங்குபடுத்திக் கொள்ளவும் ஒப்பீட்டளவில் பொருத்தமான 'அரசியல் கதாபாத்திரமாக' தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைத் தேர்தல் களத்தில் இறக்குவது மிகச் சாலப்பொருத்தமாகும் என்ற அபிப்பிராயம் யாழ்ப்பாணத்தவரிடம் உள்ளது.

மிகச் சிக்கலான அரசியல் பாரம்பரியங்களைக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி – ஜே.வி.பி. தலைமையிலான கூட்டும், ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டும் எதிரும் புதிருமான சமபலப்போக்கோடு தென்படுகின்றன. மலையக அரசியல் சக்திகள், முஸ்லிம் அரசியல் சக்திகள் என்பனவற்றின் ஆதரவுத்தளங்கள் மேற்படி இரு பிரதான சிங்களக் கூட்டணிகளின் நிலையை பாதிக்கும். எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைக்கும் ஆசனங்களால் அது ஆட்சியாளரை ஆக்கும் சக்தியாக – அதாவது King Maker ஆக – நிச்சயம் விளங்கப் போகின்றது எனச் சில பிரபல ஊடகக்காரர்கள் எதிர்வு கூறத் தொடங்கியுள்ளனர்.

அவ்வாறு நடைபெறாமல், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி. – நுஆ – அதாவுல்லா அணி என்பனவற்றின் கூட்டு வெற்றிப்பாதையில் நடைபோட்டால், அக்கூட்டுக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் தான் பெறும் எந்த அளவு ஆதரவாக இருந்தாலும் அந்த ஆதரவை அக்கூட்டுக்கு வழங்கும் தறுவாயில் 'தாறுமாறான' ஒன்றுக்கு ஒன்று முரண்படுகின்ற அரசியல் சக்திகள் சேர்ந்து அமைக்கப்போகும் ஆட்சியாக அது அமையும். முதலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய இரண்டு கட்சிகள் தொடர்பில் அவர்கள் செய்துகொண்ட உடன்படிக்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு வழிவகையில், அடிப்படையான வேறுபாடுகளை எழுத்து மூலமாகவே வெளியிட்டுள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அதிகாரப்பகிர்வு (Devolution of Power) மூலம் தீர்வு என்கிறது. ஜே.வி.பி. அதிகாரப்பரவலாக்கம் (Decentralization of Power) மூலம் கிராமமட்டத்திற்கு அதிகாரப்பரவலாக்கம் செய்வதன்மூலம் தீர்வு என்கிறது. மேலும் கடந்தவாரம் தனியார் தொலைக்காட்சியொன்றில் நேரடி நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்ட ஜே.வி.பி யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் (தமிழர்), விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான இடைக்கால தீர்வுயோசனைகளை தமது கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறியுள்ளார்.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி – ஜே.வி.பி. கூட்டில் பின்பு இணைந்த திருமதி பேரியல் அஷ்ரப்பின் நுஆ (Nua) வடக்கும் – கிழக்கும் இணைந்த ஒரு தமிழ்மொழிவாரியான அதிகார அலகுக்குள் முஸ்லிம்களுக்கான ஒரு பொருத்தமான தீர்வு அமையவேண்டும் என்கிறது. ஆனால், இறுதிநேரத்தில் அக்கூட்டில் இணைந்த முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்த அதாவுல்லா அணி, வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் ஒன்றாக இணைக்கப்படாமல் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கான தீர்வு வடிவம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதையே வலியுறுத்தியது.

இம்மாதிரியான முரண்களத்துக்குரிய ஸ்ரீலங்கா சு.க. – ஜே.வி.பி. – பேரியல் – அதாவுல்லா கூட்டுக்கு வெற்றிநடை போடும் வாய்ப்பை மேலும் கூட்டுவதற்கு தன்னால் முடியும் என்று நம்பும் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் தனது தீர்வுயோசனையை சுருக்கமாக 'மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி' எனப் பல வருடங்களாகக் கூறிவருகின்றார். மேற்படி கூட்டில் மாநில சுயாட்சி அடிப்படையிலான தீர்வுக்கு பல்முனை எதிர்ப்புத் தீவிரமாக விளையும். மேலும் 'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி' என்ற தீர்வுவடிவம், ஒற்றையாட்சி அரசியல் யாப்பு மாற்றப்பட்டு – அதாவது தற்போதைய நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை யாப்பு மாற்றப்பட்டு ஒரு சமஷ்டி யாப்பு நிறைவேற்றப்பட்டாலேயொழிய சாத்தியப்படப்போவதில்லை.

ஜனாதிபதி பதவியில் இரண்டு முறை அமர்த்தப்பட்ட ஒருவர், மீண்டும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நிற்கமுடியாது என்பதும், ஜே.வி.பி. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும் என்று கூறுவதனாலும் அரசியல் யாப்பு மாற்றப்படுவதை – இக்கூட்டு ஆட்சியமைத்தால் – விரும்புவர். ஆனால், மாநிலத்தில் ஒரு சுயாட்சி தமிழருக்கு வழங்கும் வகையில் வடக்கு – கிழக்கு ஓர் அதிகாரப் பகிர்வு அலகாக மாற்றப்படக்கூடிய ஒரு சமஷ்டி யாப்பு அமைக்கப்படுவதற்கு ஜே.வி.பியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தீவிர அங்கத்தவர்களும் அனுமதிக்கப் போவதில்லை. ஜே.வி.பியை பொறுத்தவரை யாப்பு மாற்றம் என்பது ஒற்றையாட்சி முறைமையை மேலும் மேலும் இறுக்கமடையச் செய்யக்கூடியவகையில் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற அபிப்பிராயத்தையே கொண்டுள்ளது.

சிலவேளை இந்தியாவின் அழுத்தத்தால் இலங்கை – இந்திய உடன்படிக்கையின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமையை ஜே.வி.பி. ஏற்க இணங்கினாலும், அதாவுல்லா அணி வடக்கு – கிழக்கு மாகாணங்களைப் பிரித்தே, முஸ்லிம்களுக்கு ஒரு தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற பிடிவாதப் போக்கையே கடைப்பிடிக்கும். இக்கூட்டு ஆட்சிக்கு வரும் நிலையில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரமும், பிரதமர் தலைமையிலான நாடாளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரமும் இணங்கிச் செயற்பட முடியும் என்ற சாதகமான நிலை உருவாகுமெனினும், அச்சாதகமான நிலை ஒற்றையாட்சி முறையை மேலும் பலப்படுத்துவதற்கும் இந்தியப் பின்னணியுடன் புலிகள் மீது அழுத்தங்களையும் நிர்ப்பந்தங்களையும் ஏற்படுத்தவுமே பயன்படலாம், ஆரம்பத்தில் சர்வதேச பொருளாதார உதவிகளைப் பெறும் நோக்கில் புலிகளுடனான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு தொடங்கப்பட்டாலும் அது 'இழுபட்டு' முறிந்து போகும் சூழலே எழும்.

மீண்டும் போர் வெடித்துவிடுமெனில், அது இந்த இலங்கைத்தீவு முழுவதையும் இரத்தத்தில் மூழ்கடித்துவிடும். இலங்கையின் தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் எதுவுமே போரை விரும்பவில்லை.

**- டன்ஸ்ரன் லூயிஸ் -**

அவ்வாறானால் ரணிலின் ஐ.தே.கட்சியும் அதன் கூட்டுக் கட்சிகளும் ஆட்சிக்கு வந்தால் ஒரு நிரந்தரத் தீர்வு இனப்பிரச்சினைக்கு சாத்தியமாகுமா? நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, இந்தியக் காரணிகள், ரணிலின் யுக்திகள் என்பன எவ்வளவு தூரம் நிரந்தரத் தீர்வுக்கு இட்டுச் செல்லும் என்பதும் கேள்விக்குரியதே.

ஆனால், நிரந்திர சமாதானமோ, அரசியல் தீர்வோ இனப்பிரச்சினைக்குக் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையை இத்தேர்தல் தரவில்லையென்றாலும், என்றுமில்லாத வகையில் இன்று சர்வதேசமயப்பட்டுள்ள எமது பிரச்சினை தொடர்பில், உலக அபிப்பிராயம் என்பதில் தமிழ் மக்களின் ஒற்றுமையான ஏகோபித்த குரல் ஓங்கும் வகையல் ஏகோபித்த பிரதிநிதித்துவத்தை ஸ்திரப்படுத்தும் வகையில், வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் வாக்குரிமையை பயன்படுத்தக்கூடிய 'உகந்த அரசியல் சூழல்' பிறந்துள்ளமை நன்மை நோக்கியதாகும். ❑



இவர்கள் [illegible] தெரிவு செய்வார்களோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிச்சிங்கள அரசை நிறுவ ஜனாதிபதி முயல்கின்றாரா?

**1956** ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவே தனிச் சிங்களமயக் கோரிக்கையை முன்வைத்துத் தேர்தலில் போட்டியிட்டார்.

"1956 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தற்சமயம் அவரது மகளான ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து தனிச் சிங்கள அரசை ஸ்தாபிக்க முயல்கிறார்.

"இவ்விதம் ஒரு நிலை ஏற்படுமானால் அது முழுநாட்டுக்குமே பேரழிவாக அமையும். ஆதலால் எதிர்வரும் தேர்தல் முடிவுகளில்த்தான் தமிழ் மக்களின் எதிர்கால வாழ்க்கை தங்கியுள்ளது"

இப்படிக் கருத்து வெளியிட்டிருப்பவர் தமிழ் அரசியல்வாதியோ அல்லது தமிழ் கல்விமான் ஒருவரோ, அல்லர்.

தென்னிலங்கையைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஐக்கிய சோசலிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய என்ற சிங்கள அரசியல்வாதி.

"வடக்கு – கிழக்குப் பிரதேசங்களில் வாழும் மக்களின் உரிமைகளை ஏற்க மறுக்கும் கட்சிகள் வடக்கு – கிழக்கில் போட்டியிடுவதற்கு எதிராகவே யாழ்ப்பாணத்தில் போட்டியிடுகின்றோம்'' என்று அவர் கூறுகின்றார்.

விடுதலைப் புலிகள் முன்வைத்த தன்னாட்சி அதிகாரம் உள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான வரைவை வரவேற்ற சிங்களக் கட்சி தமது கட்சி மட்டுமே என்றும் அவர் கூறு கின்றார்.

யாழ்ப்பாணத்தில் தமது கட்சி சார்பாக வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்காக இங்கு வந்திருந்த சமயம் மேற்கண்ட கருத்தை அவர் முன்வைத்தார்.

தேர்தலில் வெற்றி பெற்று ஆசனம் ஒன்றைப் பெறும் நோக்கத்துக்காக மட்டுமே அவர் இக் கருத்தை வெளியிட்டதாகக் கருதமுடியாது.

இவரைப் போன்று வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்காக யாழ்ப்பாணம் வந்த தெற்குக் கட்சிகளின் பிரதிநிதிகளும் வித்தியாசமான கருத்துக்களை வெளியிட்டனர்.

தெற்கில் உள்ள பிக்குகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் 'தேசிய ஹெல உறுமய' என்ற கட்சியின் உறுப்பினர்களும் வேட்புமனுத்தாக்கல் செய்ய யாழ்ப்பாணம் வந்தனர்.

அந்தக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத்தில் தலைமை வேட்பாளராகப் போட்டியிடும் வண. விதாரநதினியோ மோறந்ததேரர், "இந்த நாட்டில் தெற்கு மக்களும் வடக்கு மக்களும் சமாதா



னத்தை விரும்புகிறார்கள். சமாதான சூழல் தொடர்ந்தால்தான் நாடு அழிவில் இருந்து தப்பும். எனவே, சமாதான முயற்சிகள் தொடரவும் அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சை ஆரம்பிக்கவும் ஆதரவு வழங்குவேன்'' என்று கருத்து வெளியிட்டார்.

புதிய இடது சாரி முன்னணி, சுயராஜ்ய கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், நவ்ருஷ மக்கள் கட்சி, போன்ற தெற்கைத் தளமாகக் கொண்ட கட்சிகள் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுகின்றன. அதற்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய அந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வந்தனர்.

இந்த நாட்டில் சமாதானம் வேண்டும். விடுதலைப் புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டும். மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கக் கூடாது – இப்படியான கருத்துக்களை அவர்கள் வெளியிட்டனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க – ஜே.வி.பியுடன் சேர்ந்து தனிச்சிங்கள அரசை அமைக்கப் போகிறார் என்று ஐக்கிய சோசலிசக் கட்சிச் செயலாளர் தெரிவிக்கும் கருத்து கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய கருத்தாகும்.

தமிழ்மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய நிலையை உருவாக்கும் அரசுடன் பேசுவோம் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அண்மைக்காலமாகக் கருத்து வெளியிட்டு வருகின்றார்.

தனிச் சிங்கள அரசு உருவாக்கும் ஜனாதிபதியின் திட்டம் நிறைவேறுமானால், விடுதலைப் புலிகள் அந்த அரசுடன் பேசுவார்களா? யுத்த நிறுத்தத்தை முறித்துக் கொண்டு யுத்தத்துக்கு முகம் கொடுப்பார்களா? என்பதுதான் இப்போது எழுந்துள்ள கேள்விகளாகும்.

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியோ ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியோ அறுதிப் பெரும்பான்மை பெறமாட்டாது என்றும், தமிழ்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் தான் எவரும் ஆட்சி அமைக்க முடியும் எனவும் கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில் தமிழ்க் கூட்டமைப்பின் நிலை என்ன என்று கேள்விகள் எழுகின்றன.

"தமிழ்க் கூட்டமைப்பு எந்த அரசுடனுடன் சேர மாட்டாது. நிபந்தனைகளின் அடிப்படையில், எதிர்க்கட்சி வரிசையில் இருந்து, தமிழ்மக்கள் நலன் பேணும் வகையில் ஆதரவு வழங்குவோம்'' என்று தமிழ்க் கூட்டமைப்பின் இணைப் பாளரும் யாழ்.மாவட்ட வேட்பாளருமான க.சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்து வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டபின் கூட்டமைப்பினர் யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இக் கருத்தைத் தெரிவித்தார்.

★ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வேண்டும் –

★ யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் –

★ வடக்கு – கிழக்கு மக்களின் அவசர மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும் –

★ தமிழ்மக்களுக்கு நிரந்தரத் தீர்வை விரைவாக்க வேண்டும்.

**- குகா -**

இத்தகைய நிபந்தனைகளை முன்வைத்து அரசுக்கு வெளியில் இருந்து தமிழ்க் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும்.

கடந்தகால அனுபவங்களைப் பாடமாக வைத்துக் கூட்டமைப்பினர் கால எல்லைகளையும் விதித்து, தமது காய்நகர்த்தலை முன்னெடுக்கப்போகிறார்கள்.

வடக்கு – கிழக்கில் எழுச்சி பெற்று நிற்கும் தமிழ் சமூகமா? தெற்கில் எழுச்சி பெற்று நிற்கும் சு.கட்சி – ஜே.வி.பி. கூட்டா இந்தத் தேர்தலில் தமது ராஜதந்திர நகர்த்தலில் வெற்றிபெறப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ☆

# தலைவலி நிவாரணி

**சா**தாரணமாகத் தலைவலி எல்லோருக்குமே வரும் ஒரு நோய்.

நாம்தான் போர்ச் சூழலில் பதற்றங்களுடனேயே வாழ்பவர்களாயிற்றே எமக்குத் தலைவலி வருவதற்குக் காரணம் சொல்லவா வேண்டும்.

உடல்ரீதியான பிரச்சினைகள். வேலைப் பளு. மன அழுத்தம். சுற்றுப்புறச்சூழல். சமூக குடும்ப நெருக்கடிகள் என்பன தலைவலி வருவதற்கு முக்கியமான காரணங்கள் என்று சொல்லப்படுகின்றது. ஆனால். இவை மட்டுமேதான் காரணங்கள் என்று சொல்லமுடியாது.

அவ்வப்போது இயல்புக்கு மாறாக நீங்கள் பாதிக்கப்படும்போது எல்லாம் தலைவலி எட்டிப்பார்க்கும். எல்லா வேலைகளிலுமிருந்து சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டால் சிலருக்குத் தலைவலி குணமாகிவிடும். சிலருக்கு தேநீர் அல்லது கோப்பி அருந்தினால் தலைவலி குறைந்தது போன்று இருக்கும். இன்னும் சிலருக்குச் சாதாரண தைலம் மட்டுமே தலைவலியைக் குறைக்கப் போதுமானது.

இது எதற்கும் மசியாமல் சிலரைத் தலைவலி பாடாய்ப் படுத்தும்போது பார்ப்பதற்கே பாவமாக இருக்கும். ஒற்றைத் தலைவலி வந்து அவதிப்படுபவர்களும் பலர் இருக்கிறார்கள். இது பொதுவாகவே எந்த மருந்து மாத்திரைக்கும் உடனடி நிவாரணம் தராமல் அவர்களை வேதனையில் துடிக்க வைக்கும்.

மிக்ரெய்ன் (Migraine) எனப்படும் ஒற்றைத் தலைவலி அல்லது தீவிர தலைவலிக்கும் முழுமையான தீர்வு மருத்துவத்தில் இல்லை. சிலருக்கு மருந்து மாத்திரைகளால் அவ்வப்போது மட்டுமே வலி நிவாரணம் கிடைக்கும்.

இத்தகைய 'மிக்ரெய்ன்' - ஒற்றைத் தலைவலியால் - பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஹைவெல் எட்வேட்ஸ். சிறு வயது முதல் 'தலைவலி' வேதனையை அனுபவித்துவரும் ஹைவெல் இதற்குப் பார்க்காத மருத்துவம் எதுவுமே இல்லை என்று சொல்லலாம். அந்த அளவுக்கு அவர் பல்வேறு மருத்துவ முறைகளையும் பயன்படுத்திப் பார்த்துள்ளார். ஆனால். குணமடைவதாகக் காணவில்லை.

இந்த மருத்துவர்களையும் விஞ்ஞானிகளையும் நம்பிப் பயன் இல்லை என்று நினைத்தாரோ என்னவோ ஹைவெல் தனது நோய்க்குத் தானே சிகிச்சை முறை ஒன்றைக் கண்டுபிடிக்கும் ஆய்வில் ஈடுபட்டார். அதற்குப் பயனும் கிடைத்தது.

'குளிர் சிகிச்சை' (Colk Theraphy) முறை மூலம் தலைவலிக்கு நிவாரணம் காணமுடியும் என்று தனது அனுபவ ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளார் ஹைவெல். இதற்காக அவர் உருவாக்கியுள்ள ஒரு தொப்பியின் பெயர் 'Migra cap'. தலைவலி ஏற்படுபவர்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கும் தொப்பி இது.



தனது 'மிக்ரா தொப்பி'யுடன் ஹைவெல்

தலை மற்றும் கண்களை மறைக்கும் விதத்திலான இந்தத் தொப்பி துணியால் செய்யப்பட்டது. இதற்குள் மருந்து கலந்த 'ஜெல்' அடைக்கப்பட்டுள்ளது. இந்தத் தொப்பியைப் பயன்படுத்தாத நேரத்தில் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவேண்டும்.

தலைவலி ஏற்படும்போது 'ஜில்' என்று இருக்கும் தொப்பியை அணிந்து கொள்ளவேண்டும். இந்தத் தொப்பியின் குளிர்ச்சி தலைப்பகுதி முழுவதும் பரவி சிறிது நேரத்தில் தலைவலியைக் குணமாக்குகிறது.

ஒற்றைத் தலைவலியால் பாதிக்கப்படுபவர்களுக்கு இந்த 'மிக்ரா தொப்பி' [illegible] பரிசோதனைகள் [illegible]ன. இதில் 81 சதவீதம் பேருக்குத் தலைவலி குணம் அடைந்தது. ☆

# நவீன சக்கர நாற்காலி!



உடல் ஊனமுற்றோர் மற்றும் வயதானவர்கள் பயன்படுத்தும் சக்கர நாற்காலிகள் பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். இதில் சிலவற்றில் மோட்டார்கள் பொருத்தப்பட்டிருக்கும். ஆனால், அவற்றின் இயக்கம் மெதுவாக இருக்கும். சமதரையில் மட்டும் செல்லும் வகையில் அமைந்திருக்கும்.

உடல் ஊனமுற்றவர்களும் முதியோரும் எல்லாப் பகுதிகளிலும் அதாவது வீடு, சமதளம், சாலை, புல்வெளி, ஏற்றம், இறக்கம் போன்ற பகுதிகளில் பயன்படுத்தும் வகையில் நவீன சக்கர நாற்காலி ஒன்றை இங்கிலாந்து நாட்டின் கிளாஸ்கோ பல்கலைக்கழக மாணவர்கள் வடிவமைத்துள்ளனர். சொகுசான இருக்கை, மணிக்கு 4.8 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் திறன் கொண்ட மோட்டார். ஹைட்ராலிக் பிரேக் வசதி, எல்லாத் தரைப் பகுதிகளிலும் செல்லும் திறன் கொண்ட சக்கரத்தின் இயக்கம் போன்றவை இந்தச் சக்கர நாற்காலியின் சிறப்பம்சமாகும்.

கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் என்ஜினீயரிங் படிக்கும் மாணவர்கள் குழு இந்த சக்கர நாற்காலியை வடிவமைத்துள்ளது. எடை குறைந்த அலுமினியத்தால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த நவீன சக்கர நாற்காலி ஊனமுற்றவர்கள் மற்றும் முதியோர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org